# தமிழரசு

1-10-1979 50 காசு

அரிசன நலச் சிறப்பிதழ்








பேரறிஞர்
அண்ணா
பிறந்த நாள்



முத்தமிழ்
விழா
(சென்னை)
15-9-1979









# தீண்டாமை கொடிய பாவம்

தீண்டத் தகாதவர்களென ஒரு வகுப்பைத் தனியாகப் பிரித்து வைத்திருக்கிறோம். அது இந்து மதத்திற்கே ஒரு தனிப் பெரும் அவமானச் சின்னமாய் இருந்து வருகிறது.

தீண்டாமை என்பது ஒரு கொடும் பாவமாகும். கொடூரமான ஒரு குற்றமாகும். தீண்டாமை என்கிற இந்தப் பாம்பை உரிய காலத்தில் கொல்லாவிட்டால் அது இந்து மதத்தையே தின்று விழுங்கிவிடும்!

தீண்டாமை இன்னும் உயிர் வாழ்ந்தால் இந்து மதம் இறந்து போகும்.

தீண்டாமை என்பது இந்து மதத்தின் ஓர் அம்சமாக இருந்தால் என்னை இந்துவெனச் சொல்லிக் கொள்ள மறுத்திருப்பேன்.

தீண்டாமை என்கிற அதி கோரமான கொள்கையை நிலை நிறுத்துவதற்காகச் செத்துப்போன புராதன சாஸ்திரங்களையும், பழக்கவழக்கங்களையும் புதை குழியிலிருந்து இழுத்து வந்து காட்டுகிறார்கள்.

சாஸ்திரிகள் அனைவருமே திரண்டு என்னை எதிர்த்தாலும், தீண்டாமை இந்து மத அனுஷ்டானத்தில் சேர்ந்தது என்று அவர்கள் சொல்லை முற்றிலும் தவறு எனக் கோபுர உச்சியின் மீது ஏறி நின்று பகிரங்கமாகப் பறை சாற்றவும் தயங்கமாட்டேன்.

வேதம் உபநிஷத்துகள், பகவத்கீதை, ஸ்மிருதி போன்ற சாஸ்திரங்கள் முதலானவையெல்லாம் தீண்டாமையை ஆதரித்து அதற்குத் தெய்வீக ஆதாரத்தைக் காட்டித் தெளிவாக வற்புறுத்துமேயானால் என்னை இந்து மதத்தில் பிடித்து வைத்துக் கொள்ள இந்தப் புவியில் எந்தச் சக்தியாலும் முடியாது. அழுகிய ஆப்பிள் பழத்தை எப்படித் தூரத் தூக்கியெறிந்து விடுவேனோ அதுபோல நான் இந்து என்பதையும் தூரத் தூக்கி எறிந்து விடுவேன்.

தீண்டாமை என்பது இந்து மதத்தின் ஒரு அம்சமல்ல; அது இந்து மதத்தின் ஒரு களங்கம் ஆகும்!

... தகாதவர்களையும், அரைக் ...டிகளெனச் சொல்லப்படுகிறவர் க... பார்த்து வருந்தி, அவர்களுக்குக் காலங் கடந்தேனும் நியாயம் வழங்கி நாம் பிராயச்சித்தம் தேடாவிட்டால், நாம் இழைக்கும் கேடுகளையெல்லாம் அவர்கள் எதிர்க்கத் தொடங்கிவிடுவார்கள்.

தீண்டாமை என்னும் விஷமும் ஏற்றத் தாழ்வு என்கிற வேறுபாடுகளும் இந்து சமுகத்தினரின் இருதயத்திலிருந்து வேரோடு கெல்லியெறியப்பட வேண்டும்!

இன்று நமது சமுதாயம் கெட்டகாலத்தை அறிவிக்கிறது என்றால் அரிசனங்களை நாம் நடத்திய முறையும் பங்கு வகிக்கிறது என்றே நான் கருதுகிறேன்.

இந்து மதம் என்கிற உடலில் தீண்டாமை என்னும் விஷம் இருக்கும்வரை வெளித்தாக்குதல்களுக்கு இடமாகிக் கொண்டேயிருக்கும்.

தீண்டாமை என்னும் பாவத்திலிருந்து இந்து மதத்தைப் புனிதப்படுத்த வேண்டும். இனம் கண்டுகொள்ள முடியாத வண்ணம் இந்து மதத்தை உருக்குலைத்து, விகாரப்படுத்தியிருக்கும் இந்தத் தீண்டாமை என்னும் பேயை விரட்ட வேண்டும்.

—காந்தியடிகள்.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

—திருக்குறள்.



# அறிவாயுதம் வேண்டும்


தயை, தர்மம், அன்பு, நேசம் முதலிய பண்புகள் நாட்டு மக்களிடம் வளரவேண்டும். அதுதான் அவர்கள் நாகரிக வாழ்வு வாழ்கிறார்கள் என்பதற்கு அடையாளம் என்றெல்லாம் அறிஞர்கள் கூறக் கேட்டு அகமகிழ்கிறோம். விவேகானந்தரின் உபதேசத்தைப் புகழ்கிறோம். வடலூர் இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்கத்தை வாழ்த்துகிறோம். ராஜாராம்மோகன்ராய், தயானந்தர் ஆகியோருக்கு விழா நடத்துகிறோம். நம்முடைய நாட்களிலேயே அரிஜன் நிதிக்குப் பணம் கூடத் தருகிறோம். ஆனால் தீண்டாமையை அறவே ஒழிக்கவேண்டும் வாரீர் என்று அழைத்தால், தர்மம், தயை, அன்பு, நட்பு முதலிய குணங்களெல்லாம் ஓட்டுக்குள் மறைந்து கொள்ளும் ஆமைகளாகிவிடுகின்றன. எங்கிருந்தோ கிளம்பி வைதிகம் என்னும் நாகம் சீறுகிறது. அதை அடக்க அறிவாயுதம் வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.


தமிழரசு

மலர் 10 இதழ் 7

1—10—1979



# தவறு செய்வோர் திருந்திட...

குடித்ததாக மட்டுமே கைது செய்யப்பட்டிருப்பவர்களும், தண்டனை அடைந்து சிறையில் இருப்பவர்களும் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள். ஆனால், குடித்துவிட்டுக் கலாட்டா செய்து வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டதற்காகக் கைதானவர்களும், தண்டனை விதிக்கப்பட்டவர்களும் விடுதலை செய்யப்படமாட்டார்கள்.

சாராயம் காய்ச்சியதாகவும், சாராயம் கடத்தியதாகவும், அப்படிப்பட்டவர்களுக்கு உதவியதாகவும் கைதானவர்களும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களும் விடுதலை செய்யப்படமாட்டார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள்மீதும், சாராயக்கடத்தல்காரர்கள் மீதும் தொடர்ந்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தவறு செய்கிறவர்களின் உள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்தவே மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமையாக்கினோம். மதுவிலக்கைத் தீவிரப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டத்தால் ஒரு பாவமும் அறியாத ஏழைக் குடும்பங்கள் தவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றி வந்த கணவன்மார்கள் சிறையில் இருப்பதால் பல ஏழைக் குடும்பங்கள் அவதிப்படுகின்றன. அதன் காரணமாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது.

எங்களைப் பொறுத்தவரை, அடித்தளத்தில் உள்ள மக்கள் துன்பப்படக் கூடாது; அவர்கள் திருந்த வேண்டும் என்பதற்காகவே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தோம்.

இதைச் செய்வதால் குடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டது என்று அர்த்தமல்ல; முதல் தடவையாகக் குடித்துவிட்டுக் குற்றம் செய்தவர்களுக்குத் திருந்த வாய்ப்புத்தர வேண்டும் என்பதற்காகவே இதைச் செய்கிறோம்.

ஆனால், குடித்துவிட்டு வன்முறையில் ஈடுபட்டவர்களையெல்லாம் என்னால் காப்பாற்ற முடியாது. அவர்களை அவர்கள்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

மது அருந்திவிட்டு வீட்டிலேயே இருக்கலாம் என்று நினைப்பவர்கள் அதைச் சட்டப்படி செய்ய வேண்டும். இப்படி நான் கூறிவிட்டதால் எல்லோரும் இனி கள்ளச் சாராயம் குடிக்கலாம் என்று கருதி விடாதீர்கள். அப்படிச் செய்வது நமது நாட்டிற்கும் நல்லதல்ல; உங்கள் வீட்டிற்கும் நல்லதல்ல; கொண்டிருக்கும் கொள்கைக்கும் நல்லதல்ல.

குடித்துவிட்டு வரும் கணவனிடமிருந்து அடிவாங்கும் தாய்மார்களை, அதனால் சோற்றுக்கு வழியின்றித் திண்டாடும் குடும்பங்களைக் காக்க வேண்டும் என்பது எனது ஆசை. அதை நிறைவேற்றத்தான் சட்டம் கொண்டு வந்தேன்.

அந்தச் சட்டத்தால் ஏதேனும் விபரீதம் ஏற்பட்டால், அதைத் தவிர்க்க வேண்டியதும் அரசின் கடமையாகும்.

குடிப்பதனால் கைது செய்யப்படுகிறவர்கள் தண்டிக்கப்படும்போது தாய்மார்கள் கஷ்டப்படுவதைப் பற்றியும், சம்பாதித்துப் போட ஆளில்லாமல் கஷ்டப்படுவது பற்றியும் சிந்தித்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

அப்படியிருந்தால் அண்ணாவின் தம்பியாக இருக்க முடியாது!

நான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்று சொல்ல நான் விரும்பவில்லை. இந்தச் சட்டத்தைக் கடைப் பிடிக்கும் போது கூட, தாய்மார்கள் கண்ணீர் சிந்தக் கூடாது என்பதே என் நோக்கமாகும்.

அதே நேரத்தில் மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்தவும் செய்வோம்.

—மாண்புமிகு முதல்வர்

**திரு எம். ஜி. ஆர்.**

*(தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் பேசியது. 20-9-1979)*

# 10 கேள்விகள்

**மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்**
**திரு பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள்**
**'தமிழரசு' இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டி**



**தமிழகத்தில் புதிய அரசு மலர்ந்தபின், அரிசன நலத்துறையின் ஆக்க பூர்வமான பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு என்ன?**

தமிழகத்தில் புதிய அரசு மலர்ந்த பின் அரிசன ஆதிவாசிகள் நலத்துறையின் ஆக்கப்பூர்வ பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:

| | ஆண்டு முதலில் ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு ரூ. இலட்சங்களில் |
|---|---|
| *1977—78* | *1595.09* |
| *1978—79* | *1694.46* |
| *1979—80* | *1941.13* |

**அந்த நிதி ஒதுக்கீட்டின்படி இந்த இரண்டாண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள முக்கியத் திட்டங்கள் யாவை?**

2. அந்த நிதி ஒதுக்கீட்டின்படி இந்த இரண்டாண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள முக்கிய திட்டங்கள் வருமாறு.
*1977-78-1978-79*

**அரிசனங்கள்-பழங்குடியினர்.**

1. **கல்வி**
   1. படிப்புதவித் தொகைகள்
   2. பள்ளிகள்
   3. நண்பகல் உணவு
   4. பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் பழுது பார்த்தல்
   5. உடைகள்
   6. புத்தகங்கள், பலகைகள், பள்ளிச் சாதனங்கள் வழங்கல்
   7. ஆசிரியர்களுக்கு வீடுகள்
   8. மாணவர் சுற்றுலா
   9. பரிசுப் பொருட்கள்
   10. மாணவர் இல்லங்கள் பராமரிப்பு
   11. மாணவர் இல்லங்கள் கட்டுதல்
   12. பகுதி நேர ஆசிரியர்கள்
   13. உணவு மானியம்
   14. தேர்வு முன் பயிற்சி நிலையம்
   15. தொழிற்பயிற்சி நிலையங்கள், கல்வி நிலையங்கள், பல்கலைக் கழகங்களுக்கான இழப்பீட்டுத் தொகை
   16. தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி
   17. குழந்தைகள் நல நிலையங்கள் திறத்தல்

2. **வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றம்**
   18. வேளாண்மை (உழவு மாடுகள் வழங்குதல், பாசனக்கிணறு மான்யம் வழங்குதல்)
   19. பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்.
   20. குடிசைத் தொழில், உற்பத்திப் பயிற்சிப் பணி நிலையங்கள்
   21. தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோருக்கு உதவித்தொகை

22. தோட்டக்கலை
23. சிறு தொழில்களுக்கான கடன்கள்.
24. அரிசன பழங்குடி வகுப்பைச் சார்ந்த மகளிருக்கு வானொலி. தொலைக்காட்சிப் பொறிகளை இயக்குவதற்காகப் பயிற்சியளிக்கும் திட்டம்.

**3. சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள் :**

25. வீட்டு வசதி
26. வீட்டு மனைகள்
27. பொதுச் சுகாதாரம்
28. குடிநீர்க் கிணறுகள்
29. மருத்துவம்
30. மின்வசதி
31. சாலைகள்
32. விளம்பரம் (அரிசன வார விழா)
33. தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பரிசுகள்
34. துப்புரவான அரிசன குடியிருப்புகளுக்குப் பரிசுகள்
35. சமுதாய நிலையங்கள் - சமுதாயக் கூடங்கள்
36. கலப்புத் திருமணம்
37. சலவை செய்வதற்கான துறைகள் கட்டுதல்
38. ஈமக்கடன்கள் செய்வதற்காகத் தொகை அளித்தல்.

**4. பழங்குடியினரின் பகுதிகளின் துணைத் திட்டம் :**

39. பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத் திட்டம்
40. பழங்குடியினருக்கு வீடுகளுடன் கூடிய பள்ளிகளைத் திறத்தலும், நிர்வகித்தலும்
41. பழங்குடியினர் கிராமங்களுக்கு நீர் வழங்கும் திட்டம்.
42. பழங்குடியினர் கிராமங்களுக்கு மின்வசதித் திட்டம்.

அது தவிர 1978-79ல் கொத்தடிமைகள் புதுவாழ்வுத் திட்டங்கள் இத்துறைக்கு மாற்றப்பட்டு கீழ்க்கண்ட திட்டங்கள் செயல் படுத்தப்பட்டன:

1. கொத்தடிமைகள் வாழ்வில் மறுமலர்ச்சி.
2. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கான செலவுகளுக்காக ரொக்கக் கடன்கள் வழங்குவதற்கான மானியம்.
3. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு வீட்டு வசதிக்கான உதவி.
4. கொத்தடிமைகளுக்கான நிலக் குடியேற்றத் திட்டம்

மேற்சொன்ன 42 திட்டங்களுள் 1977-78-1978-79 ஆண்டுகளில் புதிதாகச் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் வருமாறு.

1 குழந்தைகள் நல நிலையங்கள் திறத்தல்.

2 அரிசன் பழங்குடி வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு வானொலி, தொலைக்காட்சிப் பொறிகளை இயக்குவதற்காகப் பயிற்சி அளிக்கும் திட்டம்

37 சலவை செய்வதற்கான துறைகள் கட்டுதல்

38 ஈமக் கடன்கள் செய்வதற்காக தொகை அளித்தல்

39 பழங்குடியினருக்கு விடுதிகளுடன் கூடிய பள்ளிகளைத் திறத்தலும், நிர்வகித்தலும்

40 பழங்குடியினர் கிராமங்களுக்கு நீர் வழங்கு திட்டம்.

41 பழங்குடியினர் கிராமங்களுக்கு மின் வசதி திட்டம்

மற்ற திட்டங்கள் ஏற்கெனவே செயல் பட்டிருந்தவை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன.



**அரிசனச் சமுதாய மக்களுக்கான வீட்டு வசதி வாரியத்தின் மூலம் உருவாக்கப் பட்டுள்ள குடியிருப்புகள்—வீடுகள் பற்றிய விவரங்கள் என்ன ?**

1974-75ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் (தாட்கோ) மூலமாக வீடுகள் கட்டி அரிசன மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வீடுகள் ஒவ்வொன்றும் ரூ. 4000- (மலைப்பகுதிகளில் ரூ. 6000-) மதிப்பில் கட்டப்பட்டு வந்தது. 1977-78ஆம் ஆண்டில் இவ்வீட்டில் மேலும் அதிக இடவசதியளிக்கும் வகையில் நல்ல முறையில் வீடுகளைக் கட்ட ஒவ்வொன்றும் ரூ. 6000- மலைப்பகுதிகளில் ரூ. 9000- மதிப்பீட்டில் 5000 வீடுகளைக் கட்ட அரசு உத்தரவிட்டது. அதில் 31.5.79 முடிய 3909 வீடுகளைக் கட்டி முடித்தாகி விட்டது. மீதியுள்ள 1091 வீடுகளைக் கட்டும் பணியானது பல்வேறு நிலைகளில் உள்ளன. அரிசன மக்களுக்கு வீடுகளைக் கட்ட 1977-78ல் ரூ. 2.20 கோடி தாட்கோ விற்கு வழங்கப்பட்டது. அதேபோல் 1978-79ல் 1660 வீடுகளைக் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் வீடுகளைக் கட்ட ரூ. 2.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரிசனங்களுக்கு வீட்டுமனை கையகப்படுத்தல்:**

தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி வீடற்ற அரிசனங்களுக்கு இலவசமாக வீட்டு மனை வழங்கும் திட்டமானது கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தீவிரமாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

1977-78ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 63.17 இலட்சம் செலவில் 1282.66 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 20.799 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. இவற்றிற்கு முந்தைய ஆண்டுகளில் ரூ.50 இலட்சத்திற்கும் ஒவ்வொரு ஆண்டும் செலவு செய்யப்பட்டது.

1978-79ம் ஆண்டில் ரூ. 111.29 இலட்ச செலவில் 1842.36 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டு 31,304 வீட்டு மனைகள் வழங் கப்பட்டன.

1979-80ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

**ஈமக் கடன் செய்ய நிதி உதவி :**

அரிசனக் குடும்பங்களில் இறந்துபோகும் நபர்களுக்கு ஈமக் கடன் செய்வதற்கென நபர் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் நிதி உதவி வழங்கும் புதிய திட்டம் 1978ஆம் ஆண்டு சூலை மாதம் அரசினால் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத் திட்டத்தினை ஊரக ஆய்வாளர், ஆணையர், சென்னை மாநக ராட்சி, ஆணையர், மதுரை மாநகராட்சி ஆகி யோர் செயல்படுத்தி வருகின்றனர். இதற் கான நிதி ஒதுக்கீடு அரிசன நலத்துறையி லிருந்து வழங்கப்படுகிறது.

1978-79ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 5309 அரிசனக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 2,65,400- ஆகும்.

நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**அரிசன நலத்துறை மூலம் அரிசன-மற்றும் மலைவாழ்சமுதாய மக்களின் கல்விவசதிக் கென அமலாக்கப்பட்ட திட்டங்கள், அளிக் கப்பட்டுள்ள சலுகைகள் யாவை ?**

தமிழ்நாட்டில் அரிசன நலப்பள்ளிகள் 942 உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| தொடக்கப்பள்ளிகள் | 841 |
| நடுநிலைப்பள்ளிகள் | 80 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 17 |
| மேல்நிலைப்பள்ளிகள் | 4 |
| | 942 |

இப்பள்ளிகளில் அரிசன பழங்குடியினர் மற்றும் ஏனைய வகுப்பைச் சேர்ந்தவர் சுமார் 1.66 இலட்சம் மாணவ மாணவிகள் பயிலு கின்றார்கள்.



**மாணவ மாணவிகளுக்குச் சீருடைகள் வழங்குதல்:**

அரிசன ஆதிவாசிகள் நலப்பள்ளிகளில் அல்லது அரசினர் மாணவியர் இல்லங்களில் தங்கிப்பயிலும் மாணவிகள் அனைவருக்கும் இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின் றன. அரசினர் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவர்களுக்கு இரு ஜோடி சீருடைகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. அரிசன பழங்குடியின ரின் நலப்பள்ளிகளில் 1 முதல் 5 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் ஒரு ஜோடி சீருடை வழங்கப் பட்டு வருகிறது. 1979-80 ஆண்டில் ரூ.56.14 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தகுதிக்கென்றே உள்ள மானியம் (Adhoc Merit Grant)**

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 60 சதவீதம் மதிப்பெண்களும் அதற்கு அதிகமாகவும் பெற் றுள்ள அரிசன பழங்குடியினர் கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய அரிசன மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் தகுதி மான்ய மாக ரூ. 300- வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல் கல்லூரி புகுமுக வகுப்புத் தேர் வில் முதல் வகுப்பில் தேறிய அரிசன-பழங்குடி கிறித்துவ மதத்திற்கு மாறிய அரிசன மாணவ மாணவிகளுக்கு ரொக்க மானியமாக ரூ.300- வழங்கப்பட்டு வருகிறது.

**மாணவ மாணவியருக்கு இலவசப் புத்தகம் நோட்டுகள், சிலேட்டு முதலியன வழங்குதல்:**

ஒவ்வோராண்டும் அரிசன ஆதிவாசி நலத்துறைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், சிலேட்டு முதலியன வழங்கப்படுகின்றன. 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவர்களுக்கும் பாடப் புத்தகங்களும் 3 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்களும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவர்களுக்கும் சிலேட்டும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்கென நடப்பு நிதியாண்டில் 25,82,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மதிய உணவு:**

அரிசன நலப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு வழங்கப்படும் (120 நாட்கள்) நாட்களில் மாணவர் ஒருவருக்கு ஒரு நாளைக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் நண்பகல் உணவில் அளவு பின்வருமாறு:

| | ரூ. காசு. |
|---|---|
| 80 கிராம் அரிசி | 0.15 |
| சுவையூட்டும் பொருட்கள் காய்கறிகள் | 0.5½ |
| எரிபொருள் | 0.1½ |
| மொத்தம் | 0.22 |

'கேர்' நிறுவனம் வழங்கும் உணவுக்கான செலவு (0.29) பின்வருமாறு:

| | ரூ. காசு. |
|---|---|
| 90 கிராம் உணவு தானியங்கள் | 0.21½ |
| 6 கிராம் எண்ணெய் | 0.4½ |
| சுவையூட்டும் பொருட்கள் எரிபொருள் | 0.3½ |
| மொத்தம் | 0.29½ |

மதிய உணவுக்காக ரூ. 42,60,000- 79-80ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு மாணவனுக்கு வழங்கும் அரிசியின் அளவை 90லிருந்து 100 கிராமாகவும், 6கிராம் எண்ணெய்யை 4கிராமாகவும் அரசு குறைத்துள்ளது. சென்னைப் பள்ளிக்கல்வி இயக்குநர் வழங்கப்படும் எண்ணெய்யின் அளவை 4 கிராமிலிருந்து 7 கிராமாக அதிகரித்துள்ளனர்.

**தனியார் இல்லங்களுக்கான உதவித்தொகை:**

உதவித்தொகை பெறும் சென்னை நகரிலுள்ள அனைத்து இல்லங்களுக்கும் மற்றும் மாவட்ட, வட்டத் தலைமை இடங்களிலுள்ள அனைத்து இல்லங்களுக்கும் ஒவ்வொரு மாணவருக்கான கட்டணம் ரூ. 35-ம் ஏனைய இடங்களிலுள்ள அனைத்து மாணவரில்லங்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு மாணவனுக்கு ரூ. 30-ம் வழங்கப்படுகிறது. தனியார் இல்லங்களுக்கான உதவித்தொகைக்கு 79-80ல் ரூ. 5,69,000- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1976-77ஆம் ஆண்டு வரையில் 1 முதல் 11ம் வகுப்பு வரையில் படித்த அரிசன பழங்குடி மாணவர்களுக்கும், கிறித்துவர்களாக மதம்மாறிய அரிசன மாணவர்களுக்கும் புத்தகச் செலவுக்கும், சிறப்புக் கட்டணங்களுக்கும் படிப்பு உதவித்தொகை பணமாக வழங்கப்பட்டது. இப்படிப்பு உதவித் தொகையை வழங்குவதற்குப் பெற்றோர் காப்பாளரின் ஆண்டு வருமானம் ரூ. 3000- ஆகும். 1977-78ஆம் ஆண்டில் இருந்து 4 முதல் 10வது வகுப்பு வரையில் படிக்கும் அரிசன பழங்குடி மற்றும் கிறித்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானத்தைக் கருத்திற்கொண்டு பாராமல் எல்லாப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. (1 முதல் 3 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கும் கல்வித்துறை இலவசமாகப் புத்தகங்களையும் பலகைகளையும் வழங்குகிறது) சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தையும் தேர்வுக் கட்டணத்தையும் அரசே வழங்கி விடுகிறது. இதனால் பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1976—77 | 5,15,361 |
| 1977—78 | 6,10,070 |
| 1978—79 | 6,69,691 |

1976-77ஆம் ஆண்டு வரை மெட்ரிக்குக்குப் பிந்திய வகுப்புகளில் படிக்கும் அரிசன பழங்குடி மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரின் வருமானம் ரூ. 2500- வரை இருந்தால்





மட்டுமே படிப்புக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டது. 1977-78ஆம் ஆண்டில் இருந்து அவர்களது பெற்றோரின் வருவாயைக் கருதிப் பாராமல் படிப்புக் கட்டணச் சலுகை எல்லா அரிசனப் பழங்குடி மாணவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு எல்லா நிலைகளிலும் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

அரிசன பழங்குடி மாணவர்களுக்கு வழங்கும் இந்திய அரசு படிப்பு உதவித்தொகையில் அடங்கும் பராமரிப்புத் தொகையை, மாணவ விடுதிகளில் உள்ள மருத்துவம், பொறியியல், பட்டப்படிப்பு மாணவர்களுக்கு 1978ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாளிலிருந்து மாதமொன்றுக்கு ரூ. 60- கூடுதலாக வழங்கப்படுகிறது.

**கடன் படிப்பு உதவித் தொகை:**

புகுமுக வகுப்புக்கு மேற்பட்ட பட்ட படிப்பு படிக்கும் அரிசன பழங்குடி மற்றும் கிருத்துவர்களாக மதம் மாறிய அரிசன மாணவர்களில் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிப்பவர்களுக்கு அளிக்கப்படும் படிப்பு உதவித் தொகையைவிட அதிகமாக தொகை செலவிட வேண்டியுள்ளதால் நிதி உதவி தேவையான மாணவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் பயன்பெற்றோர் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு | பயன்பெற்ற வர்கள் எண்ணிக்கை | செலவான மொத்த தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| *1976—77* | *2438* | *11.24* |
| *1977—78* | *2984* | *22.76* |
| *1978—79* | *4061* | *29.35* |

புகுமுக வகுப்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கல்வியில் சிறந்த ஒரு அரிசன மாணவருக்கும், ஒரு அரிசன மாணவிக்கும் வழக்கமாக அளிக்கப்படுகின்ற படிப்பு உதவித் தொகையுடன் ''காந்தியடிகளின் நினைவு சிறப்புக் கல்வித் தொகை'' முதல் ஆண்டு ரூ. 1,500 மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000-ம் அளிக்கப்படுகிறது. இதுபோல பழங்குடி மாணவர்களுக்கும், கிருத்துவர்களாக மதம் மாறிய அரிசனங்களுக்கும் சிறப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், எஸ். எஸ். எல். சி. தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றிபெறும் அரிசன மற்றும் கிருத்துவ மதத்திற்கு மதம் மாறிய அரிசன மாணவர்கள் அவர்கள் கல்லூரியைத் தொடருவதற்கு உதவி செய்யப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 80 சிறப்புக் கல்வி உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. மேற்கண்ட இரண்டு திட்டங்களுக்கும் வருமான வரம்பு கிடையாது. இந்த ஆண்டிலிருந்து (1979-80) ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ். எஸ். எல். சி. தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றி பெறும் அரிசன மற்றும் கிருத்துவர்களாக மாறிய அரிசன மாணவியர்களுக்கும், பழங்குடி மாணவ, மாணவியர்களுக்கும சிறப்புக் கல்வி உதவிப் பணம் வழங்க அரசு ஆணையிட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரத்தில் உள்ள அரிசனங்கள் மற்றும் பழங்குடி வகுப்பைச்சேர்ந்த பெண்கள் 20 பேருக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் முதன் முறையாக 1978-80-ஆம் ஆண்டில், வானொலி, தொலைக் காட்சி, இயந்திரவியல் பயிற்சி அளிக்க அரசு ஆணையிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும்அரிசன பழங்குடி மற்றும் கிருத்துவர்களாக மதம் மாறிய அரிசன மாணவர்களுக்குப் புகுமுக வகுப்பில் படிப்போருக்குக் கொடுக்கப்பட்டு வந்த படிப்பு உதவித் தொகை வழங்க அரசு தற்போது ஆணையிட்டுள்ளது.

**கலப்புத் திருமணங்களில் அரிசன துறையின் பங்கு என்ன?**

கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குத் தங்கப்பதக்கம் (1.5 சவரன் 14 காரட்டு) மற்றும் ரூ. 200 பண உதவி அளிக்கப்படுகிறது. சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களில் அரசு நிலம் உள்ள இடங்களில் 3 செண்டு நிலம் கையகப்படுத்தப்பட்டு வீட்டுமனைக்கென் வழங்கப்படுகிறது சென்னையிலுள்ள கலப்புமணத்தம்பதிகளுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகியவைகளால் ரொக்க தவணையில் வீடு கட்டித்தரும் திட்டத்தில் வீட்டுமனை வாங்க ரூ. 1,200 மான்யமாக வழங்க வழி செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| *1977-78-ல்* தங்கப்பதக்கம் வழங்கப் பட்டவர்களின் எண்ணிக்கை | *79* |
| *1978-79-ல்* தங்கப்பதக்கம் வழங்கப் பட்டவர்களின் எண்ணிக்கை | *55* |
| *1979-80-ல்* தங்கப்பதக்கம் வழங்கப் பட்டவர்களின் எண்ணிக்கை | *6* |

**தற்போதைய அரசு பதவி ஏற்ற பிறகு செய்த சலுகைகள்:**

1. விதவைகள் மற்றும் மனைவியை இழந்தவர்கள் கலப்பு மணம் செய்தாலும், சட்டப்படி விவாகரத்து செய்த பின் (ஆண்-பெண்) செய்யும் முதல் மணம் கலப்புத் திருமணமாக இருந்தாலும், கலப்புமணச் சலுகைகள் பெற தகுதியுடையவர்கள் என ஆணை பிறப்பித்துள்ளது.
2. கலப்பு மணத் தம்பதிகளுக்கு மேலே குறிப்பிடப்பட்ட சலுகைகளுக்குப் பதிலாக ரூ. 5,000 பணமாக (ரூபாய் 1,000 ரொக்கப் பணமாகவும் ரூபாய் 4,000 தம்பதியர் இருவரின் பெயரில் 5 ஆண்டுகளுக்கு அரசுடைமையாக்கப்

பட்ட வங்கியில் வைப்புத் தொகை யாகப் போட்டு அளித்தல்) வழங்கும் மாற்றுத் திட்டத்தை அரசு பரி சீலனை செய்து வருகிறது.

**தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக் கெனத் தமிழகத்தில் உள்ள விடுதிகள் எத்தனை? அவற்றின் எண்ணிக்கை வளர்ச்சியாகும் வாய்ப்புண்டா?**

தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக் கெனத் தமிழகத்தில் உள்ள விடுதிகள், மாணவ மாணவியர் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள் ளது.

| விடுதிகள் எண்ணிக்கை | மாணவ, மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|
| 615 | 38,886 |

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர் களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. இதற்கான எண் ணிக்கை விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

கல்லூரி மாணவர் இல்லம் :—

| ஆண்கள் | | பெண்கள் | |
|---|---|---|---|
| | மாணவர் எண்ணிக்கை | | மாணவர் எண்ணிக்கை |
| 31 | 3,009 | 6 | 305 |

தொழிற் கல்வி மாணவர் இல்லம் :—

| ஆண்கள் | | பெண்கள் | |
|---|---|---|---|
| | மாணவர் எண்ணிக்கை | | மாணவர் எண்ணிக்கை |
| 6 | 503 | — | — |

உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லம் :—

| ஆண்கள் | | பெண்கள் | |
|---|---|---|---|
| | மாணவர் எண்ணிக்கை | | மாணவர் எண்ணிக்கை |
| 406 | 25689 | 166 | 9380 |


அரிசன மாணவர்கள் தங்கியுள்ள அரசு இல் லங்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள் ளன.

| மாணவர் இல்லங்களின் வகை | மாதம் ஒன்றுக்கு மாணவருக்கு ஆகும் கட்டணம் |
|---|---|
| | ரூபாய் |
| சென்னை நகரத்திலுள்ள அரசுக் கல்லூரி மாணவ மாணவியர் இல்லங்கள் | 80 |
| சென்னை மாநகரிலுள்ள அரசுத் தொழிற் பயிற்சி மாணவர் இல்லங்கள் | 65 |
| வெளியூர்களிலுள்ள அரசுக் கல்லூரி மாணவர் மாணவியர் இல் லங்கள் | 65 |
| வெளியூர்களிலுள்ள அரசுத் தொழிற் பயிற்சி மாணவர் இல்லங்கள் | 55 |
| உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக் கான அரசு இல்லங்கள் | 45 |

ஒவ்வொரு ஆண்டும் 10 முதல் 15 விடுதிகள் கட்ட அரசுக்குப் பரிந்துரை அனுப் பப்பட்டு வருகிறது. மேலும் நடப்பு ஆண்டு 1979-80-ல் மேற்கொண்டு 15 விடுதிகள் கட்ட அரசு ஒப்புதல் அளித்து அதற்கான அரசு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டு 1979-80அரசு விடுதிக்கான பரா மரிப்புக்காக 229 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரிசன மக்கள் சிறுதொழில் - பெருந் தொழில் துவக்கிட என்று அரசு மூலம் எந்த அளவில் ஊக்குவிக்கப்படுகிறார்கள்?**

தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதார மேம்பாட்டைக் கண்டிடவும் சுயவேலை வாய்ப்பைப் பெற்றிடவும் வேண்டி சிறு தொழில் நடத்த வட்டி இல்லாக் கடன் அளிக்கும் திட்டம் 1968-69-ல் துவங்கப்பட்





டது. இத்திட்டம் இந்து அரிசனங்களுக்கு மட்டும் ஆரம்பத்தில் செயல்படுத்தப்பட்டாலும் கிருத்துவ மதம் மாறியவர்களுக்கும் 1975-76-ம் ஆண்டு நீட்டிக்கப்பட்டது. சிறு தொழில் துவங்க அளிக்கும் கடனுதவி ரூபாய் 125-ல் இருந்து ரூ. 15,000 வரை ஆகும். 1978-79 முடிய 13439 இந்து அரிசனங்களுக்கு ரூ.94,62,460-ம் 278 மதம் மாறிய கிருத்துவர்களுக்கு ரூ. 1,75,175-ம் இத்திட்டத்தின்கீழ் கடனாகஅளிக்கப்பட்டது.

அச்சகம் வைத்தல், செருப்பு தைத்தல், மோட்டார் மெக்கானிக், மருந்துக் கடை வைத்தல் மற்றும் இதர தொழில்கள் நடத்தவும் வட்டி இல்லாக் கடன் 1968-69 முதல் வழங்கப்பட்டு வருகிறது. அரிசன மக்களுக்காக வருடந்தோறும் ரூ. 10 இலட்சமும் மதம் மாறியவர்களுக்காக ரூ. 1.25 இலட்சமும் மலை சாதியினருக்காக ரூ. 0.40 இலட்சமும் ஒதுக்கப்பட்டு வருகிறது.

**தற்போதைய அரசு பதவி ஏற்ற பிறகு செய்தவை**

அரிசன மக்களுக்கு வியாபாரக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா, பெட்ரோல் பங்க் வைத்து நடத்துதல் போன்றவைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. சைக்கிள் ரிக்ஷா விலையில் நபர் ஒன்றுக்கு ரூ. 270 வீதம் 37 நபர்களுக்கு இறுதி நிலை ரொக்கமாக (மார்ஜின் மணி) இந்த அரசு வழங்கியுள்ளது. மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாவுக்கு ஐந்து நபர்களுக்கு தலா ரூ. 750 இந்த அரசு வழங்கியுள்ளது. மீதமுள்ள தொகையை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வழங்கியுள்ளது. ஒரு நபருக்கு ரூ. 1,300 இறுதி நிலை ரொக்கமாக (மார்ஜின் மணி) ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கு இந்த அரசு வழங்கியுள்ளது. மீதித் தொகையை யுனைடெட் கமர்ஷியல் வங்கி கொடுத்துள்ளது.

பெட்ரோல் வியாபாரத்திற்கான (Petrol Dealership) ஒரு நபருக்கு ரூ. 12,000 இந்த அரசு வழங்கியுள்ளது. இதுவரை 13,717 நபர்களுக்கு ரூ. 96.38 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு நபருக்கு ரூ. 5000 வீதம் 98 உறுப்பினர் கொண்ட தீப்பெட்டி தயாரிக்கும் கூட்டுறவு தொழிற்சாலை இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசியில் துவங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**வேளாண் தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள அரிசன மக்கள் அரசு மூலம் பெறும் உதவிகள் யாவை?**

வேளாண்மைத் தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள அரிசன மக்கள் அரசு மூலம் பெறும் உதவிகள்

வேளாண்மைத் தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள அரிசன மக்களுக்கு விவசாயக் கிணறு வெட்டவும், உழவு மாடுகளும், விவசாயக் கருவிகள் மற்றும் விதைகளும் வாங்கவும் மானியம் வழங்கப்படுகிறது.

**விவசாயக் கிணறு மான்யம் :**

விவசாயக் கிணறு வெட்ட ரூ. 2,500 மான்யமாக வழங்கப்படுகிறது. 1977-78-ம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 537 அரிசன மக்களும் 47 அரிசன கிருத்துவ மக்களும் பயனடைந்தனர். அதேபோல் 1978-79-ல் 152 அரிசன மக்களும் 15 அரிசன கிருத்துவ மக்களும் பயனடைந்தனர்.

**உழவு மாடு மான்யம் :**

அரிசன மற்றும் அரிசன கிருத்துவ விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உழவு மாடுகள், விவசாயக் கருவிகள் மற்றும் விதைகள் இலவசமாக வழங்கும் திட்டத்தின்கீழ் 1977-78-ல் அரிசன மக்களில் 150 பேர்களும் அரிசன கிருத்துவ மக்களில் 30 பேர்களும் 1978-79-ல் அரிசன மக்களில் 104 பேர்களும் அரிசன கிருத்துவ மக்களில் 16 பேர்களும் பயனடைந்தனர்.

மேற்கண்ட இரு திட்டங்களுக்காகவும் 1977-78-ல் ரூ. 6 இலட்சமும் 1978-79-ல். ரூபாய் 3,58,700-ல் செலவு செய்யப்பட்டது.

நடப்பு நிதியாண்டில் அரிசன மற்றும் அரிசன கிருத்துவ விவசாயிகளுக்கு விவசாயக் கிணறு வெட்ட மான்யம் வழங்க ரூ. 6.98 இலட்சமும் உழவு மாடு மான்யம் வழங்க ரூ. 1.52 இலட்சமும் ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்படுகிறது.

**அரிசனக் குடியிருப்பு மக்கள் மருத்துவ வசதி பெற, அரசு மூலம் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?**

வட ஆர்க்காடு மாவட்டத்தில் அம்பேத்கார் நகர் மற்றும், ஸ்ரீனிவாச நகர் அரிசனக் காலனிகளில் உள்ள அரிசன மக்களுக்கு இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதற்காக ஆண்டொன்றிற்கு ரூ. 2,000 ஒதுக்கப்பட்டு செலவிடப்படுகிறது.

**அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்வசதி, குடிநீர் வசதி பற்றி சிறப்பாகச் சொல்லும்படி என்ன செய்யப்பட்டுள்ளது?**

நிதி ஒதுக்கீடு:


| | | இலட்சம் |
|---|---|---|
| 1977—78 | ... | 56 |
| 1978—79 | ... | 56 |
| 1979—80 | ... | 56 |

அரிசன காலனிகளுக்கு மின்னொளி வழங்க மான்யமாக மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட்ட தொகையில் 1-3-79-லிருந்து ரூ. 85.73 இலட்சம் இன்னும் செலவிடவுள்ளதாக மின்சார வாரியத்தின் தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார்.

**தற்போதைய அரசு செய்த பணி :**

மொத்தம் உள்ள 25,526 அரிசனக் காலனிகளில் 31-3-78-ல் அனைத்து 25,526 காலனி

களுக்கும் மின்னொளி வழங்கப்பட்டன என்றும், தற்போது புதிதாகத் தோன்றியுள்ள சில காலனிகளுக்கு மட்டுமே மின்னொளி வழங்கப்படவேண்டும் எனவும், அவைகளுக்கு மின்னொளி வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தமிழ்நாடு மின்சார வாரிய செயலாளர் தெரிவித்துள்ளார்.



**குடிதண்ணீர் வசதி :**

அரிசன காலனிகளில் குடிதண்ணீர் வசதிக்காக கிணறு தோண்டுவதற்கு உச்சவரம்புத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூபாய் 6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

முன்பெல்லாம் அரசு அங்கீகாரத்தின் பேரில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வந்தன. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எங்கெங்கே நீர்த் தொட்டிகள் அவசியமோ அங்கங்கே கட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடிதண்ணீர் வசதியில்லாத காலனிகளில் தண்ணீர் இருந்தும் குடிக்கலாயக்கில்லாத — வசதியற்றகாலனிகளுக்கும் 1978-79-ல் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கத் தீவிர திட்டம் வகுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தீண்டாமை ஒழிப்பை மூலநோக்கமாகக் கொண்டும், தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாக் கமிட்டியின் பரிந்துரையைக் கருத்தில் கொண்டும் அரிசன மக்களுக்கு இலவசமாக வீட்டுமனைக்காக நிலம் கையகப்படுத்தும் திட்டத்திலும், வீடுகள் கட்டி இலவசமாக வழங்கும் திட்டத்திலும் பிற்பட்ட வகுப்பினருக்கு 10 விழுக்காடு ஒதுக்கப்பட்டிருப்பதுபோன்று முற்பட்ட வகுப்பினருக்கும் 10 விழுக்காடு ஒதுக்கீடு செய்ய 1979 மார்ச் மாதம் அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

துப்புரவுத் தொழிலாளர்களுக்கு தள்ளு வண்டிகள், கரண்டிகள் ஆகிய உபகரணங்கள் விநியோகம்:

நகரப் பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு தள்ளுவண்டிகள், கரண்டிகள் ஆகிய உபகரணங்கள் விநியோகிப்பதற்காக 1977-78-ல் அரசு ரூ. 1,31,730 வழங்கியது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 1978-79 இல் ரூ. 9,66,400 கோரப்பட்டது. அது இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**நடமாடும் காவற்படை**

நடமாடும் காவற்படை ஏற்கனவே கோவை, மதுரை, தென்ஆர்க்காடு, தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டு, குடிமை உரிமைச் சட்டம் 1955-ன் கீழ் தீண்டாமை ஒழிப்பிற்காகப் பணிபுரிந்து வந்தது. அரசு ஆணை எண். 119, சமூக நலத் துறை, நாள் 23-1-79-ல் மேலும் 7 மாவட்டங்களில், முறையே செங்கற்பட்டு, இராமநாதபுரம், கன்னியாகுமரி, வடஆர்க்காடு, நீலகிரி, சேலம் தர்மபுரி, ஆகிய மாவட்டங்களில் நிறுவ ஆணையிடப்பட்டது.

**பழங்குடி மாணவர் இல்லங்கள் :**

அரிசன நலத் துறையில் பழங்குடி மாணவர்களுக்கென்று 19 உணவு விடுதிகள் அமைக்கப்பட்டு செவ்வனே செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 13 விடுதிகள் மாணவர்களுக்கும், 6 விடுதிகள் மாணவிகளுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விடுதிகள் சில அரசுக்குச் சொந்தமான இல்லங்களில் நடக்கின்றன. சில வாடகை இல்லங்களில் நடத்தப்படுகின்றன. 19 விடுதிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 845. இவர்களுக்கு மாதம் ரூ. 45 வீதம் உணவிற்காக செலவு செய்யப்படுகிறது. இவர்களுக்கு படுக்கை வசதிகள் ரூ. 10 முதல் 30 வரை செலவு செய்யப்படுகிறது.

பழங்குடி மாணவர் விடுதிக்காக இவ்வாண்டில் ரூ. 3,33,600 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பழங்குடி மாணவர் பள்ளிகள் :**

பழங்குடி மாணவர்களுக்காக அரிசன நலத் துறை மூலம் உறைவிடப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | துவக்கப் பள்ளிகள் ... | 80 |
| 2. | நடுநிலைப் பள்ளிகள் ... | 11 |
| 3. | உயர்நிலைப் பள்ளிகள் ... | 2 |
| 4. | மேல்நிலை உயர்நிலைப்பள்ளிகள் ... | 2 |
| 5. | விடுதி வசதியற்ற பள்ளி ... | 1 |
| | ... | 96 |

இப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை : 5697

1979-80-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் பச்சை மலைக் குன்றுகளில் பெரியபாக்காளம் கிராமத்தில் அரசு பழங்குடியினர் தங்கிப்பயிலும் பள்ளியொன்று திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 1979-80-ம் ஆண்டில் ரூ. 0.50 இலட்சம் செலவில் நீலகிரி மாவட்டத்தில் இரண்டு அரசு பழங்குடியினர் நடுத்தரப் பள்ளிகளுக்கு பயிற்சிக் கூடங்கள் கட்டுவதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தாழ்த்தப்பட்ட மக்கள் நலம்

குமார. கோமேதகவேலு,
ஐ.ஏ.எஸ்,
அரிசன நல இயக்குநர்,

'மேலிருந்தும் மேலல்லார்
மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்' —குறள்

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுக்குப்படி தமிழ்நாட்டில் 73,15,595 அரிசன மக்களும், 3,30,744 மலைசாதி மக்களும் வாழ்கின்றனர். இமமக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியும் மேம்பாடும் கண்டிட தமிழக அரசு பல சீரிய திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகிறது. அரிசன மக்கள் நல்வாழ்வுக்காகச் செலவு செய்யப்படும் ஒதுக்கீட்டுத் தொகையானது ஆண்டுக்காண்டு அதிகரிக்கப்பட்டு வருகிறது. அரிசன மற்றும் மலை சாதியினர் மேம்பாட்டிற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 19.41 கோடி ஒதுக்கப்பட்டு செலவு செய்து வருகிறது.

அரிசன மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காகத் தமிழ்நாட்டில் அரிசன நலத் துறையினால் 942 நலப்பள்ளிகள் நடத்தப்பட்டுவருகின்றன. 87,369 மாணவர்களும், 78,844 மாணவியரும் இப்பள்ளிகளில் பயின்று வருகின்றனர். அதுபோல் மலைசாதியினருக்காக இம்மாநிலத்தில் 95 உறைவிடப்பள்ளிகளும், உறைவிடம் இல்லாத பள்ளி ஒன்றும், 19 மாணவ, மாணவியர் இல்லங்களும் உள்ளன. சுமார் 5697 மலைசாதி மாணவ மாணவியர் இதனால் சீரியமுறையில் பயனடைகின்றனர். மாணவ, மாணவியரின் தேவையைப் பூர்த்தி செய்ய ஆண்டுதோறும் புதிதாக மாணவ, மாணவியர் இல்லங்களை அரசு துவக்கியும் வருகின்றது.


தற்போது இம்மாநிலத்தில் அரிசன மாணவ, மாணவியருக்காக 615 அரசு மாணவ, மாணவியர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. 38,886 மாணவ மாணவியர் இதனால் உகந்த பயனையும், பலனையும் பெற்று வருகின்றனர்.

இச்சமூகத்தினரின் கல்வி வளர்ச்சிக்காக அரசு மேற்கொண்ட திட்டங்களில் கல்வி உபகாரச் சம்பளம் வழங்குதல் முக்கியமான ஒன்றாகும். பள்ளிக் கல்வி முதல், உயர்பட்டப்படிப்பு வரை பயிலும் இலட்சக்கணக்கான அரிசன மற்றும் மலைசாதி மாணவ மாணவியர் இத்திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர்.

அரிசன முன்னேற்றத்தில் மிகவும் அக்கறை காட்டிய அண்ணல் காந்தி அடிகளின் நினைவாக, சிறப்பு உபகாரச் சம்பளம் வழங்கும் திட்டத்தையும் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. கல்வி உதவித் தொகை வழங்குவதற்காக மட்டும் கிட்டத்தட்ட மூன்று கோடியே பன்னிரண்டு இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. மருத்துவம், விவசாயம் மற்றும் தொழில் கல்வி, பொறியியல் பயிலும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு உகந்த உபகாரச் சம்பளத்திற்கு மேல் வட்டியில்லாக் கடன் உபகாரச் சம்பளத் திட்டமும் 1971-72-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது. அரிசன மாணவர்கள் மத்திய அரசு உபகாரச் சம்பளம் பெறத் தகுதியானது அவர்களது பெற்றோர்களது வருமானம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.9,000-க்குள் இருத்தல் வேண்டும்.

அரிசன மாணவ, மாணவியரைச் சேர்த்துக்கொள்ளும் அரிசன நலத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு அரசு மான்யம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் பள்ளி இறுதியாண்டுத் தேர்வில் அதிக மதிப்பெண்களும், அதற்கு அடுத்தப்படியாக அதிகப்படியுள்ள மதிப்பெண்களும் பெற்றுதேர்ச்சி பெறும் இரண்டு மாணவர்களுக்கு





மேற்படிப்பில் தகுந்த ஊக்கம் நல்குவதற்குச் சிறப்பு உபகாரச் சம்பளம் வழங்குதல் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 76,500- செலவிடப்பட்டு 120 அரிசன மாணவர்கள் பயனடைந்தார்கள். நடப்பு நிதியாண்டில் இத் திட்டத்திற்காக ரூ. 2,34,000- ஒதுக்கப்பட்டு உள்ளது. 1979-80-ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் மாணவியர்களுக்கும் மற்றும் மலைசாதி மாணவ, மாணவியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு தற்போது தனியார் வீடுகளில் உள்ள மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகளை அகற்றி, அரசு செலவில் விடுதிகள் 'தாட்கோ' நிறுவனம் மூலமாக கட்ட நடவடிக்கை எடுத்து வருகிறது. இதுவரையில் 45 விடுதிகள் முடிக்கப்பட்டுள்ளன.

அரிசன மக்கள் பொருளாதாரத்துறையில் மேம்பாடு கண்டிட, நீர்ப்பாசனக் கிணறு வெட்டுவதற்காகவும், உழவு மாடுகள் வாங்குவதற்காகவும், அரசு நிதி உதவி தொடர்ந்து அளித்து வருகிறது. கைத்தொழில் பயிற்சி பெற்ற ஆதிவாசிகட்கும் அரிசனங்களுக்கும், அவரவர்கட்கு உகந்த தொழில் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

பொருளாதார முன்னேற்றத் திட்டங்களில் மிகவும் முக்கியமானது, தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் அளிப்பதாகும். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்து செலவிடப்பட்டு வருகிறது. சிறு தொழில் நடத்தித் தம்முடைய வாழ்வின் நலனை உயர்த்திக் கொள்ள விரும்பும் அரிசன மலைசாதியினர் இது குறித்து மாவட்ட நல அதிகாரியைச் சந்தித்து உகந்த ஆலோசனை பெறலாம். கடன் பெறக்கூடிய படிவங்கள் அவர் வசம் உள்ளன. பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை முழுமையாக அரிசன நலத்துறையின் மூலம் மட்டும் அல்லாமல், கூட்டுறவுத் துறையின் மூலமாகவும் செயல்படுத்தி வருகிறார்கள்.

**அரிசன மக்களுக்கு வீட்டு வசதி**

அரிசன மக்களுக்கு வீட்டு மனை வழங்க புறம்போக்கு நிலங்கள் இல்லாத இடங்களில் தனியார் நிலத்தைக் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென ஆண்டுதோறும் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுச்செலவு செய்யப்படுகிறது.

வீட்டுமனை வழங்கப்பட்ட அரிசன ஆதிவாசி மக்களுக்குப் படிப்படியாக அரசு இலவசமாக வீடுகளைக் கட்டித் தருகிறது. இரண்டாவது திட்ட காலத்திலிருந்து 1973-74 வரை மான்யம் மற்றும் கடன் திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு வடிவமைப்புகளில் 21560 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது. 1974-75 முதல் ''தாட்கோ'' மூலமாக வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. இதுவரை 'தாட்கோ' மூலமாக 38936 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.


1977-78-லிருந்து அரிசன மக்களுக்குச் சமவெளியில் ரூ.6,000- மதிப்பீட்டிலும் குன்று மற்றும் மலைப்பகுதிகளில் ரூ. 9,000- மதிப்பீட்டிலும் இலவசமாக வீடுகளைக் கட்டித்தருகிறது. ஆண்டொன்றுக்கு ரூ. 220 இலட்சங்களை இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்து செலவு செய்யப்படுகிறது.

ஆதிவாசி மக்களுக்கு இதுவரை 4838 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. இது தவிர தமிழ்நாடு அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் 199 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் எல்லா ஆதிவாசிகள் குடும்பங்களுக்கும் ஏற்ற வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டுவதற்கென எடுத்துக் கொள்ளப்பட்ட 116 வீடுகளில் 31.3.79 முடிய 112 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தீண்டாமை ஒழிப்பிலும் அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது. உயர்சாதியினரால் ஏற்படும் அல்லல்களிலிருந்து அரிசனங்களைப் பாதுகாக்கும் பொருட்டு தென் ஆர்க்காடு, திருச்சி, மதுரை, திரு

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்திவைத்த கலப்புத் திருமண நிகழ்ச்சி ஒன்றை இந்த இதழ் அட்டைப்படம் அணி செய்கிறது.



நெல்வேலி, தஞ்சை மற்றும் கோவை மாவட்டங்களில் நடமாடும் தீண்டாமைக் குற்றம் ஒழிப்புக் காவல் பிரிவு செயல்பட்டு வருகின்றது. தீண்டாமை ஒழிப்பைத் தீவிரப் படுத்துவதற்காகக் கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும்பொருட்டு தங்கப் பதக்கம் பரிசளிக்கப்பட்டு வருகின்றது. கலப்புத் திருமணத் தம்பதிகளில் ஒருவர் அரிசனராகவோ மலைசாதியினராகவோ இருந்து மற்றொருவர் உயர்குடியைச் சேர்ந்தவராகவோ இருத்தல் வேண்டும். இத்தகு தம்பதிகளுக்கு 14 கேரட் தங்கத்தில் 1½ சவரன் எடையுள்ள தங்கப் பதக்கமும், நற்சான்றிதழும், 3 சென்ட் வீட்டுமனையும் பரிசாக அரசு அளிக்கிறது. கலப்பு மணம் புரிந்தவர்களுக்குத் தொழில் புரிய வட்டியில்லாக் கடனும் வழங்கப் படுகிறது. இதுவரை 713 தங்கப் பதக்கங்கள் பரிசளிக்கப்பட்டுள்ளன.



தீண்டாமை ஒழிய சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு ரூ. 1000, ரூ. 500 என முறையே முதல், இரண்டாவது பரிசுகளாக ஆண்டுதோறும், மாவட்டந்தோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் சுமார் ரூ. 21,000 செலவிடப் படுகிறது.

நமது மாநிலத்தில் சுமார் 25,526 அரிசன குடியிருப்புகள் உள்ளன. தற்போது புதிதாகத் தோன்றியுள்ள சில காலனிகள் தவிர அனைத்துக் (25526) காலனிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. அவைகளுக்கு மின் இணைப்பு வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1977-78, 1978-79 ஆண்டுகளில் ஆண்டொன்றிற்றிற்கு 50 குழந்தைகள் காப்பகம் விதம 100 குழநதைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டு செவ்வனே செயல்பட்டு வருகின்றன. 1979-80-ஆம் ஆண்டிற்கு 50 குழந்தைகள் காப்பகங்கள் திறக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் சனவரி திங்களில் தீண்டாமை ஒழிப்பு நாளாக அரிசன நல வார விழா கொண்டாடப்படுகிறது. இத்தகைய விழாக்களுக்கு ஆண்டு தோறும் செலவிடப்படும்தொகை ரூ. 31,000- ஆகும். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14-ஆம் நாள் டாக்டர் அம்பேத்காரின் பிறந்த நாளைத் ''தீண்டாமை ஒழிப்பு'' நாளாகக் கொண்டாடப்படுகிறது. அரிசன மலைசாதி மக்களது வேலை வாய்ப்பினைப் பெருக்குவதிலும் அரசு மிகவும் கவனம செலுத்திவருகிறது. அரசுவேலைகளில் 18 விழுக்காடு அரிசன மலை சாதி மக்களுக்கு ஒதுக்கப் படுகிறது.

தமிழ்நாடு பணியாளர் தேர்வுக் கழகத்தினரால் நடத்தப்படும் அரசு இளநிலை எழுத்தர், தட்டெழுத்தர் போன்ற போட்டித் தேர்வுகளுக்கு எழுதும் அரிசன மலைவாசி நபர்களுக்குச் சிறப்பு பயிற்சியானது இம் மாநிலத்தில் 15 பயிற்சி நிலையங்கள் மூலமாக அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் 60 நபர்கள் பயிற்சி பெற வசதியுள்ளது. பயிற்சியின் மொத்த காலம் 5 மாதங்களாகும். பயிற்சியின் போது பயிற்சிபெறும் நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 45 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 900 நபர்கள் பயனடைவார்கள்.



ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.போன்ற மத்திய பணியாளர்கள் தேர்வுக் கழகத்தினராக நடத்தப்படும் போட்டித் தேர்வுக்குச் செல்லும் அரிசன மற்றும் மலைசாதி நபர்களுக்கும் இலவசமாகச் சிறப்பு பயிற்சியளிக்க முன்னோடிப் பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் இயங்கி வருகிறது. பட்டயக் கணக்கருக்கான பயிற்சித் திட்ட ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்றும் பல நல்ல முன்னேற்றத் திட்டங்களை அரிசன மற்றும் மலை சாதி மக்களின் மேம்பாட்டிற்காக அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக அரசு செவ்வனே செயல்படுத்தி வருகின்றது. அரிசன மக்களும், மலைசாதியினரும் அச்சம், தாழ்வு மனப்பான்மை முதலியவற்றை விடுத்து, சமூகத்தில் நன்மதிப்புடன் வாழ அரசு ஆற்றும் பணிகளை செவ்வனே புரிந்துகொள்வதுடன் அவற்றினைப் பயன்படுத்த உள்ள உறுதியுடன் முன் வரவேண்டும்.

# தீண்டாமை வேண்டாமே!



மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ?
கதிரவன் சிலரைக் காயேன் என்னுமோ?
வாழ் நான்கு சாதிக்கு உணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக்கு உணவு காட்டிலுமோ?
திருவும், வறுமையும், செய்தவப் பேறும்,
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே.
குலமும் ஒன்றே! குடியும் ஒன்றே!
இறப்பும் ஒன்றே! பிறப்பும் ஒன்றே!
வழிபடு தெய்வமும் ஒன்றே! ஆதலால்,
முன்னோர் உரைத்த மொழிதவ றாமல்
எந்நாள் ஆயினும், இரப்பவர்க்கு இட்டுப்
புலையும், கொலையும், களவும் தவிர்த்து,
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து,
ஆணும், பெண்ணும் அல்லதை உணர்ந்து,
பேணி யுரைப்பது பிழையெனப் படாது,
சிறப்பும் சீலமும் அல்லது,
பிறப்பு நலந்தருமோ பேதை யீரே!

—கபிலர்

சாதிப் பிரிவுகள் சொல்லி—அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்



சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.
... ... ... ... ...
வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை.
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்—இங்கு
யாவர்க்கு மொன்றெனல் காணீர்.

நிகரென்று கொட்டு முரசே—இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;
தகரென்று கொட்டு முரசே—பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்.

—பாரதியார்.

உறுதி உறுதி உறுதி
ஒன்றே சமுகம் என்றெண்ணார்க்கே—இறுதி
ஒன்றே சமுகம் என்றெண்ணார்க்கே—இறுதி
உறவினர் ஆவார் ஒரு நாட்டார்—எனல் (உறுதி)
பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை—இந்தப்
பிழைநீக்குவதே உயிருள்ளாரின் கடமை—நம்மிற்



குறைசொல வேண்டாம் உறவினர்பகை நீக்குங்கோள்—உங்கள்
குகையினை விட்டே வெளிவருவீர் சிங்கங்காள்.

—பாவேந்தர் பாரதிதாசன்

தீண்டாமை என்கிற தீய வழக்கம்
தீர தொலைந்திட நல்லநா ளாச்சு!
ஆண்டவன் பொதுவென்று நம்பின யாரும்
அந்தப் பழியை அகற்றிட வாரும்.

இந்த வழக்கம் நாளுக்கு நாளாய்
இந்து மதத்தினை வெட்டுது வாளாய்;
நிந்தை மிகுந்து அழிந்திடு முன்னே
நீங்கிட யாரும் எழுந்திடும் இன்னே!

வேதத்தி னில்லை கீதையில் இல்லை
வேறுள சாத்திரம் யாருக்கினி?
சாதித்து யாரையும் சண்டாள னென்றிடும்
சாத்திரம் சத்தியச் சம்மதமோ?



—நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை

தீண்டாமைப் பேய் அறிவீரோ—அதன்
சேட்டைகள் முற்றும் தெரிந்திடுவீரோ!

பண்டுபண் டேயுள்ள பேயாம் —இந்தப்
பாரத நாட்டைப் பாழ் ஆக்கிய பேயாம்
சண்டைகள் மூட்டிடும் பேயாம்—அது
சாத்திரி மார்பூசை கொண்டிடும் பேயாம்.



கோவிலின் வாசற் படியில்—நிதம்
கும்மாளி கொட்டிக் குதித்தாடி நிற்கும்
வாவிக் கரையிலும் நிற்கும்—அங்கு
வந்த மனிதரை ஓட்டித் துரத்தும்.

முன்னம் பெரியோர் இதனை—வெட்டி
மூடிப் புதைத்தும் உயிர்வலி கொண்டு
பின்னும் முளைத்ததே ஐயா—இது
பேய்களும் அஞ்சும் பெரியபேய் ஐயா.

இப்பெரும் பேய்இனி மேலும்—நமது
இந்திய நாட்டில் இருந்திட லாமோ?
கப்பலில் ஏற்றிடுவோம் ஐயா—நடுக்
காயல் கடல்கண்டு தள்ளுவோம் ஐயா.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

நீங்களே கண்டுகொள்ளுங்கள்

# மின்னலடிக்கும், ஸூப்பர் ரின் வெண்மை.. இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை







வேளை தவறாமல் உபயோகியுங்கள் ஸூப்பர் ரின், எத்தகைய வெள்ளைவெளேர் சலவை கிடைக்கிறது பாருங்கள்—இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை அது. காரணம், மேம்பட்ட வெளுப்பூட்டும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின். நீங்களே கண்டுகொள்ளுங்கள்.




**இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் விட அதிக வெளுப்பூட்டும் சக்தி.**

லின்டாஸ்-RIN 34-2317 TM (RR)

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

# 1924ல் தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து தந்தை பெரியாரின் அறப் போர்!

தந்தை பெரியார் மறைவதற்கு 4 மாதங்களுக்கு முன்னர் வானொலியில் அளித்த பேட்டி: பேட்டி கண்டவர் திரு. ஜி. சுப்ரமணியம்

சுப்பிரமணியன்:

வணக்கங்க!

பெரியார்:

வணக்கம்.

சுப்பிரமணியன்:

உங்களைப் பாத்ததிலே ரொம்ப மகிழ்ச்சி. வயதானவங்களைப் பார்த்தாலே ரொம்ப பாக்யம்னு சொல்லுவாங்க. நீங்கள் இவ்வளவு ஆண்டுக் காலம் இருந்து சமூகத்துக்கும் இந்த நாட்டுக்கும் செய்யற பணியை யாருமே மறக்க முடியாது. அப்படிப்பட்ட மகத்தான பணியை நீங்க செஞ்சிருக்கீங்க அப்படின்னு சாதாரண ஆட்களான நாங்கள் சொல்லக்கூடாது. அதைச் சொல்றதுக்கும் ஒரு தகுதி வேணும்.

பெரியார்:

என்னமோ அய்யா! எல்லாம் அப்படி நினைக்கிறீங்க, கௌரவத்துக்காக.

சுப்பிரமணியன்:

நான் மட்டும் நினைக்கலை.

பெரியார்:

நான் என்னமோ என்னுடைய கடமையைச் செய்யறேன். ஏதாவது பயன்படுதல் என்ற முறையிலே வாழ வேண்டுமே என்று



இருக்கிறேன், அவ்வளவுதான். நான் இன்ன இன்னதுதான் செய்தாகனுங்கறது கணக்கில்லை. இருக்கிறதனாலே செய்யறேன். ஏதோ செய்துக்கிட்டு இருக்கிறேன். அவ்வளவுதான்.


சுப்பிரமணியன்:

வைக்கம் போராட்டத்திலே அய்யா ஈடுபட்டீங்களே அதைப்பத்தி கொஞ்சம் விவரமாச் சொல்லுங்க.

பெரியார்:

தீண்டாமை எதிர்ப்பு வேலையிலே நான் அப்ப முக்கியஸ்தனா போயிட்டேன். நிர்மாணத் திட்டத்தைப் பத்தி எடுத்து பேசறதிலே இந்தியாவிலே வெகு பேருக்கு அது புரியவே இல்லை. ராஜாஜி இதை முக்கியம் பண்ணினதாலே, தமிழ்நாட்டிலே அது ரொம்பப் பெரிசாப் போச்சு. வளர்ந்துட்டுது. இதுக்குள்ளே நானே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு செகரட்டரி ஆனேன். பின்பு நானே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவனானேன். தீண்டாமை எதிர்ப்புப் பிரச்சாரம் பெரிசா பிரச்சாரமாகிப் போச்சு. அது ப்ரபலமாகவும் போய்விட்டது.

இந்த நிலையிலே மலையாளத்திலே அது தமிழ்நாட்டோடதானே இருந்தது .... திருவனந்தபுரம். ஆனால் ராஜாவோட ஸ்டேட். அந்த இடத்துலே ஈழவருன்னு ஒரு கம்யூனிட்டி உண்டு. அவங்க சாதாரணமா இங்கத்து நாடார் போல அங்க; ட்ரீட்மெண்ட் இங்க நாடாரைவிட கடினம். ஆனா அவங்களைக் கடினமாக இழிவுபடுத்தி வந்தாங்க. அவங்க நிழலுகூட மேலே கூடப்படக்கூடாதுன்னு சொல்லுவாங்க. அந்த மாதிரியெல்லாம் — அதையும் சகிச்சுக்கிட்டு இருந்தாங்க. இங்கத்து விளம்பரம் பெரிசான உடனே அவங்களுக்கு ஒரு எண்ணம் வந்தது. அந்த எண்ணம் வேணும்னு வரலே, இயற்கையாக வந்து சேர்ந்தது. அந்த ராஜாவோட பிறந்தநாளுன்னு கொஞ்ச நாள் வருஷந்தோறும் கொண்டாடுவாங்க. அந்தப் பிறந்தநாள் கொண்டாட்டம்கறது ஒரு கொட்டகை இருக்கும். பொது இடமாக கோர்ட் எல்லாம் அங்கேதான் இருக்கும். அந்த இடத்திலே பிறந்தநாள் கொண்டாடறது வழக்கம் இது



வரைக்கும் கொண்டாடித்தான் வந்திருக்காங்க. அந்த வருஷமும் கொண்டாடினாங்க. அந்தக் கொண்டாடுற காலத்திலே அங்கே அந்த ஈழவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் யாவரும் நடக்கக் கூடாது.

அந்த வருஷம் நடந்தபோது அங்கிருக்கிற கோர்ட்லே ஈழவர் என்ற சுமாரான குடும்பத்தைச் சேர்ந்த வக்கீல் உள்ளே வரக்கூடாதுன்னு பகிஷ்காரம் பண்ணிட்டாங்க. இதுக்கு முன்னே அதுக்கு இணங்கியவர்தான். அந்தத் தடவை செய்த உடனே உணர்ச்சிமிக்கதினாலே அவர் அதைக் குறைவாக நினைத்து சில பேரோடு சேர்ந்து யோசனை பண்ண ஆரம்பித்தார். அப்போ காங்கிரஸில் பிரபலமாக இருந்த ஆட்களோட அவர் என்ன செய்தார், மீற வேண்டியதுதான் என்று முடிவெடுத்தார். அதாவது வேண்டாங்கறதை மீறணுங்கறது. ஜார்ஜ் ஜோஸப்புன்னு ஒருத்தர் இருந்தார். அவரு தமிழ்நாட்டிலே செல்வாக்கா இருந்தார். அங்கே அவருதான் சொந்த ஊர் சம்பனூருன்னு அதைச் சேர்ந்த பாகம்தான் அது. அவரையும் கலந்து என்ன செய்வது என்று கேட்டார்கள். தடையை மீறவேண்டியதுதான் என்று சொல்லிவிட்டார்கள்.

எங்கே மீறலாம், என்ன பண்ணணும், கொட்டாரத்துக்குள்ளே போகக்கூடாது. ஒரு இடம் செலக்ட் பண்ணலாம். பொதுஜனங்களுக்குப் பட்டு இருக்கிற மாதிரின்னு வைக்கத்தை அவங்க செலக்ட் பண்ணினாங்க. வைக்கத்தை செலக்ட் பண்ணினதுக்குக் காரணம் என்னன்னா அங்கே வைக்கத்தப்பன்கோவிலுன்னு ஒரு கோவில் இருக்கு. இந்தக் கோயில் மதில்—இந்த மதில் நாலு பக்கம் சுற்றி ஒரு மைலுக்கு. 1½ மைலுக்கு, 4 பர்லாங்குக்கு இப்படி வீதி இருக்கு. அந்த வீதியிலே ஜனங்க இருக்கறாங்க. சவர்

னாங்கற நல்ல ஜாதிக்காரங்க இருக்காங்க. அந்த சந்தர்ப்பத்திலே இந்த காரணத்தை அடிப்படையாக வைச்சு அந்த வீதியிலே இவங்கள்ளெல்லாம் (ஈழத்தவர்) போகக்கூடாது. ஆனால் அங்க முஸ்லீம், கிறிஸ்தவர்கள் போகலாம். ஆனால் ஈழத்தவர் போகக்கூடாது. பொறுத்துக்கொண்டே இருந்திருக்கிறார்கள். அங்கே கோர்ட்கூட இருக்கு. அங்கே அதிகாரிகளும் ஈழவராகப் போடமாட்டார்கள். பியூனையும் ஈழவராகப் போடமாட்டார்கள். குமாஸ்தாக்களாக போடமாட்டார்கள். அதுக்கு அவங்களும்வருத்தப்படமாட்டாங்க. ஆனாலும் அப்படி இருந்த ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து மீறதுங்கற எண்ணத்திலே புறப்பட்டாங்க. அதுலே 17 பேர் அந்தக் கூட்டத்திலே சேர்ந்தாங்க. பெரிய ஆட்களாகச் சேர்ந்தாங்க. அந்த 17 பேரும்னு சேர்ந்து ஆரம்பிச்சாங்க. தினமும் ஒண்ணு, ரெண்டு பேரா பிடிச்சு 17 பேரையும் ராஜா உள்ளே போட்டுவிட்டார். 18-வது போவதற்கு ஆளில்லே. ரகசியம் சொல்றேன். ஆளில்லாம போச்சு. அப்பொழுது ஜோஸப் இங்கே எனக்குக் கூட்டாக உதவியாக இருந்தவர் ஆதலால் அவரு ஜெயிலிலிருந்து எனக்கு ஒரு கடிதாசு எழுதினாரு. 'ராமசாமி இங்கே நிலை இப்படி ஆகிவிட்டது; பட்டுவிட்டோம். நீ இங்கு வந்து எங்களை விடுதலை செய்தால் உண்டு; இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வரவேண்டியதுதான். இல்லாவிட்டால் அதை நிறுத்திவிட வேண்டும். கடினமாகஇருக்கு' அப்படீன்னு ஒரு கடிதாசு ரகசியமாக எழுதினாரு.

இந்தக் கடிதாசு வந்தபொழுது நான் மதுரையிலே பண்ணைபுரங்கற ஊர்லே பிரச்சாரம்பண்ணிக்கிட்டிருக்கேன். கடிதாசியை கையிலே கொடுத்தாங்க. அவ்வளவுதான். உடனே நேராக ஊருக்குவந்தேன். ராஜாஜிக்கு ஒரு கடிதம் எழுதினேன். இந்த மாதிரி லெட்டர் வந்திருக்கிறது, நான் போகிறேன் என்று உடனே புறப்பட்டுப், போய்விட்டேன், வைக்கத்துக்கு! போன இடத்திலே ஒரு வேடிக்கைதான். அந்த ஊர் டெபுடி கலெக்டரும் போலிஸ் கமிஷனரும் ''Pit இங்கிறவரும் என்னை வந்து வரவேற்று T.B.யில் கொண்டாந்து இறக்கி எனக்கு ஒரு ஆளைப் போட்டு எனக்கு வேண்டிய வேலைகளுக்கு ஏற்பாடு செய்தார்கள். நீங்க சர்க்காருக்கு விரோதமா இருக்கிறீங்க அப்படிங்கற எண்ணம் சர்க்காருக்கு இல்லை' அப்படின்னு எனக்குச் சொல்லிவிட்டுப் போயிட்டாங்க. அந்த மாதிரி அவரு செய்யறதுக்குக் காரணம் என்னன்னா அதுக்கொரு 15 20 நாளக்கு முன்னாடிதான் திருவாங்கூர் மகாராஜா, நம்ம பங்களாவிலே இறங்கிட்டு குளிச்சு சாப்பிட்டுவிட்டு மதராஸ் போனார். அதுலே திருவாங்கூர்லேருந்து மதராசுக்கு அப்போ அந்த வண்டி இல்லை. இந்த வண்டி வந்ததுன்னா ஈரோட்டிலே இறங்கி ஆகணும். அது அப்ப நம்ப பங்களா ரயில்வே ஸ்டேஷன் ஓரத்திலே இருந்தது. அதிலே இருந்தாங்க. அவர் போகிறபொழுது எங்களுடன் பேசிவிட்டு எங்களுக்கு ஆளுக்கொரு சால்வை கொடுத்துட்டுப் போனாரு. போன 15 நாளைக்குள்ளே இந்தச் சம்பவம் நடந்ததுனாலே அவரு என்னை ரொம்ப மரியாதையாக வைச்சு அனுப்பணுங்கறதுக்காக செஞ்சார். இப்படி ஆகுமென்று நினைக்கவில்லை. நான் போனேன். போன உடன் அதேமாதிரி கூட்டத்திலே பேசினேன். என்னை அரெஸ்ட் பண்ணுவாங்கன்னு நினைச்சாங்க. அரெஸ்ட் பண்ணவில்லை. ராஜாவுடைய ஆட்கள் வரவேற்றார்கள். இதைப்பார்த்த உடனே பாமர ஜனங்களுக்கு என்னமாயிட்டுது, இவருக்கு ராஜாவே ஆதரவுங்கற மாதிரி போச்சு, கூட்டம் அதிகமாச்சு; வலுத்தது. 10,000 என்று சொன்னால் அது அதிகம் இல்லை. அவ்வளவுகூட்டம், ராஜா பொறுக்கும் வரையில் பொறுத்துப் பார்த்தார். அப்புறம் முடியவில்லை. செய்ய வேண்டாம் என்று சொல்வோம். கேட்காவிட்டால் அரெஸ்ட் பண்ணிவிடுவோம், என்று ராஜா நினைத்தார். அரெஸ்ட் பண்ணிக் கூட்டிப் போனார்கள். போன உடனே 1 மாதமோ என்னமோ தண்டித்தார்கள். அதுவும் ஒரு இடத்திலே தனியாக வைத்திருந்தார்கள். ரிலீஸ் ஆகி வந்தேன். என்னென்னா ஜெயில்லே வைக்கவில்லை. அயக்குட்டின்னு ஒரு இடம். அங்கே போலீஸ் ஸ்டேஷன். அங்கே வைத்து ஓட்டல்லே இருந்து சாப்பாடு வரும். அது முடிந்து வந்தவுடனே நான் போகமாட்டேன்னு கவர்னர் நினைச்சார். எப்படி போகாமல் இருக்க முடியும்? மறுபடியும் அந்தக் காரியத்துக்குப் போனேன். ஒரு வாரத்துக்குள் மறுபடியும் அரெஸ்ட் பண்ணிட்டாங்க. அரெஸ்ட் பண்ணி 6 மாதம் போட்டுவிட்டார்கள். அவங்க 6 மாதத்துக்கு வைக்கத்துலேருந்து திருவனந்தபுரம்சென்ட்ரல் ஜெயிலுக்குக் கொண்டு வந்து வைத்து விட்டார்கள். அங்கிருந்தேன். இருந்தபொழுது ரொம்பவும் செல்வாக்காக ஆகிவிட்டது. இரண்டு மூன்று காரணத்தினால் நான் ஜெயிலில் இருந்த பொழுது சத்ரு சம்ஹார யாகம் ஒன்றுநடத்தினார்கள். ராஜா ஒத்துக் கொள்ளவில்லை. அப்புறம் ஒருவர் தலைமையேற்று யாகத்தை நடத்தினாராம். ஜெயில்லே நாங்கள் சிரிச்சிக்கிட்டு இருந்தோம். இப்படி இருக்கிற போது 2 நாள்தான் வித்தியாசம் இருக்கும். ராஜாவுக்கு உடம்பு சரியில்லைன்னு சொன்னாங்க. அதை நாங்கள் அவ்வளவு முக்கியமாகக் கேட்கவில்லை. நடுஜாமத்திலே வேட்டு அதிர்ந்தது. என்னவென்று விசாரித்தோம். ராஜா திருநாட்டிலே இருந்து விட்டார் என்று சொன்னார். திருநாட்டிலே இருந்துட்டார்னா செத்துப் போனார்னு அர்த்தம். ராஜாவே செத்துப் போய்விட்டார். இருந்தும் நாங்க ஜெயிலில்தான் இருந்தோம். ராஜா செத்ததை முன்னிட்டு ராணி அம்மா பதவிக்கு வந்து கைதிகளை எல்லாம் விடுதலை செய்யணுன்னு சொல்லிட்டாங்க. செத்த 17 நாளிலே என்றுநினைக்கிறேன் விடுதலை பண்ணிட்டாங்க. அந்த விடுதலையிலே நாங்க, 17, 1, 18பேரும் சேர்ந்தோம் நாங்க வெளியிலே வந்தோம்.

சுப்பிரமணியன்:

அதுலே தமிழ்நாட்டிலேருந்து அய்யாகூட யாராவது இருந்தாங்களா?

பெரியார்:

இருந்தாங்க. இரண்டு மூன்று பேர் இருந்தாங்க. ஒரு அய்யங்கார் இளைஞர். கால் கொஞ்சம் மொண்டியாக இருக்கும். பெயர் தெரியவில்லை. அந்த ஆள், மற்றும் பொள்ளாச்சிக்காரர் 3 பேரையும் அங்கே வைச்சிருந்தாங்க. 2-வது தடவையில் நான் மாத்திரந்தான் இருந்தேன். என்னைத்தான் அங்கே வைச்சிருந்தாங்க.

சுப்பிரமணியன்:

உங்களை காந்திஜி, நீங்க இதிலே பங்கெடுத்துக்கிட்ட தாலே உங்களை வைக்கத்து வீரர் அப்படின்னு...

பெரியார்:

மன்னிக்கணும். . . அவரு சொல்லவும் இல்லே. ஒண்ணு மில்லே-இது நடந்தது. ஞாப கம். ரொம்பக் கோளாறாக இருக்கிறது. அது ஆன உடனே எங்களை ரிலீஸ் பண்ணினாங்களா? ரிலீஸ் பண்ணின உடனே எனக்கு ஒரு எல்லையைக் காட்டி 6 மாதத்துக்கு அதுக்குள்ளே போகக்கூடாதுன்னு ஒரு தடை விதிச்சிட்டாங்க. அந்த எல்லையை விட்டு விட்டு நான் மற்ற இடத் தைத் தேர்ந்தெடுத்துப் பிரச் சாரம் பண்ணிக் கொண்டு இருக்கணும். அப்போ இருந்த ஓர் ஆந்திரக்காரர் திவான், என்னமோ அய்யா, அவர் திவானாக இருந்தபோது நாங்கள் எங்களுடைய வேலை யைத் தொடர்ந்து செய்து கொண்டே இருந்தோம். இது அடங்குவதாக இல்லை. இது நடக்கும்போது ரொம்ப வேடிக்கையெல்லாம் நடந் தது. காந்திஜி இதற்கு நேர் விரோதமாக இருந்தார். பஞ் சாபிலே இருந்த சீக்கி யர்கள் நமக்கு உதவி புரிந் தார்கள். பணம் கொடுத் தார்கள். அரிசி பருப்பெல் லாம் போட்டார்கள். இதற் குள்ள சத்தியாக்கிரஹ கொட்டகை 100 அடி நீளத் திற்கும் பெரிதாகப் போட்டு 200, 300 பேர் சாப்பிடுவது போல் ஆகி பண்டிகை மாதிரி தடபுடலாகஎல்லாம் வளர்ந்து விட்டது. அந்த மறியல்லே இவங்க காந்திஜி கிட்ட, சொல்லி, காந்தி சீக்கிய னுக்கு இங்கே வேலை இல்லை போகச்சொல்லு. முஸ்லீம் இதிலே கலக்கக் கூடாது; கிறிஸ்தவர்கள் இதிலே கலக் கக்கூடாது; தனியா நீந்தக் கூடிய விஷயம் அப்படி என்று சொல்லி மிகவும் மட்டம் தட்டுவதற்கு எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவு பண்ணினார். ராஜாஜிக்கு இஷ்டமில்லை. ''நீ வந்து விடு. வேறே ஆளைப்போட்டு பார்த்துக்கலாம். அங்கே விட்டு விட்டு இங்கிருப்பது சரியில்லே. ஜனங்களுக்குத் திருப்தி இல்லை. வந்துவிடு. எனக்குச் செல்வாக்காக இருக் குது. எல்லாக் காரியம் நடக் கும்போல் இருக்குது.'' சீனி வாச அய்யங்கார் வந்து கூப் பிட்டார். அங்கே வந்து விடு. 'இங்கே வேண்டாம் என்று. இருந்தாலும் ஒன்றும் கேட்க வில்லை. நடத்திக் கொண்டு தான் இருந்தோம். நடத்தின திலே நான் துணிஞ்சுதான் இருந்தேன். கடைசியாகச் சொல்றேன். கவர்மெண்டுக்கு இது வளருது, அதனாலே இது அனுமதிச்சிட வேணும் அப்படீங்கிற எண்ணம் மஹா ராணியாருக்கும் வந்துட்டுது. அந்த அம்மா சரி.. இதிலே ராஜாஜி செய்த காரியம் என் னன்னா ராகவைய்யான்னு இருந்தாரா, அந்த ஆள் என்னபண்ணினார், ராஜாஜிக் குத் கடிதாசு எழுதினார். அர சாங்கத்திலே இதுக்குச் சம் மதிச்சுட்டாங்க. இதை ஒழிச் சுக் கட்டிடலாம். நீ உடனே புறப்பட்டு வா பேசற அன் னிக்கு அப்படீன்னார். ராஜாஜி என்ன பண்ணினார், நமக்கு இதிலே ஏதாவது பெருமை வந்துடும்னு நினைச் சிட்டு ''காந்திக்குத்தான் எழுதிக் கேட்கணும்'' காந்தி வேண்டாம் என்று சொன்ன வர். காந்திக்கு இதிலே சம் பந்தமே இல்லை. அரசாங் கம் ராஜிக்கு வந்துட்டுது. கூப்பிட்ட உடனே இவர் வாங்கிக்க வேண்டியது தான்; அப்புறம் காந்திக்கு எழுதி னார். காந்தி அங்கிருந்து வந் தார். வந்தவுடனே இந்த மாதிரி சம்மதிக்கறாங்கன்னு தெரிஞ்ச உடனே ''சம்மதம் கொடுக்கணும்னா. ராமசாமி தானே அதிலே ஈடுபட்டுக் கிட்டிருக்கான். அவனைக் கேட்காத சம்மதம் கொடுத்தா அவன் தொடர்ந்து சத்தியாக் கிரகம் நடத்தினா என்ன பண்றது? அதனாலே அவனைக் கேட்டுக்கிட்டா தேவலாம்''னார். அப்புறந் தான் என்னை இந்த விஷ யத்திலே கலக்க ஆரம்பிச் சாங்க. காந்திதானே....அப் பவும் அவர் காந்தியாகத்தான் இருந்தார். நான்அவர்கிட்டே போனேன். என்ன ராமசாமி அவர்கள் இந்தமாதிரி சொல் றாங்களே. ஒத்துக்கிட்டுப் போக வேண்டியது தானே என்ன செய்வது என்று கேட் டார். எனக்கு ஒன்னும் ஆட்சேபனை இல்லை என் றேன். அப்புறம் அந்த அம்மா கிட்ட கூப்பிடறாங்கன்னு சொன்ன உடனே காந்தியைத் தான் கூப்பிட்டாங்க அந் தம்மா. ராஜாஜியைக் கூப் பிட்டார்கள். என்னைப்பத்தி இல்லே. ஆனாலும் காந்தி எனக்குச் சம்மதம் இருக்கற தாகக் காட்டிக்கிட்டுப் போக ணுங்கறதுக்காக என்னைக் கூப்பிட்டுக் கேட்டார். அவர் ஒரு இடத்திலே இறங்கினார். நான் ஒரு இடத்திலே இறங்கி இருந்தேன். அவர் திருவ னந்தபுரம் கொட்டாரம்னு ரயில்வே சமுத்திரக்கரை ஓரம் இருக்கு. அங்கிருந்தார். நான் ஒரு இடத்திலே இறங்கி இருந்தேன். என்னைக் கேட் டார். எனக்கு ஒன்றும் ஆட் சேபனை இல்லீங்கன்னு சொன்னேன். நான் போய்ப் பேசலாமா என்றார். போய்ப் பேசுங்களேன் என்று சொன்னேன். போனார். பேசினார். என்ன பேசி னாங்க அந்த அம்மா அப்ப டீன்னா, இது ஆனா கோவி லுக்குள்ளே அடுத்தாப்பலே போறேன்னு பேசிக்கிட்டிருக் காரு. அது செய்யக்கூடாது. கோயில் பிரவேசத்தைப் 'பத்திக் கிளர்ச்சி பண்ண லைன்னு சொன்னா இப்பவே இதுலே நான் தலையிடலை. அவர் உடனே நானிருந்த இடத்துக்கே வந்தார். இந்த மாதிரி, கோவில் பிரவேசத் துக்குப் போகக்கூடாதுன்னு அந்த அம்மா சொல்றாங்க. அதுக்கு நாம என்ன சொல்ற துன்னு அவரு சாதாரணமா கேக்கறாப்பலே கேட்டார். நான் சொன்னேன். நம்ம லட்சியம் கோயில் வரைக்கும் தானே. தெருவில் போய்க் கிட்டிருந்தா என்ன ஆகும்? இந்த பேதம் ஒழியணுங்கிற துக்குத்தானே செய்யற கிளர்ச்சி. ஆனா இப்போ அதைப்பத்தி நான் பிரஸ் பண்ணறது இல்லே. மக்களை அதுக்குப் பக்குவப்படுத்திக் கிட்டுத்தான் செய்யணும். ''அப்படிச் சொல்லலாமா'' என்றார். நல்லா சொல்லுங்க என்றேன். இவர் போனார்; 'இல்லேன்னு சொன்னார்.'' அந்த அம்மா அப்பொழுதே அனுமதிச்சுட்டாங்க. இப்ப அனுமதிச்சுட்டார். ஒரு இடத்திலே கொஞ்சம் தக ராறு இருக்குது. அது வேலி போடறவரைக்கும். அதாவது ஒரு இடத்திலே என்ன தக ராறுன்னா கோயில் சம்பந்த மான குளம் அங்கிருக்கு. அந்த ரோட்லே அதுதீட்டாப்போயி டுது. கோயிலுக்குள்ளே போறாப்பலே ஆயிடும். அதுக்கோசரம் அதையும் சேர்ந்துக் கோயில் கட்டடத் தோடே வேலி போட்டு அதுக் கொரு 3 நாளோ 4 நாளோ வாய்தாக் கேட்டு அதைச் சேர்த்து அவங்க வேலி போட்டுட்டாங்க. அப்புறம் போகலாம் என்றார்கள். எல் லோரும் போய் விட்டார்கள். அந்தக் காரியம் முடிந்துவிட் டது. அப்புறம் கோயிலுக் குப் போறதைப் பத்தி அப்போ ஒண்ணும் இல்லை.

இது முடிஞ்ச உடனே பிரச்சாரம் பண்றதுக்கு ஆரம்பிச்சேன். அங்கே இங்கே அதுக்குள்ளே கோளாறு என்ன ஏற்பட்டுப் போச்சுன்னா சி. பி. ராமஸ்வாமி அய்யர் திவானா வந்தார். அவர் ரொம்பத் தந்திரமாகச் சரி செய்தார். அவங்களுக்குள்ளே ஏதோ கோளாறாக ரகளையானது. இவங்க போட்ட உத்திரவாலே கோயில் தவிர மற்றபடி உள்ள இடங்களிலே பேதமில்லை. எல்லோருக்கும் செல்றதுக்கு உரிமை உண்டு அப்படீன்னு போட்டாங்க. உரிமை இல்லாதபோது நடந்துக் கிட்டிருந்த சில இடங்களிலெல்லாம் இது வந்த உடனே ஆதிதிராவிடர்கள் எல்லாம் போக ஆரம்பித்தார்கள். இவர்கள் போன உடனே நாயர்மார்களுக்கு ஆத்திரம் பொறுக்க முடியல்லே. ஆதிதிராவிடன் எல்லாம் இங்கே வந்தாயே என்று அவர்களை அடித்தார்கள். இவர்களும் அவர்களைத் திருப்பி அடித்தார்கள். ஒரு ஆள் இறந்தார் எதிர்க்கட்சியிலே. அவர் யாரென்றால் ஈழவனாகவோ ஆதிதிராவிடனாகவோ இருந்து முஸ்லீமாக மாறினவர். அடித்த உடன் கலகம் ஆகி ஒரு ஆள் உயிரிழந்தார். கலகம் பலம் ஆகும் போலிருந்தது. சி. பி. இதை தந்திரமாக இதை வந்து ஜாதி கலகம்னு சொல்லாம தொழிலாளர் கலகம்னு சொல்லுங்கோ அப்படின்னு சொல்லி பேப்பரிலே தொழிலாளர் சண்டையினாலே ஒருத்தருக்கொருத்தர் அடிதடி ஆகிவிட்டது, என்று போட்டு உடனடியாக அந்த அம்மா கோயில் பிரவேசத்துக்கு அனுமதி போட்டுவிட்டாங்க. கோயில்லே கர்ப்பக்கிரகம் ஒண்ணைத் தவிர கோயில்லே எந்த இடத்திலும், சத்திரம், சாவடி சகலம் எல்லா ஜாதிக்காரர்களுக்கும் இந்துக்களுக்கும் அனுமதி உண்டுன்னு அந்த அம்மா ஆர்டர் போட்டுவிட்டார்கள். அதுதான் கோயில் பிரவேசம்.

சுப்பிரமணியன்:

அய்யா ரொம்ப சிரமத்தைப் பாக்காம இந்த தள்ளாத வயதிலே ஏதோ,... ரொம்ப உங்களுக்கு நாங்க சிரமம் கொடுத்திட்டோம்.

பெரியார்:

இவ்வளவு சொல்ல வேண்டியதில்லே. சொல்லக் கடமைப் பட்டிருக்கேன்.

சுப்பிரமணியன்:


ரொம்ப நன்றிங்க. வணக்கம்.

(திருச்சி வானொலி நிலையத்தில் 7.8.1973 அன்று ஒலிப்பதிவு செய்யப்பட்டு, 18.10.1973 அன்று ஒலி பரப்பப்பட்ட பேட்டியில் 'வைக்கம் போராட்டம்' குறித்த பகுதிகள் இங்கே இடம் பெற்றுள்ளன.)

## மன நிறைவைத் தரும் பணி!

—முன்னாள் அமைச்சர்

பி. கக்கன்



ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தைக் காண அண்ணல் காந்தியடிகள் கனவு கண்டார்.

தீண்டாமை ஒழிப்புக்காகப் பேசியும், எழுதியும் பல தலைவர்கள், சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை உண்டாக்க அரும்பாடுபட்டார்கள்.

மகாத்மா காந்தியடிகள், அம்பேத்கார், காமராசர் போன்றவர்கள் இதற்காக அல்லும் பகலும் உழைத்தார்கள்.

'சாதிகள் இல்லையடி பாப்பா—குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்ற மகாகவி பாரதியின் வாக்கை மெய்ப்பிக்கின்ற வகையிலே, இன்று தமிழக அரசு, அரிசன நலனுக்காகப் பல்வேறு ஆக்கப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றது.

அரிசன மக்கள், பழங்குடியினர் மேம்பாட்டுக்காகத் தமிழக அரசு ஆற்றி வருகின்ற பல சிறப்பான பணிகள் மன நிறைவைத தருகின்றன.


கல்வி, தொழில், வீட்டுவசதி போன்ற பலப்பல வசதிகளை—வாய்ப்புகளை அரசு அளித்து வருவதை நாம் பாராட்ட வேண்டும்.

கிராமங்களில் அரிசனக் காலனிகளில் குடிநீர் வசதி, மின்வசதி போன்ற பணிகளையும் இன்றைய அரசு துரிதமாகச் செய்து வருகின்றது.

'சமுதாயத்தில் எல்லாரும் சமம்' என்கிற தத்துவத்தை உணர்த்துகின்ற வகையில் பணியாற்றி வருகின்ற தமிழக அரசுக்கு என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழரசு' வெளியிடுகின்ற அரிசன நலச் சிறப்பிதழ், சிறந்து விளங்கிடவும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# காகிதம் பொன்போன்றது அதனை வீணாக்காதீர்கள்!



இன்று கல்வி வளர்ச்சிக்கும் செய்தித் தொடர்புக்கும் இன்ன பிறவற்றிற்கும் காகிதம் இன்றியமையாததாகி விட்டது. வருங் காலச் சந்ததியினரின் அறிவு வளர்ச்சிக்கும் காகிதம் பெரிதும் பயன்படும். காகிதம் பற்றாக்குறையினால் அதன் அருமையை மேலும் உணரும் காலம் வந்துவிட்'_து. எனவே காகிதத்தை பயன்படுத்துவதற்குமுன் நன்கு திட்டமிட வேண்டும்.

- செய்திகளைச் சுருக்கமாக எழுதுங்கள்.
- ஒரு பக்கம் பயன் படுத்தப் பட்ட காகிதங்களை பத்திரப் படுத்தி, மீண்டும் பயன் படுத்தலாம்.
- மாணவர்கள் பழைய நோட்டுப் புத்தகங்களில் பயன்படுத்தாத காகிதங்களை ஒன்று சேர்த்து குறிப்பேடு களுக்குப் பயன்படுத்தலாம்.
- ஒரு பக்கத்தில் அச்சிடப்பட்ட அழைப்புகள், நாட்காட்டித் தாள்கள், இவற்றையும் வீணாக்கிவிடாமல் சேர்த்து மறுபக்கத்தில் எழுதுங்கள்.



- சினிமா, நாடக, பொதுக் கூட்ட, கலை நிகழ்ச்சிகள் பற்றிய விளம்பரச் சுவரொட்டிகளை மிகவும் சிக்கனமாகப் பயன் படுத்துவது நல்லது.



இப்படியெல்லாம் நாம் எல்லாத் துறைகளிலும் சிந்தித்துத் திட்டமிட்டுக் காகிதங்களைச் சிக்கன மாகப் பயன்படுத்துவது அவசியமாகிவிட்டது.

## இப்போது காகிதத்தைச் சேமிப்போம்! எதிர்காலச் சந்ததியினருக்கு உதவுவோம்!

இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

m88 DIPR16

# மின்சாரக் கட்டுப்பாடு — புதுக் கருவி கண்டுபிடிப்பு!

குளிர்சாதன எந்திரத்தை இயங்கப் பண்ணினால்தான் உறக்கம் வரும் போலிருக்கிறது போட்டு விட்டுத் தூங்கிவிடுகிறோம். விடியற் காலத்தில் குளிரால் உடம்பு நடுங்குகிறது. இதனால் தூக்கம் கெடுகிறது.

கிராமாந்தரங்களில் உள்ள தெரு விளக்குகள் மாலை ஆறுமணியளவில் போடப்படுகின்றன. காலையில் அதை ஒருவர் வந்து அணைக்க வேண்டுமென்ற நிலை, அவர் வராவிட்டால் விளக்குகள் எரிந்து கொண்டேயிருப்பதால் மின்சாரம் பாழாகிறது.

இரவில், வானொலியை முடுக்கி விட்டு இசையில் மயங்குகிறோம். ஒலிபரப்பு முடிவதற்கு முன்பேயே உறங்கி விடுகிறோம். வானொலிப் பெட்டி, துண்டிக்கப்படாத மின் சாரத் தொடர்பால் பல விபரீத விளைவுகளை உண்டாக்கி விடுகிறது.

இதற்கெல்லாம் நிவாரணமே கிடையாதா என்றால், ''உண்டு'' என்று கூறி, தான் முயன்று கண்டு பிடித்த ஒரு நூதனக் கருவியை பெருமிதத்துடன் மேஜைமேல் வைக்கிறார், காமராசன் என்கிற 24 வயது இளைஞர்.

மதுரை மாவட்டத்தில், தேனி அருகே உள்ள ஓடைப்பட்டியைச் சேர்ந்தவரான இவர், அலாரம் கடிகாரத்தோடு நூதனக் கண்டு பிடிப்பு ஒன்றை இணைத்திருக்கிறார். அதில் குறித்த நேரத்திற்கு அலாரம் அடிக்க வைத்து விட்டுப் படுத்தால், நாம் நிறுத்தாத வானொலிப் பெட்டியை ஒலிபரப்பு முடிந்ததும் அதுவே நிறுத்தி விடுகிறது. மின் தொடர்பையும் துண்டித்து விடுகிறது!

குளிர் சாதன எந்திரம், மின் விசிறி, மாவு அரைக்கும் எந்திரம், குளிர்சாதனப் பெட்டி, கிராமாந்தரத் தெரு விளக்குகள் ஆகியவற்றோடு உள்ள மின்தொடர்பை குறித்த நேரத்தில் தானாகத் துண்டித்து விடுகிறது இந்த அலாரம் கடிகாரம். இதேபோல், குறித்த நேரத்திலிருந்து மின்சாரத் தொடர்பை உண்டாக்கவும், இதனால் முடியும்!

சிறு வயது முதற்கொண்டே ஏதாவது ஆராய்ந்து கொண்டிருக்கும் சுபாவம் உடையவரான திரு காமராசன் அரும்பாடுபட்டுக் கண்டு பிடித்துள்ள இந்தக்கருவி, அலாரத்தோடு சேர்த்து இருநூறு ரூபாய் விலைதான் ஆகிகிறது.

எஸ். வெள்ளைச்சாமி என்பவரின் முதல் மகனாகப் பிறந்த இந்த இளைஞர், வேலை தேடி மட்டு மல்ல, தான் கண்டுபிடித்த 'மின் சாரக் கட்டுப்பாட்டுக் கருவி' பற்றி மேற்கொண்டு முயலவும் எண்ணி சென்னை மாநகருக்கு வந்தார்.

டி.டி.கே. நிறுவனப் பிரிவுகளின் முக்கியஸ்தர்களைக் கண்டு தனது அரிய கண்டுபிடிப்பைப் பற்றி விளக்கிச் சொன்னார். இளமையிலேயே இவருக்குள்ள ஆராய்ச்சித் திறன் கண்டு வியந்த அவர்கள், தங்கள் பிரிவு நிறுவனங்களில் ஒன்றான 'டைம் எய்ட்ஸ் இந்தியா லிமிடெட்' நிறுவனத்தின் கடிகாரப் பரிசோதனைப்பகுதியில் உடனேயே இவருக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

இதுபற்றி நன்றியறிதலோடு சொல்லிக் கொள்ளும் திரு காமராசன், இந்த அரிய கருவியைத் தன் சொந்த முயற்சியிலேயே கண்டு பிடித்திருக்கிறார்.

—'ராஜு'



# டிஐஐஸியின் குறிக்கோள்—

# தமிழ்நாட்டில் நலிவுற்ற பிரிவினர்களின் வாழ்வு வளம் பெறவும், பின்தங்கிய மற்றும் கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் சிறப்பான பல திட்டங்களை அளிப்பதே!

## உங்கள் செழிப்பான தொழில் திட்டங்களைச் செயலாற்ற எங்கள் சிறப்பான நிதி உதவி!





### சிறு கடன் (Mini Loan)

இத்திட்டத்தின்படி பின்தங்கிய மற்றும் கிராமப் பகுதிகளில் பல்வேறு சிறு தொழில்கள் ஆரம்பிக்க நிதி உதவி அளிக்கப்படுகிறது. தொழில் நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், நடைமுறையில் ஒத்துவரக் கூடிய தொழில்களுக்குத் தவணைக் கடனாக குறைந்த பட்சம் ரூ. 5000/-ம் அதிக பட்சமாக ரூ. 25,000/-ம் அளிக்கப் படும். வட்டி வீதம் ஆண்டுக்கு 9%. கடனைத் திருப்பிச் செலுத்த முதல் 6 மாத காலம் விடுமுறை.
3 முதல் 5 வருடங்களில் கடனை மாதத் தவணைகளாகத் திருப்பிச் செலுத்தலாம்.
தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும், மலைச் சாதியினருக்கும் சிறப்பு சலுகைகளும் நிதியுதவியில் தளர்த்தப்பட்ட நிபந்தனை களும் உண்டு. வட்டி வீதம் ஆண்டுக்கு 8% மட்டுமே.


### சுலப கடனுதவி/ஆரம்ப முதலீட்டு உதவி அளிக்கும் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் அமைப்புகள், தொழில்நுட்ப வினைஞர்கள் ஏற்றுமதிப் பொருட்களைத்



தயாரிக்கும் அமைப்புகள் மற்றும் அதிக வேலை வாய்ப்புகளை அளிக்கும் தொழிற் கூடங்கள் ஆகியவைகளுக்கு டிஐஐஸி சிறப்பான சலுகைகள் வழங்கி ஆரம்ப முதலீட்டு உதவி அளிக்கிறது.

கடன் அளவு தொழில் திட்ட மதிப்பீட்டில் 20% அல்லது ரூ. 2 லட்சம் வரை. வட்டி விகிதம் ஆண்டுக்கு 1% மட்டுமே. கடனை 4 முதல் 6 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தலாம்.



### தொழில் வினைஞர்கள்:

தொழிலுக்குத் தேவையான நிலம் வாங்குதல், கட்டிடம் கட்டுதல், இயந்திரம் மற்றும் அடிப்படை உற்பத்திச் சாதனம் வாங்குதல் ஆகியவற்றிற்கு டிஐஐஸி நிதி உதவி அளிக்கிறது. கடன் அளவு:
குறைந்த பட்சம் ரூ. 5,000 /- அதிக அளவு ரூ. 3 லட்சம். வட்டி விகிதம் 9.5%. பின்தங்கிய பகுதிகளில் வட்டி விகிதம் ஆண்டொன்றுக்கு 8%. கடனை 5 முதல் 8 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தலாம். கடனைத் திருப்பிச் செலுத்த சாதாரணமாக ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் விடுமுறையும் மற்றும் சில குறிப்பிட்ட இனங்களில் 4 ஆண்டுகள் விடுமுறையும் உண்டு.




### ஆட்டோ ரிக்ஷா

ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கு வண்டி யின் விலையில் 85% வரை கடனுதவி அளிக்கப்படும். தாழ்த்தப்பட்ட வகுப் பினருக்கு 90% வரை கடனுதவி உண்டு. வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 9.5%. வாங்கிய கடனை, 4 ஆண்டுகளில், மாதத் தவணைகளாகச் செலுத்தலாம்.



### மின்விசைப் படகுகள் வாங்க நிதி உதவி


மின் விசைப் படகுகள் வாங்க, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்புடன் டிஐஐஸி தாராள நிதி உதவி அளிக் கிறது. மின் விசைப் படகின் அடக்க விலையில் அரசு மான்யம் நீங்கலாக மீதமுள்ள தொகையில் 80% வரை கடனுதவியாக அளிக்கப்படும்.



### தீப்பெட்டித் தொழில்

சின்னஞ்சிறு தீப்பெட்டி தொழிற்சாலை தொடங்குவதற்கான நிதி உதவியை, டிஐஐஸி அந்தந்த பகுதிகளில் நடை முறையில் இருக்கும் கடன் வழங்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறைந்த வட்டி வீதங்களில் அளிக்கும்.

மற்றும் தேவைப்பட்ட இடங்களில் எளி தான விதிமுறைகளில் சுலப கடனுதவி யும், ஆரம்ப முதலீட்டு உதவியும் 1% வட்டி வீதத்தில் அளிக்கப்படும்.



### பட்டு நூல் தயாரிப்புக்கு நிதி உதவி

கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புக்கு அதிக ஊக்கம் அளிக்கும் நோக்கத்தில் பட்டு நூல் தயாரிக்கும் தொழில்களுக்கு டிஐஐஸி எளிதான விதிமுறையில் நிதி உதவி அளிக்கிறது.

பட்டுப் பூச்சிலிருந்து இழை எடுக்கும் (Reeling) தொழில்களுக்கு அதிக பட்ச உதவியாக ரூ. 25,000-ம், இழை முறுக்கேற்றும் (Twisting) தொழில்களுக்கும் மேலும் அதிக கடனுதவியும் அளிக்கப்படுகிறது. மற்றும் தமிழ் நாடு அரசு மூலமாக பங்கு மூலதன நிதி உதவி தொழில் தொடங்குவோரின் பங்கு மூலதனத் தொகை போன்ற மற்ற சலுகைகளும் அளிக்கப்படும்.

TIIC ESTD. 1949

மேற்கொண்டு விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:
நிர்வாக இயக்குநர்,
**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்** 27, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014. தொலைபேசி: 83078 தந்தி: MINDVEST டெலக்ஸ்: MIIC - 7164
மண்டல அலுவலகங்கள்: கோயமுத்தூர், மதுரை. கிளை அலுவலகங்கள்: கடலூர், தர்மபுரி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் வேலூர்.
*புதிய தொழில்களை நிறுவவும், நவீனமாக்கவும் விஸ்தரிக்கவும் மற்றும் புதியதுறைகளை அமைக்கவும் டிஐஐஸி அளித்திடும் தாராள நிதி உதவியை நாடுவீர்.*

# அரசின் அறிவிப்புகள் - ஆணைகள் - ஆக்கப்பணிகள்

## [16-8-79 முதல் 14-9-79 முடிய]

*16—8—79*

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் உள்ள பின்தங்கிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மீன்பண்ணைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

*17—8—79*

தமிழக அரசின் சார்பில் ஏழை எளியவர்களுக்கு இலவச வேட்டி, சேலை அளிப்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மதுரையில் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் 1,100 பேருக்குத் துணிகள் வழங்கினார்.

*18—8—79*

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மலை வாழ் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும், இவ்வினத்திலிருந்து கிறிஸ்துவ மதம் மாறியவர்களுக்கும் அவர்களது பெற்றோர் / காப்பாளர்கள் வருமானத்தைக் கருத்தில் கொள்ளாமல் அவர்களது எல்லா வகைப் படிப்பிற்காக முழுப் படிப்புக் கட்டணச் சலுகையினை 1977-78-ஆம் ஆண்டு முதல் அரசு அளித்து வருகிறது. இது போன்றே மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி (Denotified Tribes) வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்கள் / காப்பாளர்கள் ஆண்டு வருமானம் ரூ. 1500க்குள்ளாக இருப்பின் அவர்களுக்கு முழுப் படிப்புக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

*20—8—79.*

மதுரை மாவட்டத்தில் உள்ள மீன் வளர்ப்போருக்கு ஊக்கம் அளித்து, உள்நாட்டு மீன் வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதன் மூலம் தேவையான உதவிகளைச் செய்து வருகிறது.

*21—8—79.*

மேட்டூர் பகுதியில் 413 ஏழைகட்கு வீட்டு மனைப்பட்டாக்களை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் வழங்கினார். ரூ. 55 ஆயிரம் மதிப்புள்ள தொழிற் கருவிகளையும் அமைச்சர் வழங்கினார்.

*22—8—79.*

தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டத்தின்கீழ் நடைபெறும் குலுக்கலில் பரிசு பெற்ற பரிசுச் சீட்டுக்களுக்கு உரிய பரிசுத் தொகையைப் பெற பொதுமக்கள் விண்ணப்பிக்கும் காலத்தை அரசு ஒரு மாதத்திலிருந்து 90 நாட்களாக நீட்டித்து ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, 21—8—79 அன்று அதன் பின்னர் நடைபெறும் குலுக்கல்களிலும் பரிசு பெறும் பரிசுச் சீட்டுகளுக்குரிய தொகையைப் பொதுமக்கள் குலுக்கல் நடந்த நாளிலிருந்து 90 நாட்களுக்குள் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

*23—8—79.*

தமிழ்நாட்டில் நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் கரும்பு பயிராகின்றது. கடந்த 1977—78 ஆம் ஆண்டில் இந்தியாவில் சுமார் 80 இலட்சம் ஏக்கராவில் 1800 இலட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. அதில் தமிழ்நாட்டின் பாகம் 4 இலட்சம் ஏக்கரில் 170 இலட்சம் டன்.

*24—8—79.*

தமிழ்நாடு அரசின் புள்ளியியல் துறை மத்திய அரசின் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்துடன் பங்கேற்று, வர்த்தகம், போக்குவரத்து, உணவு விடுதி, தேநீர் விடுதி, கிடங்கு மற்றும் சேவைப் பிரிவு விவரங்களை 1979-80-ல் மாதிரி ஆய்வு செய்யத் துவங்கியுள்ளது.

27—8—79.

வாலாசாபாத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குக் கறவை மாடுகள், விவசாயக் கருவிகள், கடனுதவிகள் ஆகியவற்றை மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் வழங்கினார்.

28—8—79.

தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைகளில் கார் மூலம் செல்கிறவர்கள் தங்கி ஓய்வு எடுப்பதற்காக 100 மைல் தூரத்திற்கு ஒரு விடுதி வீதம் கட்டத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது என்று மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

29—8—79.

இந்த ஆண்டு தமிழகத்தில் 65 இலட்சம் டன் உணவுத் தானியம் உற்பத்தியாகும் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்துள்ளார்.

30—8—79.

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டு (1980 ஜனவரி) முதல் வருடாந்திர சிறுவிடுப்பு ஆண்டிற்கு 20 நாட்களாக உயர்த்தப்படும். அரசு ஊழியர்கள் தொடர்ந்தாற்போல அதிகபட்சமாகப் பத்து நாட்களுக்கு (விடுமுறை உட்பட) சிறுவிடுப்பு எடுக்கலாம்.

31—8—79.

சென்னை நகரில் குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உலக வங்கி 10 கோடி ரூபாய் உதவியைச் சென்னை மாநகராட்சிக்கு 2-வது கட்டமாகக் கொடுக்கிறது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் தெரிவித்துள்ளார்.

1—9—79.

தமிழ்நாட்டில் ஒன்றரைக் கோடி குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கும் திட்டம் உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் தெரிவித்துள்ளார்.

2—9—79

தமிழகம் முழுதுமுள்ள நிலமற்ற ஏழைகளுக்கு அரசு அளிக்கும் நிலம் கூட்டுப் பட்டாவாக இல்லாமல், தனித்தனியாக இருக்கவும், விரைவில் பட்டாக்கள் வழங்குவதற்காகவும் 28 புதிய யூனிட்டுகள் போடப்பட்டுள்ளன என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

3—9—79.

தமிழ்நாட்டில் பருப்பு வகை ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் 56 இலட்ச ரூபாய் அனுமதித்திருக்கிறது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்துள்ளார்.

4—9—79.

உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் பாடப் படிப்பிலும், படிப்போடு தொடர்புடைய பிற நடவடிக்கைகளிலும் தர உயர்வுக்கு வகை செய்வதற்காக ஒவ்வொரு பள்ளியிலும் நான்கு தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. அவை : 1. கல்விக்குழு 2. விளையாட்டுக்குழு. 3. பண்பாட்டுக் குழு 4. இளைஞர் நலப் பணிக் குழு.

5—9—79.

ஊரக மின்சாரக் கழகம், தமிழ்நாட்டில் ஊரக மின்சாரக் கூட்டுறவுத் திட்டம் (Rural Electric Cooperative project) ஒன்றினை அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது. மாநிலத்திலேயே முதலாவதாக அமைக்கப்படும் இந்த மின்சாரக் கூட்டுறவுத் திட்டம் தஞ்சை மாவட்டத்திலுள்ள குடந்தையில் நிறுவப்படும்.

7—9—79.

கைத்தறிக்குத் தரப்படும் தள்ளுபடித் தொகை நெசவாளர்களுக்கு நேரடியாகக் கிடைக்க வழிவகை செய்யும் 4 அம்சத் திட்டம் பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

11—9—79.

சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சிறு விவசாயிகள் விவசாயக் கூலிகள் வருமானத்தை அதிகரிக்க ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் தமிழக அரசு திட்டம் தீட்டியுள்ளது.

13—9—79.


தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச கூலி விகிதத்தை தமிழ்நாடு அரசு இம்மாதம் 15-ஆம் தேதியிலிருந்து மாற்றி அமைத்துள்ளது. இதன்படி விவசாயத் தொழிலாளர்களிடம் அதிக நேரம் வேலை வாங்கக்கூடாது. ஆண், பெண் ஊழியருக்குச் சமமான கூலி வழங்க வேண்டும். சிறுவர்களுக்கு முழுச் சம்பளம் தரவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

14—9—79.

என்ஜின்கள் பொருத்தப்பட்ட படகுகள் வாங்குவதற்காக மீனவர்களுக்கு 5 சத விகிதம் உதவித் தொகை வழங்கும் ஓர் ஏற்பாட்டினைத் தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் கூறியுள்ளார்.

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி


மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத் துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித் தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*


## டான்சி

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI



# பணத்தைத் தந்தத் தூண்டில்

அவர் புகுமுக வகுப்பு தேறியவர். குளத்தில் வலைவீசி மீன் பிடித்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் பதட்டம், பரபரப்பு, மகிழ்ச்சி எனப் பல் வேறுவிதமான உணர்ச்சிகள் பிரதிபலித்தன. காரணம் அவர் இறங்கியுள்ள இந்த மீன் வளர்க்கும் தொழில் அவருக்குக் கை கொடுக்குமா? அல்லது கையைக் கடிக்குமா என்பதை நிர்ணயிக்கும் நாள் அது!

வாலிபர் வடமலை, திருச்சி மாவட்டம், திருவெள்ளறையைச் சேர்ந்தவர். புத்தனாம்பட்டி நேரு நினைவுக் கல்லூரியில் பி.யு.சி. படித்துத் தேறியவர். 24 வயது நிரம்பாத வடமலைக்கு வேறு வேலை கிடைக்காததால் வழிவழியாகச் செய்து வந்த விவசாயத்தில் ஈடுபட்டார். அவர் பகுதி, வானம் பார்த்த பூமி. எனவே, அவருக்குள்ள கொஞ்ச நிலத்தில் விவசாயத்தின் மூலம் மிகக் குறைந்த வருமானமே கிடைத்தது.

அப்போதுதான் அவருக்குக் கை கொடுக்க வந்தது, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைத் திட்டம். அந்தத் திட்டத்தின் கீழ் தனது கிராமத்தில் ஆண்டிற்கு ஒரு குளத்திற்கு ரூ. 25 வீதம் 2 குளங்களை மீன் வளர்ப்பிற்காகக் குத்தகை எடுத்து, உயர் ரக மீன் குஞ்சுகளை (கட்லா, சாதா கெண்டை, சேல் கெண்டை போன்றவை) முகமையிலிருந்து பெற்று 2 குளங்களிலும் 5 மாதங்களுக்கு முன் விட்டார். இன்று ஒவ்வொரு மீனும் அரை கிலோ, முக்கால் கிலோ அளவு பருத்திருக்கிறது.

குளத்தில் தண்ணீர் வற்றக் கூடிய நிலையிலிருந்ததால் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் மேற்பார்வையில், தன்னைப்போல் மற்ற குளங்களைக் குத்தகைக்கு எடுத்த நண்பர்களுடன் சேர்ந்து குளத்தில் வலைவீசினார். காலை 4.30 மணிக்கே வேட்டை ஆரம்பம். ''அதிகாலையில் பிடித்தால்தான் மீன் கண்ணெதிரில் அகப்படுமாம்'' உற்சாகத்துடன் சொன்னார் வடமலை.

முதல் நாள் வலை வீச்சிலேயே சுமார் 50 கிலோ அளவில் அவருக்கு மீன்கள் கிடைத்தன. வலையிலே துள்ளிவிழும் கெண்டை மீன்களைப் பார்த்தும் வடமலையின் நெஞ்சிலிருந்த படபடப்பு அடங்கி முக மலர்ச்சி ஏற்பட்டது.

'இந்தப் புதிய தொழில் பிடித்திருக்கிறதா' என்று கேட்டதற்கு, ''இருந்த இடத்திலிருந்தபடியே எந்தச் சிரமமுமில்லாமல் பணம் வரும்போது மகிழ்ச்சி இல்லாமலிருக்குமா '' என்று புன்னகையுடன் பதிலளித்தார்.

''எவ்வளவு வருவாய் எதிர்பார்க்கிறீர்கள்?''

''இந்த ஆண்டு ஆயிரம் ரூபாய் முதல், ஆயிரத்து ஐந்நூறு வரை கிடைக்கும்'' என்றார் வடமலை.

ஆம்! அவர் நம்பிக்கை வைப்பது போல், மீன்கள் வேகமாக விற்பனை ஆயின. கிராமத்துக்காரர்கள் ஒவ்வொருவரும் ஒரு கிலோ இரண்டு கிலோ என்று வாங்கிக் கொண்டு சென்றனர். வெளி மார்க்கெட்டில் கிலோ ரூ. 10 முதல் ரூ. 12 வரை மீன் விற்கிறது. இங்கு கிலோ 5 ரூபாய்க்கே விற்கப்படுகிறது. கிராமத்திலுள்ளோருக்குச் சத்துணவு கிடைக்க வேண்டுமென்பதற்காகக் கூடுமானவரை அங்கங்கே விற்க வேண்டுமென்று அரசு விதிமுறை ஏற்படுத்தியுள்ளது.

லால்குடியை அடுத்த காட்டூரைச் சேர்ந்தவர் மதியழகன், (22 வயது). இவரும் புகுமுக வகுப்பு படித்தவர்தான். இவர், காட்டூரில் ஆண்டுக்கு 200 ரூபாய் குத்தகைக்கு ஒரு குளத்தை ஏலம் எடுத்துள்ளார். கடந்த ஆண்டு இதே குளத்தை 60 ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். அப்போது மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அறிமுகமாகவில்லை. எனவே, குளத்தில் தாமாக வளர்ந்த மீன்களைப் பிடித்து விற்றார். 40 ரூபாய் தான் கிடைத்தது.

ஆனால், இந்த ஆண்டு மேம்பாட்டு முகமையினர் தந்த 3000 மீன் குஞ்சுகளைக் (கட்லா, ரோகு, மிருகல், சேல் ஆகியவை) குளத்தில் விட்டார். அவர்கள் சொன்னபடி தினமும் அரிசித் தவிடும் கடலைப் பிண்ணாக்கும் கலந்து வைத்தார். இப்போது 5 மாதத்தில் ஒரு மீன், ஒரு கிலோ அளவிற்குப் பருத்துள்ளது. இவருக்கு இந்த ஆண்டு சுமார் 3,000 ரூபாய் இதன் மூலம் வருவாய் வரும்.

மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை என்ற திட்டம் (Fish Farmers Development Agency, FFDA) சென்ற ஆண்டில் முதலில் தஞ்சாவூர் மாவட்டத்தில் துவக்கப்பட்டது. பின்னர் திருச்சி, மதுரை, தருமபுரி மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டது.

1978 ஆகஸ்டு 16-ல் இந்தத் திட்டம் துவக்கப்பட்டு நவம்பர் மாதத்தில் மீன் வளர்ப்பு துவங்கியது. மாவட்ட அளவில் ஒரு முதன்மை நிருவாக அதிகாரியுள்ளார். திருச்சி மாவட்டத்தில் 3 வட்டங்களில் (7 பிளாக்குகள்) 65 குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், பொதுப் பணித்துறை, கோயில்களைச் சேர்ந்த குளங்கள். இவற்றைத் தேர்ந்தெடுத்து ஊராட்சி

அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் பரிந்துரைக்கும் நபர்களுக்குக் குளங்கள் ஏலத்திற்கு விடப்பட்டன. குளங்களில் முதல் தடவையில் இரண்டரை இலட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.



திருச்சி மாவட்டத்தில் 1979 ஜூன் திங்கள் முடிய 7,950 கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ. 14,260.85க்கு விற்கப்பட்டுள்ளது.

ஏலம் எடுக்கும் விவசாயிகள் குறைந்தது 8-வது படித்திருக்க வேண்டும். 15 நாட்கள் சென்னையிலும், சாத்தனூர், மேட்டூர், பவானி பகுதிகளிலும் மீன் வளர்ப்புப் பற்றிப் பயிற்சியளிக்கப்பட்டது.

தரமான மீன் குஞ்சுகள் தருவது, வலைகள் தருவது, வங்கிகளில் கடன் பெற்றுத் தருவது ஆகிய பணிகளை மேம்பாட்டு முகமையே செய்கிறது. ஆயினும், முகமையின் பணி, சேவையே ஒழிய இலாபம் அல்ல. குளத்தில் வரும் பலன் முழுமையும் மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கே போகிறது.

விவசாயியை ஊக்கப்படுத்தவும், அவருக்கு நிறைய வருமானம் வருவதற்கு வழி செய்வதற்காகவும், முகமை அலுவலர் வாரம் ஒரு முறை விவசாயியுடன் குளத்திற்குச் சென்று மேற்பார்வையிடுகிறார். அத்துடன் மீன்பிடிப்பு, விற்பனை ஆகியவையும் முகமையினர் பார்வையிலேயே நடைபெறுகின்றன.

மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், கிராமத்திற்கும் இத்திட்டத்தினால் நன்மை விளைகிறது. முதலாவது, மீன் வளர்ப்பதற்காகக் குளத்தை மராமத்து செய்யவும் இத்திட்டத்தில் வழியுள்ளது. இதற்காக ஒரு எக்டேருக்கு ரூ. 10,000 வரை வங்கி கடனுதவி செய்ய முன்வருகிறது. அதில் அரசு ரூபாய் 2,500 உதவித் தொகை வழங்குகிறது. குளம் ஆழப்படுத்தப்படுவதால் விவசாயத்திற்கு அதிக அளவு நீர் தேக்கி வைக்க முடிகிறது.

அண்மையில் திருச்சியை அடுத்த மண்ணச்சநல்லூர் ஒன்றியத்திலுள்ள மீன்வளர்ப்போருக்குக் குளங்களை மராமத்து செய்ய யுனைடெட் கமர்சியல் வங்கி மூலம் ரூ. 86,000 கடன் வழங்கப்பட்டது.

இரண்டாவது, சாதாரணக் குளத்து மீனைப் போலல்லாமல் இந்த மீன்கள் அதிகச் சத்துள்ளவை. எனவே, கிராம மக்களுக்குக் குறைந்த விலையில் நிறைந்த சத்துள்ள உணவு கிடைக்கிறது.

ஆனால், வழக்கமாகக் குளத்தில் சும்மா தூண்டில் போட்டு மீன் சாப்பிட்டுப் பழக்கப்பட்டுப் போனதால் சில கிராமங்களில் இந்த விலைக்கு மீன் வாங்க முன் வர மறுக்கிறார்கள். அம்மாதிரிப் பகுதிகளில் குறைந்த விலைக்கு விற்றால் மீன் வளர்ப்பவர் பாதிக்கப்படுவாராகையால், விற்காத மீன்களைத் திருச்சி நகருக்குக் கொண்டு வந்து விற்கும் பொறுப்பை மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை செய்கிறது. மீன்களைக் கிலோ ரூ. 5 வீதம் விற்று அந்தத் தொகையை அப்படியே மீன் வளர்ப்போருக்குத் தருகிறது.

இத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்துத் திருச்சி மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் முதன்மை நிருவாக அலுவலர் திரு வெங்கட்ராமன் கூறியதாவது:

''திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 98 எக்டேர் பரப்பளவுள்ள (குளங்கள்) இடத்தில் மீன் வளர்க்கப்படுகிறது. நவம்பர் கடைசி வாரத்தில் குளங்களில் மீன் குஞ்சுகளை விட்டோம். மழைக் காலமாக இருந்தாலும், குளங்களில் அதிக நீர்த் தேக்கம் இருந்ததாலும் குளத்தை மராமத்து செய்ய இயலவில்லை. எனவே, அதற்காக 1978-79-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் செலவிடப்படவில்லை. இந்த ஆண்டு, குளங்களை ஆழப்படுத்துவோம். ஆழப்படுத்தியபின் சென்ற ஆண்டைவிட அதிக வருவாய் கிடைக்கும்.

''இந்தத் திட்டத்தின் கீழ் மீன் வளர்க்க வருபவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறார்கள். ஆனால், கிராமத்தில் பல்லாண்டுக் காலமாகக் குளங்களில் மீனைச் சும்மா பிடித்துப் பழக்கப்பட்ட பகுதிகளில் இந்தப் பெரிய மீன்களை விலை கொடுத்து வாங்கத் தயங்குகிறார்கள். கிலோ ஒரு ரூபாய்க்கு வாங்கத் தயங்குகிறார்கள். எல்லாக் கிராமங்களிலும் இந்நிலை இல்லை. உதாரணமாக திருவெள்ளறையில் சுமார் 2 மணி நேரத்திற்குள் கிலோ 5 ரூபாய் வீதம் எல்லா மீன்களும் விற்றுவிட்டன. இவ்வாறு விற்றால் தான் குளம் ஏலம் எடுத்தவருக்கும் இலாபம் கிட்டும், திட்டமும் வெற்றியடையும்.''

கேள்வி: மீன் குஞ்சுகள், தீனி போடுதல் ஆகியவற்றிற்கு எவ்வளவு செலவாகும்?

முதன்மை நிருவாக அலுவலர் பதில்: இதோ காளவாய்ப்பட்டி கிராமத்தை எடுத்துக் கொள்ளுங்கள். திரு சுப்பிரமணியம் 50 ரூபாய்க்கு குளம் ஏலம் எடுத்து இருக்கிறார். 5000 மீன் குஞ்சு வாங்கி விட்டார். அதற்காக ஆன செலவு ரூ. 300. தவிடு, கடலைப் புண்

## உயிரியல் கட்டுப்பாடு ஆய்வுக்கூடம்

பயிர்களுக்குச் சேதம் ஏற்படுத்தும் பூச்சி களைக் கொல்லக்கூடிய எதிர் உயிர்கள், உயி ரினக் கொல்லிகள் ஆகியவைகளை ஆராய்வ தற்காக, கிருஷ்ணகிரியில் ஓர் உயிரியல் கட்டுப்பாடு ஆய்வுக்கூடம் இந்த ஆண்டில் அமைக்கப்படவிருக்கிறது.



ணாக்கு ஆகியவை போட 3 மாதத்திற்கு ரூ. 70 செலவு ஆகும். ஆனால், ஒரு தடவை யிலேயே அவருக்கு ரூ. 1,500 வருவாய் கிடைக்கும். செலவிற் காக ரூ. 500 போனாலும் மீதம் ரூ. 1,000 கிடைக்கும். இவ்வாறு ஆண்டிற்கு மூன்று முறை மீன் பிடிக்க முடியும்.

கேள்வி : சாதாரணமாக என்ன வருவாய் கிடைக்கும்?

பதில் : ஒரு எக்டேர் நீள முள்ள குளத்திலிருந்து ஆண்டுக்கு ரூ. 6,000 நிகர வருமானம் பெறலாம்.

நல்ல முறையில் மீன் வளர்த் தால், அதாவது வழக்கமான சாதாரண மீன்களையெல்லாம் அழித்துவிட்டுத் தரமான மீன் குஞ்சுகளை விட்டு, பின்னர் நாள்தோறும் தவிடு, கடலைப் பிண்ணாக்குக் கலந்து வைத்து வளர்த்தால் கட்லா, சில்வர் கார்ப் போன்ற ரக மீன்கள் 9 மாதத்தில் 1 கிலோ முதல் $1\frac{1}{2}$ கிலோ வரை பருத்துவிடும். அப்படி வளர்த்தால் ஒரு எக்டே ருக்கு 3 டன் அதாவது 3,000 கிலோ மீன் கிடைக்கும்.

கேள்வி: பழைய மீன் ரகங் களை அழிப்பது எப்படி?

பதில் : அது மிகவும் சுலபம். குளத்தை ஏலத்திற்கு எடுத்த தும் இலுப்பைப் பிண்ணாக்கைப் போட்டால் அதைத் தின்று விட்டுப் பழைய மீன்கள் எல்லாம் அழிந்துவிடும். ஒரு வாரம் கழித்துப் புதுக் குஞ்சுகளை விட லாம். பழைய மீன்களுக்கு விஷ மாகயிருந்த இலுப்பைப் புண் ணாக்கு ஒரு வாரத்திற்கு, மீன் தீவனமாக மாறிவிடும்.

இந்த மீன் குஞ்சுகளை விடு முன் குளத்தில் சாணமும், யூரியா வும் போட வேண்டும். குளத்து நீர், நிறம் மாறும் வரை இவ் வாறு போடலாம். இதன் மூலம் நுண்ணுயிர்ச் சத்துக்கள் மீன் குஞ்சுகளுக்குக் கிடைக்கின்றன. அதன் பின்னர் தவிடு, பிண் ணாக்குப் போடலாம். கடலைப் பிண்ணாக்கை ஊற வைத்துத் தவிட்டை அதனுடன் பிசைந்து உருண்டை, உருண்டையாகப் பிடித்துத் தண்ணீரின் ஓரத்தில் வைத்தால் மீன்கள் ஆவலோடு வந்து அதைச் சாப்பிடும். இவ் வாறு பழக்கப்படுத்தினால் மீன் எவ்வாறு செழித்து வளருகிறது என்பதைக் கண்ணெதிரிலேயே காணலாம். நாள்தோறும் கவ னித்து வந்தால் மீன்கள் நன் றாக வளரும்; நல்ல இலாபம் கிட்டும்.

மேலும், பயிர்களுக்கு நாற்றங் கால் தயாரிப்பதுபோல், தரமான மீன் குஞ்சுகளை நாற்றங்காலில் அவர்களே தயாரிக்கக் கற்றுக் கொள்வார்களானால் அதற்கு அவர்கள் செலவிடும் தொகை யும் மிச்சமாகும். அவ்வாறு செய் யவும் நாங்கள் பயிற்சி அளித் திருக்கிறோம்.

இது கிராமத்திற்கு மிக அவ சியமான, எளிதாகச் செயல் படுத்தக்கூடிய திட்டம். இதற்குக் கிராமத்தார்கள், அதாவது மீன் வளர்ப்பவர்களும், வாங்குபவர் களும் நல்ல ஆதரவு தந்தால் இத் திட்டம் நல்ல பலனைத்தரும். —இவ்வாறு தலைமை நிருவாக அலுவலர் குறிப்பிட்டார்.

திருச்சி மாவட்டத்தில் இது குறித்துத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

தலைமை நிருவாக அலுவலர்,
மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, 150-பி, பொன்னகர்,
திருச்சி-1.

**கே. நடராஜன்,**
**தனி உதவியாளர்,**
**(செய்தி-மக்கள் தொடர்பு),**
**திருச்சி.**

## கம்பம் பள்ளத்தாக்கில் காற்றுத் தடுப்பு

மதுரை மாவட்டத்தில் கம்பம் பள்ளத் தாக்கிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் சில பகுதிகளிலும் மணல் காற்று வீசுவதால் வளம் மிகுந்த நிலங்களில் மணல் குவிகின்றது. இம் மணல் காற்றைத் தடுப்பதற்காக கடந்த ஆண் டில் 86 கிலோ மீட்டர் தூரத்திற்கு மணல் காற்றுத் தடுப்பிற்காக வேலி மரங்கள் நடப்பட் டுள்ளன. இதனால் திருநெல்வேலி மாவட் டத்தில் 1,692 எக்டேர் பரப்பும், மதுரை மாவட்டத்தில் 4,079 எக்டேர் பரப்பும் பயன் அடைந்துள்ளன.


கோ ஆப்டெக்ஸ்
பாலியஸ்டர், பட்டு ஆடைகள்
புத்துலகப் படைப்பு...!
புதுமைகளின் முன்னறிவிப்பு...!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ELEGANT

# அரிசனக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி



**கே. மாதவசர்மா,** ஐ.ஏ.எஸ்.,
நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு குடிநீர்
வடிகால் வாரியம்


"நீரின்றி அமையாது உலகு'' என்ற வள்ளுவப் பெருந்தகையின்வாய்மொழிக்கேற்ப, அனைத்துச் சிற்றூர்களுக்கும் குடிநீர் வழங்கிடுதலைத் தமிழக அரசு தனது தலையாயக் கொள்கையாகக் கொண்டு, அனைத்து வழி முறைகளையும் கையாண்டு வருகின்றது. தமிழக அரசின் இக்கொள்கையை ஏற்று, குறிப்பாக ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முனைந்து செயலாற்றி வருகின்றது.

தமிழகத்திலுள்ள அனைத்துச் சிற்றூர்களிலுமுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும பொருட்டு, குடிநீர் நிலைகள் பற்றிய அறிவியல் ரீதியான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன்படி சிற்றூர்களனைத்தும் 6 பிரிவுகளாகப் பகுக்கப்பட்டன. இவ்வாறு சிற்றூர்களைப் பகுக்கப்பட்டதன் நோக்கமே, பெரும்பாலான அரிசனக் குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வழங்கப்படல் வேண்டும் என்பதாகும். தமிழகத்திலுள்ள சுமார் 5420 முதல் இருவகைச் சிற்றூர்களுக்கு (குடிநீர் நிலைகள் அறற சிற்றூர்கள் அல்லது குடிப்பதற்குத் தகுதியற்ற நீர்நிலையுள்ள சிற்றூர்கள்) உடனடியாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிகளைத் திட்டமிட்டு1.9.79 முதல் துவக்கப்பட்டது. இத்திட்டங்களுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 25 கோடி ஆகும். இவ்வாறு துவக்கப்பட்டு, பின்னர் நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டங்களில் தாழ்த்தப்பட்ட அரிசனக் குடியிருப்புகளும் அடங்கும்.

இனி அரிசனக் குடியிருப்புகள் மற்றும் மலை வாழ் மக்களுக்கு நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டப்பணிகளைக் காண்போம்:

**அரிசனக் குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்டவை:**

1971ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கீட்டுப்படி தமிழ்நாட்டில் சுமார் 73,15,595 தாழ்த்தப்பட்டவர்களும, 3,11,515மலை வாழ் மக்களும் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்கட் தொகை மொத்த மக்கட் தொகையில் 18.52 விழுக்காடு ஆகும். எத்துறையாயினும் மொத்த ஒதுக்கீட்டுத் தொகையில் குறைந்தது 20 விழுக்காடு அரிசன மக்கள் பயனுற வேண்டும் என்ற இந்திய அரசின் கொள்கையினை ஏற்று, ஊரகக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரை பிரதான சிற்றூர்களுக்கு உள்ளடங்கிய அரிசனக் குடியிருப்புகளுக்கும், பகிர்மானக் குழாய்களைப் பதித்துக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரிவு 1 மற்றும் 2ல் அடங்கவில்லையாயினும் சிற்றூரையொட்டிய அரிசனக் குடியிருப்புகளுக்கு முன்னுரிமையுடன் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுபற்றிய அறிவுரைகள் பணியிட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கடந்த இரு ஆண்டுகளில் சூன் திங்கள் 79 முடிய 2660 சிற்றூர்களில் 12,64,519 மக்கள் பயனுறும் வகையில் குடிநீர்த் திட்டப் பணிகள் முற்றுப்பெற்றுள்ளன. மேற்கண்ட முற்றுப்பெற்ற பணிகளில், 1977-78ல் சுமார் 419 அரிசனக் குடியிருப்புகளுக்கு 10,47,50 மக்கள் பயன்பெறும் வகையிலும், 1978-79ல் சுமார் 198 அரிசனக் குடியிருப்புகளுக்கு 50,000 மக்கள் பயனுறும் வகையிலும் தனிப்பட்ட குடிநீர்த்திட்டப்பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன. இது தவிர அரிசன நலத்துறை மூலமாகவும், அரிசனக் குடியிருப்டகளுக்குக் குடி



நீர்த் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**மலைவாழ் மக்களுக்குக் குடிநீர்த் திட்டப்பணிகள்:**

பண்டையத் தமிழகத்தின் நான்கு பிரிவுகளில் ஒன்றான குறிஞ்சி நில மக்களின் (மலைவாழ் மக்கள்) மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு, முக்கியமாகக் குடிநீர் வசதி அளித்திட தமிழக அரசு சிறப்புத்திட்டமாக ''ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுக் குடிநீர்த் திட்டம் (Integrated Tribal Development Project) ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இத்தகையத் திட்டங்களுக்குத் தமிழக அரசு சமூக நலத்துறையின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அக்குடிநீர்த் திட்டப் பணிகளைச் செவ்வனே செயலாற்றி வருகின்றது. இத்திட்டங்கள் சேலம், திருச்சி, தருமபுரி, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன. கடந்த இரு ஆண்டுகளில் மலைவாழ் மக்களின் மேம்பாட்டுக் குடிநீர்த்திட்டப்பணிகள் பற்றிய விவரம் வருமாறு:

| ஆண்டு | நிதிஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | பயனடையும் சிற்றூர்கள் | பயனடையும் மக்கட் தொகை |
|---|---|---|---|
| 78—79 | 13.50 | 40 | 13,700 |
| 79—80 | 10.00 | 54 | 18,970 |

மேற்கண்ட திட்டங்களில் 15 குடிநீர்த்திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, ஏனையவை செயலாக்கத்தில் இருந்து வருகின்றன.

இது தவிர, குடிநீர் வாரிய நிதியின் மூலம், 1978-79ஆம் ஆண்டு 2 குடிநீர்த்திட்டப்பணிகள் முடிக்கப்பெற்று, 35 பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. 1979-80ஆம் ஆண்டு 50 குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

இவ்வாறு தமிழ்நாடு அரசு, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களின் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதில், பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி நிறைவேற்றி வருகிறது. இனி வரும் ஆண்டுகளில் திட்டங்கள் மேலும் பல்கிப் பெருகி, அனைத்து அரிசனக் குடியிருப்புகளும் குடிநீர் பெற்றுவிடும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை!

மீட்டர் இல்லாமல் கிராமங்களில் குடிசைகளுக்கும் மின் இணைப்பு வழங்குவதாகத் தமிழ்நாடு அரசின் 1979-80 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பை, தேசியமயமாக்கப்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும், தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து செங்கற்பட்டு மாவட்டத்தில் இரண்டு கிராமங்களில் நடைமுறைப் படுத்தியுள்ளன.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களைக் கொண்டு விளக்கேற்று விழா நிகழ்ச்சி 22-8-79 அன்று நடைபெற்றது.

இந்தத் திட்டம் பற்றி மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக் கோவையின் விவரமாவது :

''செங்கற்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்திற்கு அண்மையில் உள்ள சோகண்டி, வடகடம்பாடி ஆகிய இரு கிராமங்களைத் தேசியமயமாக்கப்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ''தத்து'' எடுத்திருக்கிறது.

''தத்து'' எடுத்துக் கொள்வது என்றால் ''வசதி'' வேண்டும். இரண்டாவது ''நல்ல மனமும்'' இருக்க வேண்டும். இந்த வங்கியிடம் ''வசதி''யும் இருக்கிறது. ''நல்ல மனமும்'' இருக்கிறது!

"மின் வாரியத்தைச் சேர்ந்த அலுவலர்களும், பணியாளர்களும் இரவுபகலாகப் பாடுபட்டு, மின் இணைப்பை இந்த இரு கிராமங்களுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

"மின் வாரியத்தைப் பொறுத்த வரை குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க தடை விதித்து இருந்தார்கள். அதற்குக் காரணம்-குடிசை தீப்பற்றி எரிந்தால் ''மீட்டர்'' எரிந்து போய்விடும் என்பதால் ஆகும்.

"தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் பார்த்தார்.

''குடிசையே எரிந்து போகும் போது மீட்டருக்கு மட்டும் கவலைப்படுவானேன்? என்றார். சரி. மீட்டரே இல்லாமல் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தை அறிமுகப் படுத்த உத்தரவிட்டார்.

"சாதாரணமாக வீட்டுக்கு ''ஒயரிங்'' செய்வதற்கு 90 ரூபாய், 100 ரூபாய் வரை செலவாகும். அதன் பிறகு மின் கம்பத்

தில் இருந்து வீட்டுக்கு உள்ள இடைவெளிதூரத்தைப் பொறுத்து மின்வாரியத்திற்கு ''டெபாசிட்'' கட்டவேண்டும்.

"ஆனால், குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தில் குடிசைவாசி 10 ரூபாய் டெபாசிட் கட்டினாலே போதும். மின் வாரியத்தினர் கம்பத்தில் இருந்து ஒயர் இழுத்து குடிசைக் குள்-விளக்கு (பல்பு) எரியவைத்து விடுவார்கள்.

"மீட்டர் கிடையாது. தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எப்படி அளவு இல்லாமல் கொடுத்து பழக்கப்பட்டவரோ-அதேபோல மீட்டர் வைத்து அளக்காமல் மின்சாரத்தையும் கொடுக்கிறார். மின்விளக்கு வெளிச்சத்தையே பார்க்க முடியாத குடிசைகளில் மின்விளக்கை ஏற்றி வைத்தவர் புரட்சித் தலைவர்.

''மண்ணெண்ணெய்யைக் கொண்டு விளக்கு எரித்தால் மாதம் ஒன்றுக்குச் சுமாராக 6 ரூபாய்வரை செலவாகும். குடிசைக்குப் போடப்பட்டிருக்கும் மின் விளக்கிற்குக் கட்டணமாக மாதம் இரண்டரை ரூபாய் செலுத்தினாலே போதும்.

''மீட்டர் இல்லையே...எங்கெங்கே ''கம்பி'' இழுப்பார்களோ, எவ்வளவு விளக்குகளை எரிப்பார்களோ? நட்டம் வரும் என்றார்கள்.

''எங்களை நம்பிய மக்களை நாங்களும் நம்புகிறோம். குடிசைவாசிகளின் வீட்டுப் பிள்ளைகள் நல்ல விளக்கு வெளிச்சத்தில் நன்கு படித்து முன்னுக்கு வர வேண்டும் என்பதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் விருப்பம்.

''நான்கூட ''மினுக்'', ''மினுக்' என்று எரிந்த மண்ணெண்ணெய் விளக்கில் படித்தவன்தான்.

''பத்து ரூபாய்க் கட்டணத்தில் குடிசைவாசிகளுக்கு மட்டும்தான் மின் இணைப்பா என்று வசதி படைத்தவர்கள் கேட்கக்கூடாது. ஒரு குடும்பத்தில் உள்ள இரண்டு மூன்று குழந்தைகளில் கடைசிப் பிள்ளை மீதுதான். தாய்க்குப் பாசம் அதிகம் இருக்கும்.

''அதுபோல தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சமுதாயத்தில் அடிமட்டத்தில் உழன்று கொண்டு இருக்கும் மக்களின் முன்னேற்றத்திற்குச்



# குடிசைகளுக்கு மின்வசதி

சற்று அதிக கவனம் செலுத்துகிறார். ஏழைகளைக் கைதூக்கி விடுவது நம் எல்லாருடைய கடமையாகும்.

"வங்கிகளைத் தேசியமயமாக்கியதால், வங்கிகள் கிராமத்திற்கு வருகின்றன. கிராமத்தையே தத்து எடுக்கின்றன.

"வங்கி மட்டுமல்ல-அரசும் கிராமத்தை நோக்கி வந்திருக்கிறது. அதன் பிரதிபலிப்புதான் குடிசைக்கு மின்விளக்கு அளிக்கும் திட்டம்.

"இந்தத் திட்டத்தினால் மின்சார வாரியத்திற்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்பதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எத்தகையோருக்குப் பயன்படுகிறது என்பதுதான் முக்கியம்.

"இந்தத் திட்டம் தமிழகம் முழுவதும் நிறைவேறினால் மக்கள் மனத்தில் "மகிழ்வுப் புரட்சி'' ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

"மின் இணைப்பைப் பெறுகிற குடிசைவாசிகளுக்கு ஒரு வேண்டுகோள்.. மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள். மீட்டர் தான் இல்லையே என்று ''ராத்திரி பூராவும்'' விளக்கை எரிய விடாதீர்கள். உங்களுக்குத் தூக்கம் வராது. சிக்கனமாக மின்சாரத்தைப் பயன்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கும் உண்டு. மாண்புமிகு புரட்சித் தலைவருக்கும் உள்ளது.''



# புதிய நந்தன்

## புதுமைப்பித்தன்

நந்தா சாம்பானை நந்த நாயனாராக்க, சிதம்பரத்தில் அக்கினிப்புடம் போட்ட பின்னர் வெகுகாலம் சென்றது.

அந்தப் பெருமையிலேயே ஆதனூர் சந்தோஷ-அல்லது துக்க-சாகரத்தில் மூழ்கி அப்படியே மெய் மறந்தது.

இங்கிலீஷ் சாம்ராஜ்யம் வந்த சங்கதிகூடத் தெரியாது. அப்படி பட்ட நெடுந் தூக்கம்.

இப்பொழுது, ஆதனூரிலே ரயில்வே ஸ்டேஷன், வெற்றிலைப் பாக்குக் கடை என்ற ஷாப்பு, காப்பி ஓட்டல் என்ற இத்யாதி சின்னங்கள் வந்து விட்டன. எப்படி வந்தன என்ற சமாச்சாரம் யாருக்கும் தெரியாது.

ஆனால், நந்தன் பறைச்சேரியில் விடை பெற்றுக் கொண்ட பிறகு, பறைச்சேரிக்கு என்னமோ கதி மோட்சம் கிடையாது. பழைய பறைச்சேரிதான். பழைய கள்ளுக்கடைதான். ஆனால் இப்பொழுது பழைய வேதியரின் வழி வழி வந்த புதிய வேதியரின் ஆள் மூலம் குத்தகை, சேரிக்குப் புறம்பாக அல்லது தீண்டக்கூடாது என்ற கருத்துடனோ, மரியாதையான தூரத்திலே, ஒரு முனிசிபல் விளக்கு. அதை ஏற்றுவதைப் பற்றி ஒருவருக்கும் தெரியாது. சேரிப் பறையர்கள் ஆண்டையின் அடிமைகள். அத்துடன் அவர்களுக்குத் தெரியாத வெள்ளைத் துரைகளின் அடிமைகள்.

அந்தப் பழைய வேதியரின் வாழையடி வாழையாக வந்த (அவர்கள் குல முறை கிளத்துப் படலம் எந்தப் புராணத்திலும் இல்லை) வேதியர் அக்கிரகாரத்தில் பெரிய பண்ணை. 1,000 வேலி நிலம் இத்யாதி வகையறா. இது மட்டுமல்ல,. ஒரு பென்ஷன் பெற்ற சப்-ரிஜிஸ்திரார் விஸ்வநாத சிரௌதி. இவருக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும் இறந்து போன ஸனாதன உண்மைகளிலும் அபார நம்பிக்கை. இதையறிந்து நடப்பவர்கள்தான் அவருடைய பக்தர்கள்.

அவருக்கு ஒரு பையன்; பெயர் ராமநாதன். எம். ஏ., படித்து விட்டு கலெக்டர் பரிட்சை கொடுக்கவிருந்தவன். ஏதோ பைத்தியக்காரத்தனத்தினால் — இது அவர்கள் வீட்டிலும் அக்ரகாரத்திலும் உள்ள கொள்கை-சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு விட்டான். பையனுக்கு இதிலிருந்து பிரேமையை ஒரு நல்ல சம்பந்தத்தில் ஒழித்துவிடலாம் என்பது சிரௌதியின் நம்பிக்கை. பிள்ளையின் பேரிலிருந்த அபார வாத்ஸல்யத்தின் பயன்.

சேரியிலே கருப்பன் ஒரு கிழட்டு நடைப் பிணம். 60 வயது. பெரிய நயினாரின் தோட்டக்காவல். இதில் ஒரு சுவாரஸ்யம். கருப்பன் சிறுபிராயத்தில் தெரியாத்தனத்தினாலோ, ஐயரவர்கள் இப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக்கிறபடி, 'பறக்கிறது'னாலோ, ஒரு நாள் இரவு அக்ரகாரத்தில் இருக்கும் தெப்பக் குளத்தில் இறங்கி ஒரு கை தண்ணீர் அள்ளிக் குடித்துவிட்டான். கோயில் தெய்வத்தின் உலாவுப் பிரதிநிதியான சுப்பு சாஸ்திரிகள் கண்டு விட்டார். அக்ரகாரத்தில் ஏக அமளி. அப்பொழுது சிறுவனாக இருந்த விஸ்வநாத சிரௌதி, தன்னை மீறிய கோபத்தில், அடித்த அடி கருப்பனைக் குருடாக்கியது. விளையும் பயிர் முளையிலே தெரியாதா?

ஆனால், சிரௌதி இளகிய மனம்உடையவர். கருப்பனுடைய ஸ்திதிக்கு மிகவும் பரிதபித்து தோட்டத்தில் காவல் தொழிலைக் கொடுத்தார். கல்யாணம் செய்து வைத்தார். தோட்டத்திலே குடிசை கட்டிக் கொடுத்தார். பிறகு தங்கக் கம்பியாகிவிட்டான் என்று எல்லோரிடத்திலும் சொல்லுவதில் வெகு பிரேமை.

அதெல்லாம் பழைய கதை.

கருப்பன் குருடனாகிவிட்டால் குழந்தைகள் பிறக்காதா? முதலில் ஒரு ஆண் குழந்தை. அவன் பெயர் பாவாடை. ஆண்டை சின்னசாமியும் ஏறக்குறைய இதே காலத்தில்தான் பிறநதான். இராமநாதன் சில சமயங்களில் தோட்டக் காட்டிற்கு வரும்பொழுது பாவாடையுடன் கேணியில் முக்குளித்து விளையாடுவதிலும், மரக் குரங்கு விளையாடுவதிலும் பரம உத்ஸாகம்.

அதெல்லாம் பழைய கதை.

இரண்டு பேரும் வித்தியாசமான இரண்டு சமூகப் படிகளின் வழியாகச் சென்றார்கள். இரண்டு விதமாகக் கண்டார்கள்.

பரமண்டலங்களிலிருக்கும் பிதாவாகிய கர்த்தரின் நீதிகளை,

ஆதனூரில் பரப்பும்படி ரெவ ரெண்ட் ஜான் ஐயர் ஒரு தடவை ஆதனூர் சேரிக்கு வந்தார். பாவாடையின் புத்தி விசேஷத் தைக் கண்டு அவனைத் தம் மதத் தில் சேர்க்க அனுமதித்து விட் டால், பெரிய பண்ணை மாதிரி ஆக்கி விடுவதாக ஆசை காட்டி னார். கருப்பனுக்கு, தன் மகன் 'இங்ருருசி' (English) படிக்க வேண்டும் என்று ஆசை. நீட்டு வானேன்? பாவாடை ஜான் ஐயருடன் சென்றான்.

ஜான் ஐயருக்கு ஒரு பெண் உண்டு. மேரி லில்லி என்ற பெயர். நல்ல அழகு.

அவளும் மிஷன் பள்ளிக் கூடத்தில் ஆண் பிள்ளைகளு டன் படித்தாள். எல்லாவற்றி லும் முதல் மார்க் எடுக்கும, பாவாடையிடம் (இப்பொழுது அவனுக்குத் தானியேல் ஜான் என்ற பெயர்) சிறிது பிரியம். நட்பு, வரவரக் காதலாக மாறி யது.

கிருஸ்தவ சமுதாயத்தில் இந் துக் கொடுமைகள் இல்லை யென்று ஜான் ஐயர் போதித் ததை நம்பி, மனப்பால் குடித்த ஜான் தானியேல், ஒருநாள் ஐய ரிடம் நேரிலேயே தன் கருத்தை வெளியிட்டான்.

ஜான் ஐயரவர்களுக்கு வந்து விட்டது பெரிய கோபம். ''பறக் கழுதை வீட்டை விட்டுவெளியே இறங்கு'' என்று கழுத்தைப் பிடித்து நெட்டித தள்ளினார்.

மனமுடைந்த தானியேலுக் குப் பாழ் வெளியாகத் தோன்றி யது உலகம். இந்த மன நிலைக்கு மதம்தானே சாந்தி என்கிறார் கள். கிறிஸ்தவனாக இருந்த பொழுது வேத புத்தகத்தை நன் றாகப் படித்திருந்தான். சுவாமி யாராகப் போயவிட வேண்டு மென்று கத்தோலிக்க மதத்தைத் தழுவி, சுவாமியார் பரிட்சைக் கும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாவிஸ் பிரதராக (Novice Brother) Father ஞானப் பிரகாசம் மேற்பார்த்த மடத்தில் இரண்டு வருஷங்கள் கழித்தான். சுற்றி நடக்கும் அபத் தங்களும் சில சுவாமியார்களின் இயற்கைக்கு விரோதமான இச் சைகளும், மனத்திற்குச் சற்றும் சாந்தி தராத இருப்புச் சட்டம் போன்ற கொள்கைகளும் அவன் மனத்தில் உலகக் கட்டுப்பாடே ஒரு பெரிய புரட்டு என்ற நம்பிக் கைகளைக் கிளப்பிவிட்டன.

அதனிடமும் விடைபெற்றுக் கொண்டு, திரு இராமசாமிப் பெரியாரின் சுயமரியாதை இயக் கத்தில் ஈடுபட்டு விட்டான். அதிலே அவன் ஒரு பெரும் தீவிர வாதி. இப்பொழுது தோழர் நர சிங்கம் என்ற பெயருடன் தனக் குத் தெரிந்த உண்மைகளை, அதில் ஒரு பைத்தியம் பிடித்தது போல், பிரசாரம் செய்து கொண்டு வந்தான்.

ஒரு தடவை தகப்பனாரைக் காண ஆதனூருக்கு வந்தான். பழைய எண்ணங்கள் குவிந் திருக்கலாம், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. அவனுககு இரண்டு உண்மைகள் தெரிநதன. தனக்கும் தனது குடும்பத்தின ருக்கும இடையே எண்ணங்களில், செய்கைகளில், ஏன் எல்லாவற்றி லுமே ஒரு பெரிய பிளவு இருக் கிறது என்பது ஒன்று. இன்னும் ஒன்று, தான் சென்ற பிறகுதனக்கு ஒரு அழகான-பறைச்சிகளுக்கும அழகாயிருக்க உரிமையுண்டு—



தங்கை, பதினாறு பிராயத்தாள் இருப்பதையறிந்ததுதான்.

ஆனால், இவர்களை மனிதரின் நிலைமைக்குக் கொண்டுவர எந்தப் பகீரதன் உண்டாகப் போகிறானோ என்ற மலைப்பு ஏற்பட்டுவிட்டது. தனது பிரசங்கங்கள் படித்தவர்களிடத்தில் செல்லும்; இந்த வாயில்லாப் பூச்சிகளிடத்தில்?

ராமநாதன், வீட்டில் செல்லப் பிள்ளை. இட்டது சட்டம். பக்கத்து ஜில்லாத் தலைநகரில் மெட்ரிக்குலேஷன் வரை படித்தான். அவனுடைய படிப்பு வேறு ஒரு தினுசு. கெட்டிக்காரன். பள்ளிக்கூடத்தில் மட்டுமல்ல. சிலரைப்போல பள்ளிக்கூடத்தில் மூழ்கிவிடவில்லை. காலத்தின் சக்தி வசப்பட்டு அதன் நூதன உணர்ச்சிகளில் ஈடுபட்டு இன்பப்பட்டவன்.

சென்னைக்குச் சென்று மேல் படிப்புப் படித்தான்; எம். ஏ., வரையில். அதற்குள் 1930 இயக்கம் வந்தது. தந்தை கலெக்டர் பதவியைவிட்டுத் தடியடி பட்டு, ஜெயிலுக்குச் சென்றான்.

ஜெயிலில் இருந்து வந்ததும் ஹரிஜன இயக்கத்தில் ஈடுபட்டான். தகப்பனாருக்கு வருத்தம் தான். ராமநாதனின் அசையாத மனத்தின் முன் சிரௌதியின் அன்புதான் நின்றது. கொள்கைகள் பறந்தன.

ஒரு தடவை ஆதனூருக்கு வந்திருந்தான். அப்பொழுது கருப்பனின் மகளுக்கு வயது வந்துவிட்டது. நல்ல இயற்கையின் பூரண கிருபை இருந்தது.


ஒரு நாள் இரவு நல்ல நிலா. தோட்டத்திற்குச் சென்றான். இரவு கொஞ்ச நேரந்தான். அதுவும் ஆதனூரில் கேட்க வேண்டுமா?

தோட்டக் கிணற்றில் யாரோ குதிப்பதுபோன்ற சப்தம். ஓடிப் பார்க்கிறான்; ஒரு பெண் உள்ளே. அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. உடனே அவனும் குதித்தான்.

''சாமி, கிட்ட வராதிங்க, பறச்சி, கருப்பன் மவ. சும்மா னாச்சிங் குளிக்கிறேன்'' என்ற குரல்.

''சரி, சரி. நீ விழுந்துவிட்டாயாக்கும் என்று நினைத்தேன். ஏறி வா'' என்று கரை ஏறினான்.

''இல்லை, சாமி'' என்று தயங்கினாள். பிறகு என்ன? இயற்கை இருவரையும் வென்றது.



ராமநாதனுக்கு... பிறகு ஒரு மகத்தான பாபம் செய்து விட்டோம் என்ற நினைப்பு..கருப்பன் மகளுக்கு, சின்னப் பண்ணையின் தயவு கிடைத்ததில் திருப்தி.

ராமநாதன் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்தான். 'அதெப்படி முடியும் சாமி' என்று சிரித்தாள்.

கருப்பனிடம் போய் நடந்ததைச் சொல்லிப் பெண்ணைக் கொடுக்கும்படி கேட்டான். அவனுக்குப் புதிய கொள்கைகள் எப்படித் தெரியும்?

''அது நயிந்தோ மகாப் பாவம் கண்ணானே அப்படிச் செய்யக் கூடாது.''

ராமநாதனுக்கு இடிவிழுந்தது போலாயிற்று.

மகாத்மா காந்தி தென்னாட்டில் ஹரிஜன இயக்கத்திற்காகப் பிரசாரம் செய்ய வந்தார். ஆதனூரில் ஐந்து நிமிஷம் தங்குதல, எல்லாம் ராமநாதனின் ஏற்பாடு. சிரௌதிகள் அவருடன் வாதம செய்ய புராண ஆதாரங்களுடன் தயார். இதில் சிரௌதிகளுக்கு இரட்டை வெற்றி என்ற நமபிக்கை. ஒன்று காந்தியின் கொள்கையைத் தகர்ப்பது. இரண்டாவது காந்தியின் முன்பே தன் புத்திரனிடம் சனாதனத்தின் புனிதத்தைக் காண்பிப்பது.

தோழர் நரசிங்கம் காந்தியை எதிர்த்துக் கேள்விகள் கேட்க ஆதனூருக்கு வந்தான். தங்கையின் சமாசாரம தெரிந்துவிட்டது. தகப்பனாரிடம் கலியாணம் செய்து வைத்துவிட வேண்டுமென்றும், அதற்குப் பறையரின் சமுதாயத்தின் கட்டுப்பாட்டால் செய்யமுடியும் என்றும் தெரிவித்தான். தகப்பனாரின் முட்டாள்தனமான நம்பிக்கையைத் தகர்க்க முடியவில்லை. 'பாப்பானின் சாயத்தைத் துலக்கிவிடுகிறேன்' என்று காத்திருந்தான்.

ரயில்வே ஸ்டேஷன் பக்கத்திலிருந்த மைதானத்தில் ஒரு மேடை; கியாஸ் லைட்; இத்தியாதி, இத்தியாதி. பெருங்கூட்டம். வெற்றி கொள்ள ஆசைப்படும் சனாதனமும் அதில் கலந்திருக்கிறது.

கருப்பன் கிழவன், 'மவாத்துமா கிழவரைப் பார்க்க ஆசை. கண் ஏது? அதென்னமோ? குருடருக்கு என்ன செய்ய முடியுமோ?'

தட்டுத் தடுமாறிக் கொண்டு வந்தான். எங்கோ தன் மகன் சப்தம்போல் இருக்கிறது என்று தடுமாறிக் கொண்டு ஓடினான்.

மாலைகள் வந்துவிட்டனவா என்று கவனித்து ஓடிக்கொண்டிருக்கும் ராமநாதன், சற்றுப் பின்னால் வந்தான். குறுக்குப் பாதை வழியாகத் தோழர் நரசிங்கம் எங்கிருந்தோ வந்து கொண்டிருந்தான்.

நெற்றிக் கண்ணைத் திறந்த சிவபிரான்போல் தலைப்பு வெளிச்சத்தைப் போட்டுக் கொண்டு கோஷித்துக் கொண்டு வருகிறது மதராஸ் மெயில். ஆதனூர் அதன் மரியாதைக்குக் குறைந்தது; நிற்காது. நாற்பது மைல் வேகம்.

என்ஜின் டிரைவர் விசிலை ஊதுகிறான்; கோஷிக்கிறான். குருடன் கம்பி வழியாகவே கடக்கிறான். மனம் குழம்பிவிட்டதா?

தூரத்திலிருந்து இருவர் அவனைக் கண்டுவிட்டார்கள். மகனும் மருமகனும்; இயற்கைச் சட்டத்தின்படி அப்படித்தான். சமுதாயம் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்.

வேகமாக ஓடிவருகின்றனர்.

வெளிச்சம், வெளிச்சம்.

மூவரும் சேரும் சமயம்.
இழுத்துவிடலாம்.

''ஐயோ!''

ஹதம். ரத்தக் களரி.

மூவரின் இரத்தங்கள் ஒன்றாய்க் கலந்தன; ஒன்றாய்த்தான் இருக்கின்றன.

இதில் யாரை நந்தன் என்பது?

புதிய ஒளியை இருவர் கண்டனர். இருவிதமாகக் கண்டனர்.

இறந்த பிறகாவது சாந்தியாமா?
சமுதாயத்திற்குப் பலிதான்.
அதை யார் நினைக்கிறார்கள்?
பத்திரிகையில் பெரிய நீண்ட செய்திகள்...
பிறகு ஆதனூரில்....!

**('ஸ்டார் பிரசுரம்' வெளியிட்டுள்ள ''ஆண்மை'' என்ற சிறுகதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.)**

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் — முத்தமிழ் விழா



"காஞ்சியில் பேரறிஞர் அண்ணா வாழ்ந்த இல்லம் நினைவாலயம் ஆகும்.''

''திரு. வி. க. நினைவு நாளைக் கொண்டாட ஏற்பாடு செய்யப்படும்''

'' பேரறிஞர் அண்ணாவின் நூல்களையும், எழுத்தாளர்களின் நூல்களையும் அரசு வெளியிடும்.''

—இந்த இனிக்கும் தகவல்களைப் பேரறிஞர் அண்ணா 71வது பிறந்த நாளையொட்டி நடந்த 'முத்தமிழ் விழாவில்' மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்தார்.

செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள், சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாக நடந்தது.

அன்று காலை, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி மாணவர்களின் நாதசுர இசையோடு நிகழ்ச்சி தொடங்கியது.

**அண்ணாவின் இயற்றமிழ்**

அன்று காலை நடந்த 'அண்ணாவின் இயற்றமிழ்' நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு பு.ரா. கோகுல கிருஷ்ணன் அவர்கள் தொடக்க உரையில் ''தூய்மையான அரசியல் வாழ்வு, தமிழ் வளர்ச்சிப் பணி ஆகியவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் அறிஞர் அண்ணா அவர்கள். குறுகிய மனப்பான்மை, சாதி மதக் கோட்பாடுகள், கட்சி அரசியல் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு விளங்கிய தமிழ் இனத்தின் தலைவர் அவர்'' என்றார்.

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம.பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில், ''அண்ணா அவர்கள் பண்பு மிக்கவர். அதிலும் அரசியலில் பண்பைக் காண்பது அரிது; இன்று அதைவிட அரிது.''என்றார்.

'அண்ணாவின் திரை இலக்கியம்' என்பது பற்றி திரு ஏ.எஸ்.ஏ. சாமி அவர்கள் பேசுகையில், ''திரைப்படம் ஒரு இலக்கியம் என்றால், அந்தத் திரைப்பட இலக்கியத்துக்கே ஒரு இலக்கணம் படைத்தவர் அறிஞர் அண்ணா!'' என்றார்.

''அண்ணாவின் மேடை இலக்கியம்' என்பது பற்றி டாக்டர் இரா. சனார்த்தனம் எம்.எல்.சி. அவர்கள் பேசுகையில், ''பணம் சம்பாதிக்கவோ - தொழிலாகக் கொண்டோ - நாடகங்களையும், சினிமாவுக்கு வசனங்களையும் அண்ணா எழுதவில்லை. சமூகத்தில் தோன்றிய ஏற்றத் தாழ்வுகளைச் சுட்டிக் காட்டுவதற்காக-அப்படிப்பட்ட தீமைகளை அகற்றுவதற்காக அவர் இவைகளைச் செய்தார்'' என்றார்.

'அண்ணாவின் நெடுங்கதைகள்' என்பதுபற்றி திரு தில்லை வில்லாளன் அவர்கள் பேசுகையில், ''அண்ணா அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தில் ஒரு பேனாவை வைத்துக் கொண்டே, புரட்சியை ஏற்படுத்திக் காட்டினார்கள். அதில் இரத்தம் இல்லை; சத்தமும் இல்லை'' என்றார்.

'அண்ணாவின் சிறு கதைகள்' என்பது பற்றி திரு அகிலன் அவர்கள் பேசுகையில், '' புதிய வாசகர்களை - அவர்கள் எழுதுமாறு, சிந்திக்குமாறு தூண்டியது. அண்ணாவின் கதைகள். கலையம்சங்கள் நிறைந்த கதைகளை-கருத்துக்கு வலிவூட்டும் கதைகளை அவர் எழுதியிருக்கிறார்'' என்றார்.

'அண்ணாவின் பொருளியல் கட்டுரைகள்' என்பது பற்றி திரு கு. ராஜவேலு அவர்கள் பேசுகையில், ''அண்ணா பெரிய அரசியல் தந்திரியாகவும், பொருளாதார நிபுணராகவும் விளங்கினார்'' என்றார்.

'அண்ணாவின் அரசியல் கட்டுரை' என்பது பற்றி பாவலர் மா. முத்துசாமி அவர்கள் பேசுகையில், ''தமிழ்ச் சமுதாயம் ஒன்றுபடவேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - இதுதான் பேரறிஞர் அண்ணாவின் அரசியல் தன்மையாகும்'' என்றார்.

'அண்ணாவின் உவமை நயம்' என்பது பற்றி திரு டி.கே.சீனிவாசன் அவர்கள் பேசுகையில்,

''சாதாரண மக்களுக்குப் புரியும்படி உவமைகளை அள்ளித் தெளித்தார் அவர். அண்ணாவின் உவமை, காலம் முழுவதும் நிற்கக்கூடியது'' என்றார்.

'அண்ணாவின் இலக்கியக் கட்டுரைகள்' என்பது பற்றி மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு வ. சுப.

மாணிக்கம் அவர்கள் பேசுகையில் ''அண்ணாவின் எழுத்துக்களையெல்லாம் முழுப்பதிப்புகளாக வெளியிடவேண்டும், அவை எளிய மலிவுப் பதிப்புகளாக அரசு வெளியிட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

'அண்ணாவின் பேருரைகள்' என்பது பற்றித் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பேசுகையில், ''அறிஞர் அண்ணா அவர்கள் இதய சுத்தியோடு ஒரே குறிக்கோளுடன் இருந்தார். அவரது பேருரைகள் இந்த நாட்டுக்கு, வரலாற்றுக்கு உந்து சக்திகளாக இருந்தன'' என்றார்.

சிறப்புரையாற்றிய மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் பேசுகையில், ''அண்ணாவின் பேச்சில் கனலும் இருந்தது; புனலும் இருந்தது. எதையும் தாங்கும் இதயம் பெற்ற அண்ணா வழி நடப்போம்'' என்றார்.

### இசைத்தமிழ்

மாலை 4 மணி அளவில், 'இசைத்தமிழில் அண்ணா' என்பது குறித்து திரு சீர்காழி கோவிந்தராசன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடந்தது.

### நாடகத்தமிழ்

மாலை 6 மணி அளவில் நடந்த 'அண்ணாவின் நாடகத் தமிழ்' என்னும் நிகழ்ச்சி சிறப்பாக இருந்தது. விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்ற மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''முத்தமிழ் என்ற தலைப்பில் அறிஞர் அண்ணாவின் பிறந்த



நாளைக் கொண்டாடுகிறோம். முன்னாள் குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் பிறந்த நாளை ஆசிரியர் தினமாகவும், நேருவின் பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகவும் கொண்டாடுவது போல, அண்ணாவின் பிறந்த நாளை முத்தமிழ் விழாவாகக் கொண்டாடுகிறோம்.

''அண்ணா அவர்கள் 30 ஆண்டுக்காலம் அரசியலுக்குத் தம்மை ஒப்படைத்துக் கொண்டார். 1938 லிருந்து 10 ஆண்டுக்காலம் மிகச் சிறந்த பேச்சாளராக, எழுத்தாளராகப் பெரிய இலக்கியவாதியாக இருந்தார். அதன் பிறகு தான் அவர் தன்னை முழுநேரமும் அரசியலுக்கு ஒப்படைத்துக் கொண்டார். அண்ணா யார் என்பதை நாட்டு மக்களுக்குச் சொல்லவே இந்த விழா''

தலைமை வகித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், ''அறிஞர் அண்ணா அவர்கள் பொருளாதாரச் சுரண்டல் மட்டுமல்ல, சாதி அடிப்படையிலான சுரண்டல் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் பாடுபட்டார்'' என்றார்.

அகில இந்திய எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் தீபம். நா. பார்த்தசாரதி அவர்கள் பேசுகையில், ''இந்த விழாவின் நாயகன் ஒரு எழுத்தாளராக - பத்திரிகாசிரியராக - நாடகாசிரியராக விளங்கியவர்'' என்றார்.

தமிழ்நாடு அரசு வருவாய் வாரிய உறுப்பினர் திரு க. திரவியம் ஐ.ஏ.எஸ்., அவர்கள் பேசுகையில், ''அறிஞர் அண்ணா அவர்கள், வைதீகச் சூழ்நிலையிலேயே சுயமரியாதைக் கருத்துக்களைத் தம் நாடகங்களில் புகுத்தினார்கள். படித்தவர்களுக்கும், பாமரர்களுக்கும் பாலமாக விளங்கினார்கள். தாழ்ந்த தமிழகத்தை உயர்த்தித் தழைக்கச் செய்தவர் அறிஞர் அண்ணா'' என்றார்.

புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர், காலம் சென்ற ஜெகசிற்பியன் அவர்களின் இலக்கியப் பணியைப் பாராட்டி அவர் தம் குடும்பத்தாருக்குத் தமிழ்த் தென்றல் 'திரு.வி.க. விருது' வழங்கி விழா நிறைவு சொற்பொழிவாற்றிய மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இங்கே எழுத்தாளர் ஜெகசிற்பியன் துணைவியாருக்குப் பரிசு அளிக்கப்பட்டது. அதனை பரிசு என்பதா? காணிக்கை என்பதா? இந்தக் காணிக்கையை ஜெகசிற்பியன் உயிரோடு இருந்து பெற்று இருந்தால் மகிழ்ச்சி அதிகமாக இருந்திருக்கும். தமிழகத்தின் துரதிருஷ்டம் பல நல்லவர்களை அவர்கள் மறைந்த பிறகுதான் மதிக்கிறோம். இந்த அம்மையாருக்குத் தந்த காணிக்கை, அவர் இழந்த இழப்புக்கு ஈடு ஆகாது.

''பல எழுத்தாளர்கள் நூல்களை எழுதுகிறார்கள். அதை வெளியிட எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் அறிவேன். அச்சகங்களின் படிக்கட்டுகளில் ஏறி இறங்குகிறார்கள். இதனால் நல்ல எழுத்தாளர்கள் சோர்ந்து விடுகிறார்கள். நிறைய பணம் பெற வேண்டியவர்கள் சில ஆயிரத்தைப் பெற்றுக் கொண்டு கொடுத்து விடுகிறார்கள். யாரோ இலட்சக்கணக்கில் பெறுகிறார்கள். இந்த நிலையைத் தடுக்க எழுத்தாளர்களுக்குப் பாதுகாப்புத் தர அரசால் தான் முடியும்.

''எழுத்தாளர்கள் தாங்கள் எழுதிய நூல்களை அச்சடிக்க விரும்பி, அதனை அரசிடம் ஒப்படைத்து, அதன் பலனை அரசும் எடுத்துக் கொண்டு, எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்கும் நிலை ஏற்படவேண்டும்.

''இதனைச் செயல்படுத்த ஒரு குழு அமைக்கப்படும். இதைச் செய்ய அரசுக்கு ஆசை இருக்கிறது. இதற்கு அறிஞர்களும், ஆன்றோர்களும் ஆசியும் ஒத்துழைப்பும் தரவேண்டும்

''அண்ணா அவர்கள் எழுதிய நூல்களை அரசே உரிமைபெற்று வெளியிட ஆவல் கொண்டுள்ளது. இதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போம். அது போல் பலருடைய நூல்களையும் வெளியிட முயல்வோம்.

''அதேபோல் காஞ்சியில் அண்ணா அவர்கள் வாழ்ந்த இல்லத்தை 'அண்ணா நினைவாலயமாக ஆக்க ஆர்வம் கொண்டிருக்கிறோம்.

''இதனைச் செயல்படுத்த நல்ல விவரம் தெரிந்தவர்-இதில் நம்பிக்கை உள்ளவர்களைக் கொண்ட சிறுகுழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும். அண்ணா வாழ்ந்த இல்லத்தை விலைபேசி, விலைக்கு வாங்க இருக்கிறோம்.

''அண்ணா அவர்கள் பல நாடகங்களை எழுதி இருக்கிறார். சிந்திக்க வைக்கும் நாடகங்கள் அவை. எழுத்தில் ஒரு புதிய மரபை உருவாக்கினார். அதனைப் பலரும் பின்பற்றுகிறார்கள்.''

இறுதியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் இலக்கிய நாடகமான 'நீதிதேவன் மயக்கம்' என்னும் நாடகத்தினை, நடிப்பிசைப் புலவர் நாடக மன்றத்தார் சிறப்பாக நடித்து அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றனர்.

நிகழ்ச்சித் தொகுப்பு: **பி.வி. கிரி**






# தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 16-9-79 காலையில் தொடங்கியது.

விழாவுக்கு வந்திருந்தவர்கள் அனைவரையும் தந்தை பெரியார் விழாக்குழு உறுப்பினர் முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

விழாவைத் தொடங்கி வைத்த மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், ''பெரியார் ஏழைகளுக்காக உழைத்தார். மக்கள் தமது மதிப்பை உணருமாறு செய்தார். கட்டுப்பாட்டுடனும் கடமையுணர்வுடனும் நடந்து கொள்வது அவசியம்'' என்று உணர்த்தினார்.

''மக்கள் ஒவ்வொரு பிரச்சினையிலும் சம்பிரதாயத்தையும், அதிகாரத்தையும் சார்ந்து விடாமல், தங்களது பகுத்தறிவையும் மனச்சாட்சியையும் கொண்டு பரிசீலிக்க வேண்டும் என்பதைப் பெரியார் வலியுறுத்தினார். சமத்துவம் சமநீதிக்காகப் போராடினார்.

''இந்தியா விடுதலை அடைந்து 32 ஆண்டுகள் ஆகியும்கூட மக்களில் பெரும்பாலானவர்கள் ஏழ்மை நிலைக்குக் கீழே வாழ்கிறார்கள். அண்ணல் காந்தியடிகள், பெரியார் ஆகியோர் போதித்த உணர்வுகளுடன் பணியாற்றினால் மக்கள் வாழ்க்கையை மதிப்புடன் நடத்தமுடியும்-குறைந்தபட்ச தேவைகளை யாவது நிறைவு செய்து கொள்ள முடியும்'' என்றார்.

விழாவில், தந்தை பெரியார் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கண்காட்சியை மாண்புமிகு கருநாடக மாநில முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

''சமூகப் பொருளாதார சுரண்டல் பற்றி இப்போதுதான் வட இந்திய மக்கள் விழிப்படைந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பெரியார் அவர்களின் போதனை மிகவும் அவசியம்.

''தெற்கில் உள்ள மக்கள் மதம், சாதி, மரபு, இறைவன் பெயரால் நடைபெறும் சுரண்டல்களை அறிந்து விழிப்பாக உள்ளனர் என்பது ஓர் உண்மை. இதற்குப் பெரியார் அவர்களின் பெரும் பணியே காரணம்.

''சுதந்திர இந்தியாவில் ஒரு புதிய சுரண்டல் வர்க்கம் உரு

இதுவரை எந்த அரசும் செய்திராத வகையில், தேசபக்தர்கள், தமிழறிஞர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் நல் அறிஞர்கள், கலைஞர்கள் ஆகிய பலருக்கு இந்த அரசு விழாக் கொண்டாடி மகிழ்ந்து வருகிறது. அவற்றில் ஒன்றே தந்தை பெரியார் நூற்றாண்டு விழா. இவற்றைச் செய்ய எண்ணி திட்டமிட்டு நடத்துகிற எம். ஜி. ஆர். அவர்களுடைய உள்ளம் மிகப் பெரிய பேருள்ளமாகும். இதற்காக அவரைத் தமிழகம் முழுதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

நாம் இவ் விழாவைக் கொண்டாடுவதின் மூலம் பெரியாருக்கு பொருளோ, புகழோ வந்துவிடப்போவதில்லை. அவை இரண்டும் அவரிடம் நிறைய உள்ளன. இதைச் செய்ய வேண்டியது நமது கடமை. இது நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலி. இதைச் செய்யாவிடில் நாம் நமது கடமைகளில் ஒன்றைச் செய்யத் தவறியவர்கள் ஆவோம்.

—திரு கி. ஆ. பெ. விசுவநாதம்.

*(சென்னை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவின் வரவேற்புரையில்......)*

வாக்கப்படுகிறது. ஏனென்றால் எல்லா வளர்ச்சியும் ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த மக்களுக்கே செல்கிறது. பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே வேறுபாடு அதிகரிக்கிறது. இதைத் தடுக்கவும் சமூக அநீதியை எதிர்த்துப் போராடவும் வடநாட்டிலும் பெரியார் அவர்களின் கருத்துக்கள் பரவி வேரூன்ற வேண்டும்.

''சாதியின் பெயரால் பாரம்பரியம் என்பதன் பெயரால் மூட நம்பிக்கைகளினால், நலிந்து கிடக்கும் மக்கள் முன்னேற முடியாமல் செய்யப்படுவதை எதிர்த்துப் பெரியார் போராடினார். இவ்விதம் அவர் போராடி, அதில் வெற்றி கண்டிராவிட்டால் இன்று தமிழகத்தின் முதலமைச்சராக உள்ள திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களோ, இதற்கு முன்னர் முதலமைச்சர்களாக இருந்த திரு. அண்ணாதுரை அவர்களோ, ஓமந்தூர் ராமசாமி அவர்களோ முதல்வர்களாக வந்திருக்க முடியாது.

''தெற்கே உள்ள ஏழை எளிய மக்கள் அரசியல் சமுதாயத்துறைகளில் விழிப்புணர்ச்சி அடைந்திருக்கிறார்கள். இதற்காகப் பெரியார் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்''

அடுத்து, மாண்புமிகு நீதிபதி திரு எஸ். மோகன் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் தொடங்கியது. கருத்தரங்கில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களும், திரு ஏ.பி. சனார்த்தனம், எம்.பி., அவர்களும், டாக்டர் ஹாண்டே எம். எல். சி. திரு நெ. து. சுந்தர வடிவேலு, திரு எஸ். வி. சிட்டி பாபு, திரு டாக்டர்பா. நடராசன். திரு டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, திருவாரூர் திரு கே. தங்கராசு, திரு டாக்டர் ஆறு. அழகப்பன், திரு டாக்டர் பொற்கோ, ஈரோடு திரு எம். சுப்பையா, திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் முதலியோர் பல்வேறு தலைப்புகளில் தத்தம் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

பிற்பகல் நிகழ்ச்சியாகக் கவியரங்கம் தொடங்கியது. மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் துவக்கி வைத்தார். கவியரங்குக்கு உவமைக் கவிஞர் சுரதா தலைமை ஏற்றார். கவிஞர்கள் திரு புலமைப்பித்தன் எம்.எல்.சி., திரு. நா. காமராசன், திரு முத்துலிங்கம், திரு இ. முத்துராமலிங்கம், திரு. தஞ்சைவாணன், திரு ஈரோடு தமிழன்பன், திரு சோம. இளவரசு, திரு. குமாரவேலன், திரு ஈரோடு ஆர். நாராயணசாமி ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் தமது கவிதைகளைப் பாடினர்.

மாலை நிகழ்ச்சியாக, திரு டி. எல். மகராசன் குழுவினர் அளித்த 'மெல்லிசை அமுது' நிகழ்ச்சி பெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்தார்.

**மாமூலன்**

## அரசு ஊழியர்க்குப் புதிய சலுகைகள்

**அரசுப் பணிகளில் சேருவதற்கான வயது வரம்பு 28 ஆக உயர்த்தப்படுகிறது.**

**வருங்கால சேமிப்பு நிதியின் வட்டி விகிதம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.**

**அரசு ஊழியர்களின் வருங்கால சேமிப்பு நிதிக்கு இப்போது ஏழரை சதவீதம் வட்டி தரப்படுகிறது. இப்போது முதல், 25 ஆயிரம் ரூபாய் வரையில் இந்தப் பணத்திற்கு 8 சதவீத வட்டி அளிக்கப்படும்.**

**தானாக ஓய்வு பெற விரும்பும் ஊழியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை எதுவும் இன்றி அவர்களுக்குச் சேர வேண்டிய ஓய்வு ஊதியத்தின் மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு பணத்தை உடனடியாக அளிப்பது என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.**

**பத்து ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட வீடுகள் வாங்குவதற்காக இருந்தால்தான் கடன் கொடுக்கப்படும் என்பது மாற்றப்படுகிறது. இனி, முப்பது ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட முதல் தரமான வீடுகளுக்கும் கடன் கொடுக்கப்படும்.**

—மாண்புமிகு முதல்வர்

**திரு எம். ஜி. ஆர்.**

(20-9-79-ல், தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் பேசியது.)



# மகளிர் அரங்கம்

தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா நாளின் இரண்டாவது கட்டமான 'மகளிர் அரங்கம்' சென்னையில், வள்ளுவர் கோட்டத்தில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

விழாத் துவக்கத்தில் குடந்தை சீனிவாசன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நிகழ்வுற்றது.

17.9.79 அன்று, விழாக் கோலம் பூண்டிருந்த வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தமிழக சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி தாரகேசுவரி சின்கா அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார். அவர் தனது தொடக்க உரையில் குறிப்பிட்டதாவது.

''பெரியார் விழா என்பது, இந்தியா முழுவதுமுள்ள பின்தங்கிய மக்களின் பெருமகிழ்ச்சிக்குரிய விழாவாகும். சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும், தீண்டாமையையும் ஒழிக்கப் பாடுபட்டவர்தான் பெரியார். அவர் இந்த விஷயத்தில் குமுறும் எரிமலையாக - கொந்தளிக்கும் கடலாக விளங்கினார். அவரது கொள்கைகள் ஆயிரமாயிரம் ஆண்டுக்காலங்கள் நிலைத்திருக்கும் பெருமையுடையவை.

''பெரியார் என்பது தனி மனிதனின் பெயரல்ல. ஒரு சகாப்தத்தின் பெயர். அவர் இறந்துவிடவில்லை; பிரிந்திருக்கிறார். அவ்வளவே! அவர் கொள்கைகள் என்றும் அழியாது.

''மாண்புமிகு பெரியார் அவர்களின் கொள்கைகளை நிறைவேற்றுவதில், நம்முடைய முதல்வர் அவர்கள் அவருடைய வாரிசாகத் திகழ்ந்து வருகிறார்''.

மகளிர் அரங்கத்திற்கு மத்திய சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. சத்தியவாணி முத்து அவர்கள் தலைமை தாங்கினார். தலைமை உரையில் அவர் கூறியதாவது:

''எல்லாம் ஆண்டவன் செயலே என்கிற மூட நம்பிக்கையில் மூழ்கித் துருப்பிடித்திருந்த சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றவர் தந்தை பெரியார் அவர்கள் ஆவார்.

''வடநாட்டில், மனிதாபிமானமற்ற மதச் சண்டைகளும், சாதிச் சண்டைகளும் உள்ளன என்றால் தந்தை பெரியார் அவர்களைப் போன்ற தனிப்பெருந் தலைவர்கள் யாரும் வடக்கே இல்லாததே காரணமாகும்.

''சமுதாயத்தின் அடிமட்டத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் மக்கள் தலைநிமிரச் செய்யவேண்டும். என்று தந்தை பெரியார் அவர்கள் கனவு கண்டார். அதை நனவாக்கி வருகிறார் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள்.''

இவ்வாறு அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

மகளிர் அரங்கத்தில் -திருமதி சௌந்தரா கைலாசம், பெ.சந்திரா, செல்வி பாகீரதி, திருமதி சிவகாமி சிதம்பரனார், திருமதி விசாலக்குமி சிவலிங்கம், திருமதி அரசு மணிமேகலை, செல்வி கஸ்தூரி, பாக்கியவதி ஆகியோர் உரையாற்றினார்கள்.

விழா முடிவில், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் நன்றி கூறினார்.




தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா 20-9-79 அன்று தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

**ஊர்வலம்**

விழா நாளன்று பிரம்மாண்டமானதோர் ஊர்வலம் எழுச்சிமயமாக நடைபெற்றது. அன்று மாலை 4 மணியளவில், சைதாப்பேட்டையில் உள்ள ஒய். எம். சி. ஏ. திடலிலிருந்து புறப்பட்ட இந்த ஊர்வல முகப்பில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படம் அலங்கரிக்கப்பட்ட டிரக் ஒன்று வந்தது. அதைத் தொடர்ந்து தந்தை பெரியாரின் முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகளை சித்தரிக்கும் எழிலோவியங்கள் தாங்கிய 25 அலங்காரவண்டிகள் வந்தன.

அவற்றின் இடையிடையே என். சி. சி., சாரணர், ஊர்க்காவல் படையினர், மாணவர், மகளிர் ஆசிரியப் பெருமக்கள், பல்வேறுவகை வாத்திய இசைக் குழுவினர் ஆகியவர்களோடு கரக ஆட்டம், சிலம்ப ஆட்டம், கத்திச் சண்டை, புலிவேஷம், தீப்பந்த ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் போன்ற கிராமியக் கலைக் குழுவினரும் காட்சி விருந்தளித்தவாறு வந்தனர்.

**முதல்வரும் அமைச்சர்களும்**

தேனாம்பேட்டையில் ஒரு மேடைமீது நின்று, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் இந்த ஊர்வலத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள்.


ஊர்வலம் வந்த அறிஞர் அண்ணா சாலையின் இருமருங்கிலும் மட்டுமல்லாமல், மாடிக் கட்டிடங்களின் மீதும், படிகளின் மீதும் நின்று பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்த ஊர்வலத்தைக் கண்டு களித்தார்கள்.

இந்த ஊர்வலம் ஏறத்தாழ 8 மணியளவில் தீவுத்திடலை வந்தடைந்தது.

**கடற்கரையில் இசைமழை**

அன்று மாலை ஆறு மணிக்கு மெரீனா கடற்கரையிலுள்ள சீரணி அரங்கத்தில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் துவக்கமாக 6 மணியளவில், அரசுக் கலைஞர்



கலைமாமணி மதுரை எஸ்.சோமு அவர்கள் தம் குழுவினருடன் தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய பாடல்களைப் பாடி இசைமழை பொழிந்தனர்.

வங்கக் கடல் பெரிதா, மக்கட் கடல் பெரிதா என்ற திகைப்பை உண்டாக்குவதாக அமைந்திருந்தது கூட்டம்!

சீரணி அரங்கம், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தோடு வண்ண விளக்குகளால்அலங்கரிக்கப்பட்டிருந்தது. கடற்கரையில் ஆங்காங்கே குழல் விளக்குகளும், பெரு விளக்குகளும் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன!

வாணவேடிக்கைகள் வசீகரம் காட்டுவதாயிருந்தன. வெடிச் சப்தங்களும், வேட்டு முழக்கங்களும் இடியோசையை மிஞ்சின!



**சிறப்புக் கூட்டம்**

7.45 மணியளவில், தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், சிறப்புக் கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலோடு தொடங்கியது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

**பெரியார் புரட்சி மொழிகள்**

'பெரியார் புரட்சி மொழிகள்' என்ற தலைப்பின் கீழ், தமிழக அரசு தயாரித்துள்ள அரிய நூல் ஒன்றினை,மாண்புமிகுமேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு, ம. பொ. சி. அவர்கள் வெளியிட முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

24 தலைப்புகளின்படி தொகுக்கப்பட்ட அந்நூற் பெருமையினை விளக்கி மேலவைத் தலைவர் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

நூற்றாண்டு விழாக் குழுவின் பணிகள் பற்றிய நாவலர் அவர்களின் தலைமை உரைக்குப் பின்னர், செட்டிநாட்டரசர் முத்தையா அவர்கள் உரையாற்றினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு பி. இராமமூர்த்தி உரைக்குப் பின்னர், ஆசிரியர்களின் மாநிலப் பரிசு பெற்ற கவிதைத் தொகுப்பு நூல் 'பெரியார் எனும் பேரொளி' 'தமிழகப் பள்ளிக் கல்வித்துறையினர் பெரியாரியல் கருத்தரங்கு சிந்தனையாளர்களின் எழுத்துரைக்கோவை' ஆகிய இரண்டு நூல்களை வெளியிட்டு மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

டாக்டர் எம். சந்தோஷம் திருஆர். மார்க்கபந்து எம்.எல்.ஏ. திரு செய்குத் தம்பி, திரு. குமரி அனந்தன், திரு, கு. கிருஷ்ணசாமி, திருக்குறள் முனுசாமி, கே. எஸ். அப்துல் வகாப் எம்.எல்.சி., மாண்புமிகு இந்திய அரசு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, மாண்புமிகு இந்திய அரசு ரசாயனத்துறை அமைச்சர் திரு. பாலாபழனூர் ஆகியோர் தன்மானச் சிங்கம் தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கைகள் பற்றியும், அவர்கள் தம் அரிய சமுதாயத் தொண்டு குறித்தும் விளக்கி உரை நிகழ்த்தினார்கள்.

**மாண்புமிகு முதல்வர்**

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விழா நிறைவு உரையாற்றினார்.

தம்முடைய நீண்ட உரைக்குப் பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் - பூந்தமல்லி நெடுஞ்சாலையை தந்தை பெரியார் நெடுஞ்சாலை எனப் பெயர் மாற்றம் செய்யும் பெயர்ப் பலகையினைத் திறந்து வைத்தார்.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவினையொட்டி சென்னை மாநகரில் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் அழகுற அமையவிருக்கும் 'பெரியார் நூற்றாண்டு விழா மண்டபத்'திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**உதவித் தொகை**

தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கைகளை ஏற்று, சீர்திருத்தப்பணிகளில் ஈடுபட்டு உயிர் நீத்த 18 பேர்களின் குடும்ப வாரிசுகளுக்குத் தலா 5 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை மாண்புமிகு முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்டது.

தந்தை பெரியார்அவர்களோடு நெருங்கிப் பழகி, பொதுத் தொண்டாற்றி, வயது முதிர்ந்து வலுவிழந்த நிலையில் உள்ள 11 பேர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூபாய் 2 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்பட்டது.

தந்தை பெரியார் அவர்களின் உருவோடுகூடிய கேடயங்களும் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்டன.

தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய கட்டுரை — கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கான ரொக்கப் பரிசுகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இந்த அன்பளிப்புகள் முடிந்தபின், செய்தி, மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு என். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நன்றி நவின்றார்.

சிறப்புக் கூட்டத்தில் பங்கேற்றுச் சிறப்பித்தவர்களுக்கு,விழாக் குழுவின் சார்பில், தந்தை பெரியார் அவர்களின் திருவுரு தாங்கிய கலை நுணுக்க மேம்பாடுடைய தஞ்சைத் தட்டு வழங்கிடப்பட்டது.

அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்கள் பலரும் இச்சிறப்புக் கூட்டத்திற்கு வருகை தந்தனர்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
**—இராசேந்திரன்.**

வனவிலங்கு வார விழா

# வனவிலங்குகளை காப்போம்!

தே. சு. பெரியசாமி
வனப் பயன்பாட்டு அலுவலர்

கண்ணைக் கவரும் செடி கொடிகளும், மரங்களும், வனப்பு மிக்க விலங்குகளும் நிறைந்தது இந்தியா. இயற்கையின் எழிலை இந்தியாவில் நெடுகக் காணலாம். பலவித விலங்குகள், விதவிதமான பறவைகள் இவற்றைச் சித்திரிக்காத கலைப் பொருள்களும் உண்டோ! நாட்டின் கிராமிய கதைகளில், கவிதைகளில் சமய விளக்கங்களில், விலங்குகளும், பறவைகளும் முக்கியப் பாத்திரங்களாகவே இருக்கின்றன. நம் தமிழ்நாடு பலதரப்பட்ட உயிர் வகைகளுக்குப் பெயர் பெற்றது.

நூறு ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் ஏராளமான விலங்கினங்கள் இருந்தன. கறுப்புக் கலைமான், புள்ளிமான் போன்றவை இந்தியச் சமவெளிப் பகுதிகளில் கூட்டம் கூட்டமாக இருந்தன. காட்டெருது, புலி, யானை இவைகள் காடுகளில் நிறைந்திருந்தன. ஆனால், இப்போது நிலைமை வேறு.

கடந்த 2000 ஆண்டுகளில் 107 வகை பிராணி இனங்கள் முழுமையாக அழிந்துபோய் விட்டன. இவற்றில் 70 இனங்கள் கடந்த 100 ஆண்டுகளில் அழிந்து போனவை என்று கூறப்படுகிறது. வனத்துறையிலும், பிராணிகள நலத்துறையிலும் ஈடுபட்டுள்ளவர்களின் கணக்குப்படி தற்போது ஏறத்தாழ 600 வகை பிராணி இனங்கள் ஏறக்குறைய முற்றிலும அழிந்துபோய்விடும் நிலையில் இருக்கின்றன என்று கூறப்படுகிறது.

ஒரு காலத்தில் வட இந்தியக் காடுகளில் எங்கும் காணப்பட்ட சிங்கம் இப்போது குஜராத்தில் கிர் காடுகளில்தான் வசிக்கிறது. ஒரு சமயம் மத்திய இந்தியாவில் சகஜமாகக் காணப்பட்ட ஒரு வகை சிறுத்தையை இப்போது மிருகக் காட்சிச் சாலையில்தான் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அம்மாதிரியே, முன்பு பல இடங்களில் இருந்த காட்டெருமையை இப்போது அஸ்ஸாமிலுள்ள காரசிங்கா, மானஸ் வனவிலங்கு காப்புக்கான இடங்களிலும், மத்திய பிரதேசம், ஒரிசா மாநிலங்களில் சில பகுதிகளிலும் காணலாம். நீலகிரி வரையாடு, கருங்குரங்கு போன்ற இனங்கள் அறவே இல்லாமல் போகும்நிலை ஏற்பட்டிருக்கிறது. சதுபபு நிலை மான், நான்கு கொம்புகளுடைய மான், பனிச் சிறுத்தை, காஷ்மீர் மான், கஸ்தூரி மான், இந்திய நாரை, சிவப்புத்தலை வாத்து, வெள்ளைநிறக் காட்டுவாத்து ஆகியவையும் மறைந்து வருகின்றன.

மக்கள்தொகைப் பெருக்கம், நகர நெரிசல் இவற்றால், காடுகளிலும் புல் வெளிகளிலும், மக்களின் குடியிருப்புகள் தோன்றியிருக்கின்றன. மக்கள் வசதிக்காக மலைக்காடுகளும், அக்கறையின்றி அழிக்கப்படுவதால், வன விலங்குகளுக்குத் தக்க இருப்பிடம் இல்லாமல் போய்விட்டது. மின்சாரப் பாசனத்திட்டங்கள் உணவு உற்பத்தி இயக்கம்,விரைவான தொழிலபிவிருத்தி இவற்றினாலும் வனவிலங்குகள் இருப்பிடம் மேலும் குறைந்திருக்கிறது.


காடுகள் அழிப்பு தவிர பிராணிகளை வேட்டையாடுவதும் பிராணிகள் அழிவதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. யானைகளின் தந்தத்திற்கும், புலி, மான் தோல்களுக்குக் கிடைக்கும் நல்ல விலையும் இவைகள் மனித வேட்டைக்குப் பலியாகக் காரணமாக உள்ளன.

இந்த அற்புத விலங்குகளையும், பறவைகளையும் காக்க தக்க முயற்சி தேவை. வனவிலங்குகளைப் பாதுகாக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. வேட்டையாட சட்டரீதியில் கட்டுப்பாடுகள், சில மிருகங்களையும், பறவைகளையும் கொல்லக் கூடாது என அறிவிப்பு தவிர அபூர்வ விலங்குகளையும் விலங்குப் பொருட்களையும் ஏற்றுமதி செய்யக் கட்டுப்பாடு விதித்தும், விலங்குகள் காப்புக் கேந்திரங்கள், தேசிய பூங்காக்கள், மிருகக் காட்சிச் சாலைகள் ஆகியவற்றை அமைத்தும், அரசு, விலங்கினங்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. வன விலங்குகளின் பாதுகாப்புக்காக மக்களின் உதவியைப் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிராணிகளைக் காக்க பல்வேறு பிரசார முறைகள் சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓரளவு பிராணிகளை அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி இருக்கிறது என்றாலும் அவைகளை முழுமையாக நிறுத்த முடியவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

இந்தியாவின் மற்ற பகுதிகளில் இல்லாத சில பிராணி மிருக வகைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இவற்றைக் காப்பாற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிங்கமுகக் குரங்கு என்னும் ஒரு விசேஷ வகைக் குரங்கு மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும், திருநெல்வேலி அருகே உள்ள களக்காடு சரணாலயத்திலும் காணப்படுகின்றன. இந்த வகைக் குரங்கும் களக்காடு பகுதியில் 800 மட்டுமே இருக்கின்றன.





பிராணிகளின் அழிவு குறித்து விளக்கம் தர இந்தப் பிராணி இனமே போதுமானது.

கேரளாவில் உருவாக்கப்பட்டு வரும் ''சைலண்ட் வேலி மின் திட்டம்'' அந்தப் பகுதியிலும் உள்ள இந்த வகைக் குரங்குகளை அழித்துவிடும். இதைப் போலவே நீலகிரிதார் என்றழைக்கப்படும் மானைப் போன்ற ஆடு வகை தென் இந்தியாவிலேயே 2000 தான் இருக்கின்றதாம். இவற்றில் பாதி தமிழ்நாட்டில் இருப்பதாக அறியப்படுகிறது.

தமிழ்நாட்டில் முன்பெல்லாம் அதிக அளவில் காணப்பட்ட ''பிளாக் பக்'' என அழைக்கப்படும் மான் வகை இப்போது கிண்டி ராஜபவனத்தில் மான் சரணாலயப் பகுதியில் ஓரளவு காணப்படுகிறது. இதே வகை மான் கோடிக்கரையிலும், பவானி சாகர் பகுதியிலும் சிறிதளவு இருக்கின்றன. சிவப்புத் தலை வாத்து வகை, சீட்டா என்ற புலி வகை ஆகியவை ஏற்கெனவே அழிந்துபோன நிலையில் உள்ளன. இந்திய யானைகளின் எண்ணிக்கை குறைந்துவருவதும் வருத்தத்திற்குரியவையாகும்.

பிராணிகள் அழிப்பு தவிர சில பறவைகள் இனங்களின் அழிவும் ஏற்பட்டுள்ளது. பறவைகள் வேட்டையும், அவைகள் தங்கும் இடங்கள் விவசாயத்துக்காக அழிக்கப்படுவதும் பறவை இனம் அழிந்து போவதற்கு முக்கியக் காரணங்கள். வேடந்தாங்கல் பகுதியில் தற்போது அங்குள்ள மரங்கள் அழிக்கப்பட்டதால் முன்பு இருந்த அளவிற்கு அங்கு பறவைகள் இருக்கவில்லை. தமிழ் நாட்டின் வனங்களின் பிராணிகள் நலத்தைக் காப்பாற்றிட வனத் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

தமிழ்நாட்டில் தற்போது 8 சரணாலயங்கள் இருக்கின்றன. முதுமலை விலங்குகள் சரணாலயம், முண்டந்துறை சரணாலயம், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், கோடிக்கரை சரணாலயம், கிண்டி மான்கள் சரணாலயம், ஆனைமலை சரணாலயம், களக்காடு சரணாலயம், வேட்டங்குடி ஆகியவை தவிர, புதிதாக ''நீலகிரிதார்'' என்றழைக்கப்படும் மானைப் போன்ற ஒரு வகைச் சரணாலயம் ஒன்றை ஏற்படுத்தவும் முயற்சிகள் நடந்து வருகின்றன.


இவை தவிர அழிந்துபோன சிலவகை பிராணிகளை அவை வாழ்ந்த இடங்களிலேயே மீண்டும் வளர்க்கவும் வனத்துறை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் ''பிளாக் பக்'' என்ற மான்வகை செங்கற்பட்டு, வட ஆர்க்காடு பகுதிகளில் மீண்டும் வளர்க்கப்பட்டு வருகிறது. இவைகளைக் காடுகளில் விடும் நேரத்தில் அவை மற்றப் பிராணிகளால் அழிக்கப்பட்டு விடாமல் பாதுகாத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றது.

வனத்துறையில் குறிப்பிடத்தக்க மற்றொரு திட்டம் கிருஷ்ணகிரி அணைக்கட்டுப் பகுதியில் முதலை வளர்க்கும் திட்டமாகும். இந்த 'மார்ஷ்' வகை முதலைகள் மீன்களைத் தின்று வாழும் மீன்களை அழித்துச் சாப்பிடும் தன்மை கொண்டது. இதை வளர்ப்பதால் மீன்களைச் சாப்பிடும் மீன் இனத்தை அழித்து விட வாய்ப்பு இருக்கிறது. இந்த முறை எகிப்து நாட்டில் நைல் நதியில் அமலாக்கப்பட்டதாகவும், தற்போது இந்த வகை முதலைகள் கிருஷ்ணகிரி அணைப் பகுதியில் வளர்க்கப்பட்டு வருகிறது. இது தவிர யானைகளைப் பாதுகாக்கும் பணியிலும் வனத்துறை ஈடுபட்டுள்ளது.

வனச்சட்டத்தில் மிருகங்களை வேட்டையாடுவது தடை செய்யப்பட்டிருந்தாலும், அவற்றைக் கொன்று அவற்றின் பாகங்களை விற்பனை செய்வது பெருமளவில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. வனத்துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டாலும், அவற்றால் பலன் கிடைத்து விடாது. மக்களும் தக்க ஒத்துழைப்புத்தந்தாக வேண்டும். ''ஒரு மிருகம் அழிந்து விட்டால் அதை மீண்டும் உருவாக்குவது என்பது எளிதானதல்ல'' இதைப் பொது மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

எனவே, வனங்களில் வாழும் மிருகங்கள், பறவைகள் அழியாமல் காத்திட அனைவரும் ஒத்துழைத்தால்தான் முடியும் என்பதால் அதற்கான பிரசாரத்தில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளார்கள்.

இதனைப் பொதுமக்கள் புரிந்து கொள்ளும் வகையில் வனத்துறையினர் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் வாரத்தில் வன விலங்கு வார விழாவாக தமிழ் நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் இவ்வாண்டும் 25-வது ஆண்டு வனவிலங்கு வார விழாவாக அக்டோபர் முதல் வாரத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் விழாக் கொண்டாட திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாண்டு நடைபெறும் விழாவில் பொதுமக்கள் அனைவரும் பங்குகொண்டு வனவிலங்குகளால் இந்நாட்டிற்கு ஏற்படும் நன்மைகளையும் வனவிலங்கு அழிந்துவிடாமல் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் அவசியத்தையும் நன்கு புரிந்து கொண்டு பொதுமக்கள் இதற்கான தங்களது ஒத்துழைப்பை நல்க வேண்டும் என வனத்துறையினர் கேட்டுக் கொள்கின்றனர்.



# காவிரியின் கதை!

ஜூன் 12, 1965 மேட்டூர் அணையிலிருந்து காவிரி நீரைத் திறந்துவிட்ட நாள்! 14 ஆண்டுகள் கழித்து மீண்டும் இவ்வாண்டு அதே ஜூன் 12ல் மேட்டூர் அணையிலிருந்து குறுவைப் பாசனத்திற்காக நீர் திறந்துவிடப்பட்டது. இடையிலுள்ள 14 ஆண்டுகளில் காலம் தாழ்த்தியே மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டு வந்தது. பருவமழை சரியான காலத்தில் பெய்யாததே இதற்கு முக்கிய காரணமாகும்.

ஜூன் மாத மத்தியில் நீர்விடுவதால் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நிலங்களில் குறுவை அமோகமாகப் பயிரிட நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தஞ்சைத் தரணியைத் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக்கிடும் காவிரி ஆற்றின் கதை சுவையானது:

தலைக் காவேரி கர்நாடக மாநிலத்திலுள்ள குடகுப் பகுதியில் மெர்க்காரா என்று இடத்தில் உற்பத்தி ஆகிறது.

கர்நாடகத்தில் காவிரியுடன் வந்து சேரும் முக்கிய உபநதிகள் ஆறு: 1. கபினி, 2. ஏமாவதி, 3. இலட்சுமணதீர்த்தா 4. லோகபவானி. 5.சிம்சா 6.அரக்காவதி.

தமிழகத்தில் கீழ்க்கண்ட முக்கிய உபநதிகள் காவிரியுடன் வந்து கலக்கின்றன; 1.பாலாறு 2. சந்நத் குமாரநதி 3. பவானி, 4. அமராவதி 5. நொய்யல்.

ஆக, 11 முக்கிய உபநதிகள் காவிரியுடன் வந்து சேருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் வந்ததும் காவிரி பிரிந்து, 36 கிளை நதிகளாக மாவட்டத்தின் பலவேறு பகுதிகளுக்குச் சென்று தஞ்சையை வளமுடையதாக்குகின்றது.

**காவிரியில் பிரியும் கிளை நதிகள் :**

1. அரசலாறு 2. குடமுருட்டி 3. நாட்டாறு 4. கீர்த்தி மன்னியாறு 5. நூலாறு 6. வஞ்சியாறு 7. நந்தலாறு 8. வீரசோழன் 9. மஞ்சலாறு 10. மகிழலையாறு 11. மன்னியாறு 12. புதுமன்னியாறு 13. பழவாறு 14. பொத்தரசனாறு 15.முடிகொண்டானாறு 16. புத்தாறு 17. வளம்பாறு 18. திருமலைராசன். 19.குமுக்கி மன்னியாறு.

**வெண்ணாற்றின் கிளைகள் :**

1. வெண்ணாறு 2. வெட்டாறு 3. கோரையாறு 4. வடவாறு 5. பாமணியாறு 6. முல்லையாறு 7. அடப்பாறு 8. அய்யனாறு. 9. அரிச்சந்திர நதி 10. வெள்ளையாறு 11. பாண்டவயாறு 12. சுள்ளனாறு. 13. ஓடம்போக்கியாறு 14. காட்டாறு 15. கடுவையாறு.

இதில் காவிரியின் கிளைகள் மூலம் 4,93,837 ஏக்கரும், வெண்ணாற்றின் கிளைகள் மூலம், 4,65,307 ஏக்கரும் பாசனமடைகின்றன.

காவிரி ஆற்றின் முன் கட்டப்பட்டவை இரண்டு நீர்த்தேக்கங்கள் ஆகும். முதலாவது நீர்த்தேக்கமான கிருஷ்ணராஜசாகர் அணை கர்நாடக மாநிலத்தில் உள்ளது. 60 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது இது. நீர் கொள்ளளவு 43934 மில்லியன் கன அடி. அதிகபட்ச நீர்மட்டம் 124 அடி. அதிகபட்ச நீர் தேங்கக் கூடிய பரப்பளவு 49.90 சதுர மைல்; அதிக அளவு தண்ணீர் இருக்கும்போது நீர்ப்பகுதியின் நீளம் 25 மைல்.

இரண்டாவது, மேட்டூர் அணை. 1925-1934ல் கட்டப்பட்டது. நீர் கொள்ளள்வு 93470 மில்லியன் கன அடி. பரப்பளவு 59.25 சதுர மைல். அதிக அளவு தண்ணீர் தேங்கியிருக்கும் பொழுது நீர்ப் பகுதியின் நீளம் 33 மைல்.

மேலே கூறப்பட்ட இரண்டு அணைகள் தவிர, காவிரி ஆற்றில் 5 அணைக்கட்டுகளும் உள்ளன. அணையில் அல்லது நீர்த்தேக்கத்தில் தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. இந்த அணைக்

கட்டுகள் வரும் தண்ணீரை நிறுத்திப் பல்வேறு பகுதிகளுக்குக் கால்வாய் மூலமாக நீரைப் பிரித்து வழங்கிடப்பயன் படுத்தப்படுவனவாகும். அந்த 5 அணைக்கட்டுகளின் விவரம் பின்வருமாறு:

1. சேடர்பாளையம் அணைக்கட்டு
2. கட்டளை அணைக்கட்டு
3. மேல் அணை
4. கல்லணை
5. கீழ் அணைக்கட்டு

கரிகாலன் கட்டிய கல்லணை-இதில் கல்லணை சரித்திரப்புகழ் பெற்றது. இரண்டாம் நூற்றாண்டில் சோழப் பேரரசன் கரிகாலனால்கட்டப்பட்டதுஇந்தஅணை. இலங்கையிலிருந்து கொண்டு வரப்பட்ட கைதிகள் மூலம் கரிகாலனால் இவ்வணை கட்டப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். கல், களிமண் இரண்டும் சேர்த்துக் கட்டப்பட்டதால் கல்லணை என்று பெயர் பெற்றது. பிற்காலத்தில் இந்த அணையின் மீது பாலமும் புதிய வகை மதகுகளும் ஆங்கில அரசு இருந்தபொழுது அமைக்கப்பட்டன.

1800-ல் இந்த அணையைத் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களிடமிருந்து ஆங்கில ஆட்சியினர் பெற்றனர். 1804ல் அணையின்மீது தண்ணீரை ஏற்றிப் பாசன வசதி கொடுப்பதற்காகக் குத்துக் கற்களைப் பாவினார்கள். 1804ல் இப்போது காண்கிற பாலம் அமைக்கப்பட்டது.

1886ல், தானே வெள்ளக் காலத்தில் கீழே விழும் இரும்புப் பலகைகள் பொருத்தப்பட்டன.

1899ல் 5 அடி உயரமுள்ள திருகுப் பலகைகள் பொருத்தப்பட்டன.

1910ல் மணற் போக்கிகள் கட்டப்பட்டுக் கல்லணைக்கு மேலே வரும் மணலைக் கொள்ளிடத்தில் தள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

1924ல் அதிக தண்ணீர் வரத்தைக் கட்டுப்படுத்தி கல்லணைக்குச் சேதம் வராமலிருக்க கல்லணைக்கு மேலே இடது கரையில் சுமார் ஒரு மைல் நீளமுள்ள படுக்கை அணை கட்டப்பட்டது.

1925-34ல் கல்லணைக் கால்வாய் வெட்டப்பட்டது.

பாசன வசதிக்காக ஏறத்தாழ 30,000 கால்வாய்கள் உள்ளன. கால்வாய்களின் நீளம் 25,000 மைல்கள். இந்தக் கால்வாய்களின் மொத்த தூரம் உலகத்தை ஒரு சுற்று சுற்றி வருவதற்குச் சமமாகும்!



## தருமபுரி மாவட்டத்தில் கிராமக் குடிநீர்த்திட்டம்

தருமபுரி மாவட்டத்தில் குடிநீர் வழங்கும் பொருட்டு தனியாக ஒரு கோட்டம் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

1976-77ல் வறட்சி மீட்புப் பணித் திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக 41 கை இயக்கு நீர் ஏற்றுக் குழாய்களும், 2,3-வது கட்டமாக 109 கை இயக்கு நீர் ஏற்றுக் குழாய்களும், 4-வது கட்டமாக 225 கை இயக்கு நீர் ஏற்றுக் குழாய்களும் கிராமங்களில் அமைக்கப்பட்டன. இக் கைக்குழாய் இயக்குத் திட்டத்தை 1977ல் விசை இயந்திரத் திட்டமாக மாற்றியமைத்திட அரசு ஆணையிட்டது.

மொரப்பூர் ஒன்றியத்தில் தெக்கலநாயக்கன்பட்டி, ஆவலாம் பட்டி, ஒபிலிநாயக்கன் அள்ளி ஆகிய குடிநீர்த் திட்டங்களும், ஒசூர் ஒன்றியத்தில் ஒன்னல்வாடி குடிநீர்த் திட்டமும் வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளன. 1977-78ல் 150 கை இயக்கு நீர் ஏற்றுக் குழாய்கள் வறட்சித் திட்டத்தின் முதல் கட்டமாக அமைக்கப்பட்டன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிநீர்வசதி எதுவும் இல்லாத கிராமங்களுக்கும், நீர் இருந்தும் குடிக்கத் தகுதியில்லாத நிலையிலுள்ள கிராமங்களுக்கும் கிணறு இருந்தும் நீரற்ற நிலைமையில் உள்ள கிராமங்களுக்கும் கிணறு இருந்தும் பொதுமக்களின் உரிமை யில்லாத கிராமங்களுக்கும், குடிநீர்க் கிணறுகள் 1கிலோ மீட்டர் தூரத்தில் அல்லது அதற்கு மேலுள்ள தூரத்தில் உள்ள கிராமங்கள் குடிநீர்ப் பற்றாக்குறை இல்லாத கிராமங்கள் என்ற வகையில் பிரித்துத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.


1977-78ல் குடிநீர் வசதி எதுவும் இல்லாத கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. குடிநீர் வாரியம் 343 கிராமங்களையும், ஒன்றிய ஆணையாளர்கள் 56 கிராமங்களையும் தேர்வு செய்து, இதில் 125கிராமங்களில் முதல் கட்டமாகக் குடிநீரி வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டது. 143 ஆழ்துளைக் கிணறுகளும், 130 கிணறுகளும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன.

1977-78ல் 143 ஆழ்துளைக் கிணறுகளும், 4 விசை இயந்திரமும், 136 கைஇயக்கு நீர் ஏற்றுக் குழாய்த் திட்டமும் வாரியத்தின் மூலம் இம்மாவட்டத்தில் முடித்து வைக்கப்பட்டன. ஒன்றிய அதிகாரிகளால் 130 கிணறுகள் அமைக்க ரூ 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் முற்றுப்பெற உள்ளன.

1977-78ல் 150 கைஇயக்கு நீர் ஏற்றுக் குழாய்கள் ரூ. 9,32,817 மதிப்பீட்டில் செய்யப்பட்டது. 1978-79ல் குடிநீர் வசதி சிறிதும் இல்லாத 274 கிராமங்களுக்கும், குடிநீர் இருந்தும் குடிக்க முடியாத நிலையில் உள்ள 18 கிராமங்களுக்கும் ரூ.36.79 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஆழ்துளைக்கிணறுகள் வெட்ட ரூ. 27,12,400 மதிப்பீட்டிலும், பொதுக் கிணறுகள் வெட்ட ரூ. 9,66,600 மதிப்பீட்டிலும் திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனால் பயனடையும் மக்களின் எண்ணிக்கை 53,782 ஆகும். இவ் வாரியம் 1155 கைப்பம்புகளை இம்மாவட்டத்தில் பராமரிப்பிற்காக எடுத்துக் கொண்டு செயலாற்றி வருகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.








தந்தை பெரியார்
நூற்றாண்டு
நிறைவு விழா

சென்னை
16,17-9-'79












பதிவு எண். M. 8676





# தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா.



சென்னை
20-9-79







